வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். நூல்வரிசை– 10

நீங்க நல்லா இருக்கணும்

[எம்.ஜி.ஆர் தத்துவப் பாடல்கள் ஆய்வு -1]

முனைவர் செ. இராஜேஸ்வரி, M.A., M.Phil., Ph.D.,



சந்திரோதயம் பதிப்பகம்
3/462 முதல் மாடி, கம்பர் 2வது தெரு, கம்பர் சாலை,
தினமணி நகர், மதுரை – 625 018, Mob. : 7010997639.

வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர் நூல்வரிசை – 10

நீங்க நல்லா இருக்கணும்

[எம்.ஜி.ஆர் தத்துவப் பாடல்கள் ஆய்வு -1]

***முனைவர் செ. இராஜேஸ்வரி,* M.A., M.Phil., Ph.D.,**

சந்திரோதயம் பதிப்பகம்

3/462 முதல் மாடி, கம்பர் 2வது தெரு, கம்பர் சாலை,
தினமணி நகர், மதுரை – 625 018, Mob.:7010997639.

நூல் விவரம்

நூல் வரிசை	:	வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர் நூல்வரிசை – 10
நூலின் பெயர்	:	நீங்க நல்லா இருக்கணும் [எம்.ஜி.ஆரின் தத்துவப் பாடல்கள் ஆய்வு -1]
ஆசிரியர்	:	முனைவர் செ. இராஜேஸ்வரி
முன் பின் முகப்பு பகுதி அமைப்பு	:	செ. மீனாட்சி
பதிப்பாளர்	:	சந்திரோதயம் பதிப்பகம் 3/462 முதல் மாடி, கம்பர் 2வது தெரு, கம்பர் சாலை, தினமணி நகர், மதுரை – 625 018 தொலைபேசி எண் : 7010997639
பதிப்பு	:	முதல் (மார்ச் 2019)
மொழி	:	தமிழ்
பக்கங்கள்	:	120
விலை	:	Rs. 200

\- - - - -

Book	:	Vetrithirumagan MGR Nool Varisai– 10
Title	:	Neenga Nallaa Irukkanum [MGR's Philosophy Songs –part 1]
Author	:	Dr. C. Rajeswari, M.A., M.Phil., Ph.D.,
Wrapper Design	:	C. Meenatchi
Publisher	:	Chandrothayam Pathippagam 3/462 First floor, Kambar 2nd Street Kambar Salai, Dinamani Nagar Madurai – 625 018 Phone : 7010997639
Month of Publish	:	April 2019
Pages	:	120
Price	:	Rs.200

மனித நேய சேவைக்காக பிரிட்டிஷ் **இளவரசர் சார்லசின்** சிறப்பு அழைப்பை பெற்று அவரோடு விருந்துண்ணும் உயர் தகுதி பெற்ற அண்ணா திமுகவின் முதல் தியாகி எம்.ஜி.ஆரின் உண்மை வாரிசு **சைதையார்** அவர்களுக்கு வாழ்த்துக்கள்.




செந்தமிழ்
நாட்டின்
சிறந்த
முதல்வராம்
செந்தமிழ் நாட்டின் சிறந்த முதல்வராம்
சந்தப் புரட்சித் தலைவராம் - அந்தண்
பஞ்சிராம சந்திர பூபன்பல் லாண்டு
தகவுடனே வாழ்க தழைத்து
மாண்புமிகு எம். ஜி. ஆர்.
சிறந்த பண்புடையவர்.
நேர்மையில் நின்று
பார்புகழப் பணிபுரிகின்றார்.
இவருடைய புகழ் ஓங்குக!
திருமுருக கிருபானந்த வாரியார்


அன்புக் காணிக்கை



மகாகவி பாரதியார்



கவிஞர் பாரதிதாசன்



கவிஞர்
முத்துலிங்கம்

நீதி, தர்மம், நாடு, மொழி,
உழைப்பு, தாய்மை என
எம்.ஜி.ஆர் பரப்ப விரும்பிய
நற்கருத்துக்களைத் தம்
பாடல்களில் அழகுற
அமைத்துத் தந்த
பாடலாசிரியர்களுக்கு
இந்நூல் எமது
அன்பு காணிக்கை.



கவிஞர் கண்ணதாசன்



கவிஞர் மருதகாசி



கவிஞர் புலமைபித்தன்



கவிஞர் வாலி



கவிஞர்
பட்டுக்கோட்டை
கல்யாணசுந்தரனார்

நூலாசிரியர் பற்றி



முனைவர். செ. இராஜேஸ்வரி மொழி பெயர்ப்பியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றவர். **புலமை, செந்தமிழ், வளர் தமிழ், ஓங்கு தமிழ் நா.வா.வின் ஆராய்ச்சி** போன்ற ஆய்விதழ்களில் ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட்டார். 1988 முதல் தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளார். *Indian Women–Changes and Challenges, Urban Theology, Vaigai Paripatal, Eco Vision and Mission, Neuro Ophthalmology Articles* போன்ற பல துறை சார்ந்த பனுவல்களை தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

1993இல் ஆசியவியல் ஆய்வியல் நிறுவனத்தில் இணைப் பதிப்பாசிரியராகப் [Associate editor] பணயாற்றினார். அப்போது ஜப்பானிய மொழியை தமிழில் கற்பது எளிது என்பதை அறிந்து அதற்கான நூல் உருவாக்கும் பணியில் ஜப்பானியப் பெண் யூகோ ஃபுகுரோயியுடன் இணைந்து செயல்பட்டார். அந்த நூல் இன்று மூன்று பாகங்களாக வெளி வந்துள்ளது. அங்கு வெளிநாட்டு மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். தமிழ் மாணவர்களுக்கு ஜப்பானிய மொழி இலக்கணம் கற்பித்தார். யுக்கோ சான் அம்மாணவர்களுக்கு ஒலிப்பயிற்சி அளித்தார்.

1986 முதல் சமயச் சொல் அகராதி, எபிரேயம் - தமிழ் அகராதி; கிரேக்கம் - தமிழ் அகராதி உருவாக்கத்திற்காக மக்கள் கல்வி அறக்கட்டளையின் இயக்குனர் மறை திரு.இராபின்சன் லேவி ஐயா அவர்களுடன் இணைந்து இருபது ஆண்டுகள் தீவிரமாகப் பணியாற்றினார். ஈரோடு மகளிர் கலை, அறிவியல் கல்லூரி, திருச்சி ஸ்ரீமத் ஆண்டவன் கலை, அறிவியல் கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரி போன்றவற்றில் சில ஆண்டுகள் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

2000இல் மதுரையில் அமெரிக்காவின் விஸ்கான்சின் பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். அப்போது வெளிநாட்டவருக்கு தமிழ் கற்பிக்க பாட நூல்

ஒன்றை உருவாக்கினார். அரவிந்த் கண் மருத்துவமனையில் மொழி பெயர்ப்பாளராகவும் தமிழ் ஆசிரியராகவும் பணியாற்றிய போது அங்கு வந்த வெளி மாநிலம் மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்த கண் மருத்துவர்களுக்குத் தமிழ் கற்பிக்க *Tamil for Non-Tamils* என்ற பாட நூலை உருவாக்கினார். இன்றும் அந்தப் பாட நூல் அங்குப் பயன்பாட்டில் உள்ளது. அது போல அங்குச் செவிலியர் பயிற்சி பெறும் இளம் பெண்களுக்கு ஆங்கிலம் கற்பிக்க *Easy English* என்ற ஆங்கிலப் பாட நூலை உருவாக்கினார். மக்கள் கண்காணிப்பகத்தில் வெளி மாநிலத்தவருக்கும் வெளி நாட்டவருக்கும் ஆங்கிலமும் தமிழும் கற்பித்தார்.

தமிழ் கற்கும் வெளிநாட்டு மாணவர்களுக்காக சென்ட்டர் ஃபார் லேங்குவேஜ் ஸ்டடீஸ் *[Centre for Language Studies]* என்ற பெயரில் தனி மையம் ஒன்றை அமைத்து அவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். திராவிட இயக்கப் பாரம்பரியத்தில் வந்ததனால் இவர் திமுக, அதிமுக வரலாறு குறித்து அறிந்திருந்தார். குறிப்பாக எம்.ஜி.ஆர் பற்றிய தகவல்களை நிறைய தொகுத்து வைத்திருந்தார். தமிழ்க் கலையும் பண்பாடும் பற்றிக் கற்பிக்கும்போது தமிழ்நாட்டில் மேடைத்தமிழ், மேடை நாடகம், திரைப்படம் ஆகியன அரசியலில் உருவாக்கிய விதம் பற்றியும் விளக்கினார். அப்போது எம்.ஜி.ஆர். அரசியல் தலைவரான விதம் குறித்து மேலும் அறிய அமெரிக்க மாணவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டினர். அவர்களை எம்.ஜி.ஆர். படங்களைப் பார்க்க திரையரங்குக்கு அழைத்துச் சென்றார். திரை அரங்கில் ரசிகர்கள் காட்டிய ஆர்வமும் ஆர்ப்பரிப்பும் கண்டு கேட்டு வியந்து போய் எம்.ஜி.ஆர். குறித்து சில மாணவர்களும் பேராசிரியை ஒருவரும் ஆராய்ச்சி செய்ய தொடங்கினர். அவர்களின் ஆர்வம் கண்டு எம்.ஜி.ஆர். தகவல் மையம் ஒன்றைத் தொடங்கி அவர் குறித்த நூல்களையும் அவரது படங்களையும் சேகரித்து வைத்தார். பின்னர் அமெரிக்க மாணவர்கள் இந்தியாவுக்கு வருவது குறைந்ததால் இத்திட்டம் தொடர்ந்து செயல்பட முடியவில்லை.

எம்.ஜி.ஆர் பற்றி ஒப்பனையும் ஒரிஜினலும் எம்.ஜி.ஆர். 100 என்ற தலைப்பில் விகடன்.காமில் முப்பது கட்டுரைகள் வெளியிட்டார். அதன் தொடர்ச்சியாக கனடாவில் இருந்து வரும் *www.tamilauthors.com* என்ற இணைய இதழில் தொடர்ந்து கட்டுரைகளை வெளியிட்டு வருகிறார்.

எம்.ஜி.ஆரின் ரசிகர் மன்றங்களின் தனித்தன்மை குறித்து ஒரு நூல் எழுதும் முயற்சியில் தகவல்களை திரட்டி வருகிறார். எம்.ஜி.ஆர். பற்றி நூறு நூல்கள் எழுத வேண்டும் என்பது இவர் இலட்சியம். தற்போது ஒன்பது நூல்கள் வெளியிட்டுள்ளார்.

*பத்தாவதாக **நீங்க நல்லா இருக்கணும் [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் -1]** என்ற இந்நூல் வெளிவந்துள்ளது.*

தஞ்சையைச் சேர்ந்த தமிழ் இலக்கியச் செம்மல் கவிஞர் முத்தமிழ் விரும்பியின் 'பூ மர நிழல், வறட்சியின் பாடல்கள் மற்றும் உன்னொடு உரையாடுதல்' என்ற கவிதை நூல்களை இவர் ஆங்கிலத்தில் "Shade of the Flowering Tree, Songs of Dryness, Speaking with You" என்று மொழி பெயர்த்துள்ளார். இந்நூல்களை சென்னை எமரால்டு பதிப்பகம் வெளியிட்டுள்ளது. இவர் எழுதிய சிறுகதைகள் 'அமராவதியின் காதல்' என்ற பெயரில் அமேசானில் வெளிவந்துள்ளது. இவர் எழுதி வரும் ஆய்வுக் கட்டுரைகள் நெருஞ்சி என்னும் இலக்கிய இதழில் வெளிவருகின்றன. தினகரன் ஜோதிட மலரில் இவர் எழுதிய "என்னோட ராசி நல்ல ராசி" என்ற தொடர் வந்து கொண்டிருக்கின்றது.

உள்ளடக்கம்



“சங்கே முழங்கு
எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு” (கலங்கரை விளக்கம்)

“சித்திரச் சோலைகளே
உம்மை நன்கு திருத்த இப் பாரினிலே (நான் ஏன் பிறந்தேன்)

“புதியதோர் உலகம் செய்வோம் -
கெட்டபோரிடும்உலகத்தைவேரோடுசாய்ப்போம்”(சந்திரோதயம்)

1. வெற்றிப் படிக்கட்டுகளான எம்.ஜி.ஆர். பாடல்கள்

எம்.ஜி.ஆர். தன்னுடைய படங்களில் பாடல்களின் சொற்களும் இசையும் எளிமையாக இருக்க வேண்டும் என்று விரும்பினார். அதற்கேற்ப கவிஞர்களிடம் சொல்லி பாட்டுக்களை எழுதி வாங்கினார். பின்னணி பாடும் பாடகர்களை அழைத்து பாட்டின் எந்த வரியை இரண்டு முறை பாடவேண்டும்; எங்கு அழுத்தம் கொடுத்துப் பாட வேண்டும் என்று விளக்கிச் சொல்லி அப்பாடல்களை தன் விருப்பத்திற்கும் நோக்கத்திற்கும் ஏற்ப பெற்றுக் கொண்டார். இயக்குனரிடம் அப்பாடல் காட்சியை படத்தில் எந்த இடத்தில் அமைக்க வேண்டும் என்பதையும் எடுத்துக் கூறினார். உடை அலங்கார நிபுணரிடம் அப்பாடலுக்கான உடைகளை தயார் செய்வது குறித்து விவாதித்தார். படத்தின் பின்னணிக் காட்சி அமைப்பது பற்றி பாட்டுக்கான செட் அமைப்பது பற்றி [ஆர்ட் டைரக்டர்] கலை இயக்குனரிடம் உட்கார்ந்து பேசி அந்த செட் அலங்காரம் பற்றி முடிவு செய்தார். இவ்வாறு பல துறைகளிலும் அவர் ஈடுபட்டு கவனம் செலுத்தி அக்கறையோடு உழைத்து ஒவ்வொரு பாடல் காட்சியையும் திட்டமிட்டு தன்னுடைய வெற்றிக்கான படிக்கட்டாக உருவாக்கினார்.

எம்.ஜி.ஆர். இயற்றித் தந்த பல்லவி

எம்.ஜி.ஆர். தன்னுடைய பாடலை பேசத் தெரிந்தவுடன் பாடக்கூடிய இரண்டு வயது குழந்தை பாட வேண்டும் என்று விரும்பினார். எனவே பல்லவியை எளிமையாக அமைக்கும்படி பாடலாசிரியரிடம் எடுத்துக் கூறினார். அடிமைப்பெண் (1969) படத்தில் முதன்முதலாக தாயை காணப்போகும் ஒரு இளைஞனுக்கு இருக்கக்கூடிய மன உணர்ச்சிகளைப் பாடலாக

வடித்துத் தரும்படி பாடலாசிரியர்களிடம் கேட்டபோது அவர்கள் எழுதிய பல்லவி எதுவும் அவருக்கு மன நிறைவை தரவில்லை. உடனே அவரே

‘தாய் இல்லாமல் நான் இல்லை

தானே எவரும் பிறந்ததில்லை

எனக்கொரு தாய் இருக்கின்றாள்

என்றும் என்னை காக்கின்றாள்’ என்று எழுதிக் கொடுத்தார். இன்றைக்கும் அந்த பல்லவி எல்லோருடைய மனதிலும் நிற்கின்றது. மேலும் ‘தாயில்லாமல் நானில்லை’ என்ற தலைப்பில் ஒரு புதிய படமும் கூட வந்துவிட்டது.

உற்சாகமும் தன்னம்பிக்கையும் ஊட்டிய பாடல்கள்

எம்.ஜி.ஆர். தனது படப்பாடல்களைக் கேட்பவர்களுக்கு உற்சாகமும் தன்னம்பிக்கையும் மனதில் தோன்ற வேண்டும். அவர்களுக்கு வாழ்க்கையில் விரக்தியோ தற்கொலை உணர்ச்சியோ விதிப்பயன் என்ற சலிப்போ ஏற்படக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார். எனவே பாடல்களின் பின்னணி இசையை மிகுந்த உற்சாகத்துடன் இருக்கும்படி தன்னுடைய இசையமைப்பாளர்களிடம் கேட்டுக்கொண்டார். அவருடைய சோகப் பாடல்களிலும் கூட பின்னணி இசை உற்சாகமாகவே இருப்பதைக் காணலாம். எம்.ஜி.ஆருடைய பாடல்கள் பொதுவாகவே ஐந்து கட்டையில் தொடங்கும் என்று சொல்வது வழக்கம். உற்சாகமாகத் தொடங்கும் பாடல்கள் கேட்பவருக்கு மனதில் ஊக்கத்தையும் ஆக்கப்பூர்வமான எண்ணங்களையும் உருவாக்கும். எனவே எம்.ஜி.ஆர் பாடல்களை உழைக்கும் வர்க்கத்தினரும் மற்றவர்களும் பாடிக்கொண்டே தங்கள் வேலைகளை செய்ய விரும்புவர். இந்தப் பாடல்களைப் பாடிக்கொண்டு வேலை செய்யும் போதும், பாடிக் கொண்டே பயணிக்கும்போதும் அவர்களுக்கு நல்ல பல கருத்துக்கள் மனதில் பதியும். உற்சாகமும் பெருகும். திராவிட இயக்க கருத்துக்கள் சுளுவாக மனதில் இறங்கிவிடும். மேலும் திருக்குறள் நாலடியார் போன்ற நீதி நூல்களின் கருத்துக்களைக் கூட எம்.ஜி.ஆர். எளிமையாக

தன்னுடைய பாடல்களில் மக்கள் மனதில் ஆழமாகப் பதியும் படி வழங்கியிருப்பார்.

சோர்வடைந்து இருக்கும் உள்ளத்தைச் சுறுசுறுப்பாகவும் தன்னம்பிக்கை ஊட்டவும் எம்.ஜி.ஆரின் தத்துவப் பாடல்கள் அல்லது தனிப் பாடல்கள் பெரிதும் பயன்பட்டன. உழைக்கும் வர்க்கத்தினருக்கு ஒளிமயமான எதிர்காலம் உண்டு என்பதை நம்பச் செய்யும் வகையில் அவருடைய பாடல்கள் எழுதப்பட்டன; உற்சாகமாகப் பாடப்பட்டன. காட்சி அமைப்புகளும் அதற்கேற்ப அமைந்தன. இந்தப் பாடல்கள் ஏழை எளியோருக்கும் பாடுபட்டவர்களுக்கும் உழைக்கும் வர்க்கத்தினருக்கும் மட்டுமானவை அல்ல; ஒரு சந்தர்ப்பத்தில் அவருக்கே அவருடைய பாடல்கள் மிகுந்த தன்னம்பிக்கையை கொடுத்தன.

எம்.ஜி.ஆரின் மனச்சோர்வைப் போக்கிய அவரது பாடல்கள்

1977 முதன் முறையாக தமிழகத்தின் முதலமைச்சராக எம்.ஜி.ஆர். அடுத்து வந்த பாராளுமன்றத் தேர்தலில் அவருடைய கூட்டணி தோல்வியடைந்ததால் இரண்டு ஆண்டுகளில் அவருடைய ஆட்சி கலைக்கப்பட்டது. அப்போது எம்.ஜி.ஆர். மிகுந்த மன வருத்தத்தில் இருந்தார். மறு தேர்தல் அறிவிக்கப்பட்ட போது மக்களைச் சந்தித்து நான் என்ன குற்றம் செய்தேன் என்று அவர் கேட்டார். அப்போது ஒரு அதிமுக தொண்டரின் திருமண விழாவிற்கு வந்திருந்த எம்.ஜி.ஆர். அங்கு விஜய ரமணி என்பவரின் பாட்டுக் கச்சேரியைக் கேட்க முதல் வரிசையில் வந்து உட்கார்ந்தார். எம்.ஜி.ஆர். வந்து அமர்ந்ததும் அந்தக் காலகட்ட அரசியல் சூழ்நிலையைப் புரிந்து கொண்டிருந்த விஜய் ரமணி எம்.ஜி.ஆர். படத்தில் இடம்பெற்ற

“என்னதான் நடக்கும் நடக்கட்டுமே

இருட்டினில் நீதி மறையட்டுமே

தன்னாலே வெளிவரும் தயங்காதே

ஒரு தலைவன் இருக்கிறான் கலங்காதே

பின்னாலே தெரிவது அடிச்சுவடு

முன்னாலே இருப்பது அவன் வீடு

நடுவினிலே நீ விளையாடு

நல்லதை நினைத்தே நீ போராடு

நல்லதை நினைத்தே போராடு” *என்ற பாட்டை பாடினார் அதை கேட்டதும் எம்.ஜி.ஆர். முகத்தில் ஒரு புன்னகை தோன்றியது. எம்.ஜி.ஆர். சற்று நிமிர்ந்து உட்கார்ந்து தன்னுடைய வாழ்க்கைச் சூழ்நிலைக்கு ஏற்ற ஒரு பாடலை விஜய் ரமணி பாடுகிறார் என்று ரசித்து கேட்டுக் கொண்டிருந்தார். அவருடைய சிரித்த முகத்தை பார்த்த விஜய் ரமணி அடுத்து*

“அங்கே சிரிப்பவர்கள் சிரிக்கட்டும்

அது ஆணவச் சிரிப்பு இங்கே நீ சிரிக்கும்

புன் சிரிப்போ ஆனந்த சிரிப்பு

நல்ல தீர்ப்பை உலகம் சொல்லும் நாள் வரும்போது

அன்று சிரிப்பவர் யார் அழுபவர் யார் தெரியும் அப்போது” *என்ற பாட்டைப் பாடினார் உடனே எம்.ஜி.ஆருக்கு உற்சாகம், ஊற்றெடுத்து விட்டது. மிகுந்த மகிழ்ச்சியோடு இந்தப் பாடல்களைக் கேட்டுக் கொண்டிருந்த எம்.ஜி.ஆருக்கு ‘நிச்சயமாக நமக்கு மக்கள் நல்ல தீர்ப்பு அளிப்பார்கள்; மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்பதனால் அடுத்து வரும் தேர்தலில் மக்கள் நம்மை தாங்கிப் பிடிப்பது உறுதி; சட்டமன்ற தேர்தலில் நம்மை மக்கள் கைவிட மாட்டார்கள்’ என்ற நம்பிக்கை பிறந்து விட்டது. மகிழ்ச்சியான மனநிலையுடன் எம்.ஜி.ஆர். எழுந்து மேடைக்குப் போனார்.*

மேடையில் விஜய ரமணியை தட்டிக்கொடுத்து பாராட்டி ‘உங்கள் பாட்டால் என் கவலை தீர்ந்தது’ என்று சொல்லி தன் கையில் கட்டியிருந்த விலைமிகுந்த ரோலேக்ஸ் வாட்சை கழற்றி அவர் கையில் அணிவித்தார். ஆக நாம் விதைத்த விதை நமக்கு நல்ல பலனை தரும் என்பதனால் எம்.ஜி.ஆர். விதைத்த உற்சாக விதை அவருக்கே ஒரு உற்சாக பலனை தந்தது. அவருக்குத் தரும் உற்சாகத்தை அவருடைய ரசிகர்களுக்கும் தந்தது நாடறிந்த உண்மை.

காங்கிரஸ் ஆட்சியை விமர்சித்த பாடல்கள்

எம்.ஜி.ஆர். தன் படங்களில் பாடல்களை அவர் ஒரு பிரச்சார கருவியாகவே பயன்படுத்தினார். திமுகவில் இருந்த காலத்தில் காங்கிரஸின் கொள்கைகளை எதிர்த்தும் காங்கிரஸ் ஆட்சியின் அவலங்களை எடுத்துச் சொல்லியும் அக்கட்சியில் மக்கள் படும் பாடுகளை விவரித்தும் பாடல்களைப் பாடினார். மலைக்கள்ளன் (1954) படத்தில் அவர் காங்கிரஸ் ஆட்சியை,

எத்தனை காலம் தான் ஏமாற்றுவார்

இந்த நாட்டிலே ; நம் நாட்டிலே

சொந்த நாட்டிலே

என்று அவர் பாடிய பாடல் பட்டி தொட்டி எங்கும் ஒலித்தது. அக்காலகட்டத்தில் அவர் தான் ஒரு திமுககாரன் அதாவது கருப்பு சட்டைக்காரன் என்பதை உணர்த்தும் வகையில், தத்துவப் பாடல்களை தனிப் பாடல்களைப்



பாடும்போது கருப்புச்சட்டை அணிந்து நடித்தார். எம்.ஜி.ஆர். தான் ஒரு திமுக.காரன் என்பதையும் தன்னுடைய கொள்கை திமுகவின் கொள்கை என்பதையும் ஒவ்வொரு படத்திலும் பாட்டிலும் காட்சியமைப்பிலும் எடுத்துச் சொல்லி வந்தார்.

திமுகவின் சிறப்புரைத்த எம்.ஜி.ஆர். பாடல்கள்

திமுக 1967ல் ஆட்சிக்கு வந்த பிறகு திமுக ஆட்சியின் சிறப்புகளை அதனால் மக்கள் அடைந்த நற்பலன்களை தன்னுடைய பாடல்களில் எடுத்துரைத்தார். எங்கள் தங்கம், ஒளி விளக்கு, ஒரு தாய் மக்கள் ஆகிய படங்களில் எம்.ஜி.ஆர். பாடிய தனிப்பாடல்கள் மட்டுமல்லாது இவரும் ஜெயலலிதாவும் பாடிய ஜோடி பாடல்கள் சிலவும் திமுகவைப் புகழும் வகையில் அமைந்தன.

அண்ணா திமுக வளர்ச்சிக்கு எம்.ஜி.ஆர். படப் பாடல்கள்

1972ல் எம்.ஜி.ஆர் அண்ணா திமுகவை தொடங்கியவுடன் தன்னுடைய கட்சி ஆரம்பிக்கப்பட்டதன் காரணத்தை தன் பாடல்களின் மூலமாக மக்களுக்கு எடுத்துரைத்தார். நேற்று இன்று நாளை படத்தில் அண்ணா திமுக வின் தோற்றத்திற்கான காரணம் திமுக செய்துவரும் ஊழல்களையும் அவர் சில சம்பவங்களை எடுத்துச் சொல்லி பாடலாசிரியரை எழுதச்சொல்லி பாடி நடித்து படத்தில் சேர்த்தார். எம்.ஜி.ஆர். தன்னுடைய பாடல்களை தன்னுடைய அரசியல் சார்புக்கு ஏற்ற வகையில் பிரச்சாரக் கருவியாக பயன்படுத்தி கொண்டார்.

எம்.ஜி.ஆர். அரசியல் தவிர தமிழர் வாழ்வியல் மேம்பாட்டுக்கும் தனது பாடல்களைப் பயன்படுத்தினார். தனிமனித வாழ்வில் தனிமனித ஒழுக்கத்தையும் தமிழ்ப் பண்பாட்டையும் காப்பதற்காகவும் பாடல்களைப் பயன்படுத்தினார். தமிழகத்தின் பாரம்பரியச் சின்னமாக, பாரம்பரியத்தின் தொடர்ச்சியாகப் புரிந்து கொள்ளப்பட்ட எம்.ஜி.ஆர். தன்னுடைய பாடல்களில் பல நல்ல உயரிய கருத்துக்களை புகுத்தி அவற்றை தன் படம் பார்க்க வந்த ரசிகர்களிடமும் தனது பாட்டுகளை விரும்பிக் கேட்கும் நேயர்களிடமும் பண்பாட்டுப் புரட்சியை ஏற்படுத்தினார்.

தனி மனித ஒழுக்கம் மற்றும் பண்பாடு

எம்.ஜி.ஆர். பாடல்களில், தமிழகத்தின் பண்பாடு, தனி மனித ஒழுக்கம், வர்க்க பேதம் கூடாது போன்ற கருத்துக்களை எல்லாம் தெளிவாக அந்தந்த படத்தின் கதைக்கு ஏற்றபடி பாடல்களாக எழுதப் பெற்று அவை பாட்டு காட்சிகளில் பொருத்தமாக இடம் பெற்றன. அவருடைய வாழ்க்கைத் தத்துவம், சமூக மறுமலர்ச்சியின் அவசியம், உழைப்பின் மேன்மை, அண்ணாவின் புகழ், தாய்மையின் சிறப்பு, தன்மானம், மனிதநேயம், தமிழ் மொழியின் சிறப்பு, தமிழினத்திற்கு உண்டான பெருமை, இயேசு, புத்தன், காந்தி போன்றவர்களின் பெருமைகள், கடவுளின் தன்மை சத்தியம் தர்மம் போன்ற பண்புகள் காக்கப்பட வேண்டிய அவசியம் பணம் செல்வம் இளமை போன்றவற்றின் நிலையாமைத் தத்துவம், எதிரிகளின் மீதான குற்றச்சாட்டுகள், அவர்களிடம் விடும் சவால், அந்த எதிர்ப்புக்கான காரணங்கள், தாய் நாட்டின் மேன்மை, சிறுவர்களுக்கு அறிவுரை போன்றவற்றை உள்ளடக்கி அவருடைய தனிப்பாடல்களை அமைத்தார்.

அதிமுக வெற்றிக்கு உதவிய பாடல்கள்

அண்ணா திமுக ஆரம்பிக்கப்பட்ட 6 மாதத்தில் திண்டுக்கல்லில் இடைத்தேர்தல் வந்தபோது அந்த தேர்தல் பிரச்சாரத்தில் உலகம் சுற்றும் வாலிபன் படத்தில்

நமது வெற்றியை நாளை சரித்திரம் சொல்லும்

இப்படை தோற்கின் எப்படி வெல்லும்

நீதிக்கு இது ஒரு போராட்டம் இதை

நிச்சயம் உலகம் பாராட்டும்

என்ற பாடல் தொண்டர்களை உற்சாகப்படுத்தியது. எம்.ஜி.ஆரின் திரைப்படங்களில் இடம்பெற்ற தனிப் பாடல்கள அனைத்து ரசிகர்களின் உள்ளத்தில் நம்பிக்கையை விதைத்தன. திரைப்படங்களில் எம்.ஜி.ஆர். அடையும் வெற்றி அரசியலிலும் கிடைக்கும் என்று இப்பாடல்களைக் கேட்ட ரசிகர்களும் தொண்டர்களும் ஆழமாக நம்பினர்.



2. எம்.ஜி.ஆரின் சமூக சிந்தனைப் பாடல் வகைகள்

எம்.ஜி.ஆர். தனது படங்களில் ஒரு படத்திற்கு குறைந்தபட்சம் ஒரு பாட்டாவது சமூகக் கடமை மற்றும் சமூகப் பொறுப்புணர்ச்சி சமூகச் சிந்தனை சமூகத்தின் அவலநிலை அதனை மாற்றும் வழிகள் போன்றவற்றை உள்ளடக்கமாகக் கொண்டு பாடியிருப்பார். அவருடைய சமூகச் சிந்தனைப் பாடல்களை காட்சி அமைப்பில் ஐந்தாக வகைப்படுத்தலாம். [கருத்து ரீதியாக வேறொரு வகைப்பாடு செய்யலாம்].

1. எம்.ஜி.ஆர். தனியாகப் பாடியவை;

2. ஒரு தோழருடன் பாடியவை;

3. குழுவில் ஒருவராக இருந்து பாடியவை;

4. இணையுடன் சேர்ந்து ஜோடி பாடலாகப் பாடியவை .

5. சிறுவன்/சிறுமி/சிறுவர்களுடன் இணைந்து அவர்களுக்குப் பாடியவை

1. தனிப் பாடல் வகை

எம்.ஜி.ஆர். மட்டும் பாடுகின்ற பாடல் காட்சிகள் இரு வகைப்படும்.

1. *தனியாகப் பாடுவது*
2. *பின்னணியில் பாடல் கேட்பது.*

எம்.ஜி.ஆர். பாடுகின்ற சமூகசிந்தனைப் பாடல்களில் அவர் தனியாகப் பாடுகின்ற பாடலும் உண்டு. எம்.ஜி.ஆர்.

தனியாகப் பாடுவதாக அமைந்த பாடலுக்கு ஒரு எடுத்துக்காட்டு. தர்மம் தலை காக்கும் படத்தில் வரும்

தர்மம் தலை காக்கும்

தக்க சமயத்தில் உயிர் காக்கும்

கூட இருந்தே குழி பறித்தாலும்

கொடுத்தது காத்து நிக்கும்... *(தர்மம் தலைகாக்கும்),*

எம்.ஜி.ஆர். பாடுவதாக அமையாமல் பின்னணியில் கேட்கும் பாடலுக்கு எடுத்துக்காட்டு :

"மேகங்கள் திரண்டு வந்தால்

மழை என சொல்வதுண்டு

மனிதர்கள் திருந்தி வந்தால்

அதை பிழை எனக் கொள்வதுண்டோ" *(நான் ஆணையிட்டால்)*

எம்.ஜி.ஆர். தனியாக வந்து பாடும் பாடல்கலை இரு வகையாகப் பகுக்கலாம்.

1. *கதாநாயகன் தோற்றத்தில்*
2. *மாறு வேடத்தில்*

கதாநாயகன் தோற்றத்தில் வந்து பாடுவதற்கு ஓர் எடுத்துக்காட்டு சந்திரோதயம் படத்தில் வரும் "புத்தன் ஏசு காந்தி பிறந்தது பூமயில் எதற்காக" என்ற பாடலை குறிப்பிடலாம்.

எம்.ஜி.ஆர். மாறு வேடத்தில் வந்து பாடும் பாடலுக்கு இதய வீணையில் பெண்களின் சிறப்பை உணர்த்தும் பின் வரும் பாடலைக் குறிப்பிடலாம்.

திருநிறைசெல்வி மங்கையர்க்கரசி

திருமணம் கொண்டாள் இனிதாக

என் இரு விழி போலே இருவரும் இன்று

இல்லறம் காணட்டும் நலமாக....

எங்கள் வானத்து வெண்ணிலவாம்

இவள் இன்னொரு வீட்டுக்கு விளக்கானால்

எங்கள் குலம் வளர் கண்மணியாம்,

இவள் இன்னொரு குடும்பத்தின் கண் ஆனாள்

தாய் வழி வந்த நாணமும் மானமும்

தன் வழி கொண்டு நடப்பவளாம்

கோயிலில் இல்லை கும்பிடும் தெய்வம்

கொண்டவன் என்றே நினைப்பவளாம்" (இதய வீணை).

இன்னொரு எடுத்துக்காட்டு.

"தாயத்து தாயத்து -

பலர் சந்தேகம் தீர்ந்துவிட சந்தோஷமான ஒரு

சங்கதியை சொல்ல வரும் தாயத்து -

சில சண்டாளர் வேலைகளை ஜனங்களின் மத்தியிலே

தண்டோரா போட வரும் தாயத்து

அய்யா தாயத்து தாயத்து

அம்மா தாயத்து தாயத்து" *(மகாதேவி).*

பாடல் சூழல்கள்

சொந்த உருவத்தில் வந்து கதாநாயகன் பாடும் பாடல்களில் அவற்றிற்கான சூழல், பெரும்பாலும் இழப்பு, இயலாமை, விழிப்புணர்வு ஊட்டல், நினைந்து இன்புறுதல் போன்றவை ஆகும்.

காதலியை **இழந்து***விட்டோமோ என்ற வருத்தத்தில் பாடும் பாடல்:*

"நடக்கும் என்பார் நடக்காது

நடக்காதென்பார் நடந்துவிடும்

கிடைக்கும் என்பார் கிடைக்காது

கிடைக்காதென்பார் கிடைத்துவிடும் *" (பணக்கார குடும்பம்),*

இயலாமையின் *உச்சத்தில் விரக்தியில் பாடும் பாடல்:,*

"அவனுக்கென்ன தூங்கிவிட்டான்

அகப்பட்டவன் நான் அல்லவா

ஐயிரண்டு மாதத்திலே கைகளிலே போட்டு விட்டான்

கைகளிலே போட்டு விட்டான்" *(பெரிய இடத்துப்பெண்),*

விழிப்புணர்வூட்டல்

"கடவுள் தந்த பாடம் எனத் தொடங்கும் பாடலில்

நடப்பது யாவும் விதிப்படி என்றால்

வேதனை எப்படி தீரும்

உடைப்பதை உடைத்து .

--

உலகம் உருப்படி ஆகும் *[நாடோடி)*

ஒரு கூட்டத்தினர் மத்தியில் அறிவார்ந்த கருத்துகளைச் சொல்லி விழிப்புணர்வைத் தூண்டுதலுக்கு எடுத்துக்காட்டு

"ஏன் என்ற கேள்வி

இங்கு கேட்காமல் வாழ்க்கை இல்லை

நான் என்ற எண்ணம்

கொண்ட மனிதன் வாழ்ந்ததில்லை

பகுத்தறிவு பிறந்ததெல்லாம்

கேள்விகள் கேட்டதனாலே

உரிமைகளைப் பெறுவதெல்லாம்

உணர்ச்சிகள் உள்ளதனாலே" *(ஆயிரத்தில் ஒருவன்),*

ஏதேனும் தொழில் செய்யும் சூழலில் பாடுவதற்கு பின் வரும் பாட்டை எடுத்துக் காட்டலாம்.

"உழைக்கும் கைகளே உருவாக்கும் கைகளே

உலகை புது முறையில் உண்டாக்கும் கைகளே (உழைக்கும்)

ஆற்று நீரை தேக்கி வைத்து

அணைகள் கட்டும் கைகளே

ஆண்கள் பெண்கள் மானம் காக்க

ஆடை தந்த கைகளே

சேற்றில் ஓடி நாற்று நட்டு

களை எடுக்கும் கைகளே

செக்கர் வானம் போல என்றும்

சிவந்து நிற்கும் கைகள்

எங்கள் கைகளே” *(தனிப்பிறவி)*

என்று பல வகைப்படுகின்றன.

மாறு வேடத்தில் வந்து பாடுதல்

எம்.ஜி.ஆர். மாறுவேடத்தில் வந்து தனியாக பாட்டுப் பாடும் சூழல்கள் பெரும்பாலும் துப்பறியும் முயற்சியில் உண்மையைக் கண்டறியும் பணியில் ஈடுபட்டிருக்கும் போது காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக சில பாடல்கள்:

“போயும் போயும் மனிதனுக்கிந்த

புத்தியைக் கொடுத்தானே இறைவன்

புத்தியைக் கொடுத்தானே அதில்

பொய்யும் புரட்டும் திருட்டும் கலந்து

பூமியைக் கெடுத்தானே மனிதன்

பூமியைக் கெடுத்தானே” *(தாய் சொல்லைத் தட்டாதே),*

“உண்டாக்கி விட்டவர்கள் ரெண்டு பேரு - இங்கே

கொண்டு வந்து போட்டவர்கள் நாலு பேரு

கொண்டாடும் போது ஒரு நூறு பேரு - உயிர்

கூடு விட்டுப் போன பின்னே கூட யாரு?” *(முகராசி)*

பின்னணி குரலில் அமைந்த தனிப் பாடல்

கதாபாத்திரத்தின் குரலில் ஒலிக்காமல் பின்னணி குரலில் பாடல்கள் ஒலிக்கும் போதும் இரண்டு வகையான தன்மையைக் காண்கின்றோம்.

பின்னணி குரல் வகைகள்

1. சமூகத்தின் குரல்

2. மனதின் குரல்.

எதிர்பாராத செயல்கள் நடந்து ஏமாற்றமும் துக்கமும் பீறிடும் போது பிரச்சனைகளுக்கான காரணத்தை ஆராயும் நோக்கில் சமூகத்தின் குரலாகப் பாட்டு பின்னணியில் ஒலிக்கிறது. இதே சூழ்நிலையில் சில படங்களில் தனது மனதின் குரலாக வேதனைக்கான காரணத்தை ஆராய்ந்து தீர்வை தேடுவதாகப் பின்னணிப் பாடல் ஒலிக்கிறது. இவ்வாறு இரண்டு வகையில் பின்னணி பாடல்கள் ஒலிக்க காண்கின்றோம்.

சமூகத்தின் குரல்

ஆனந்த ஜோதி படத்தில் எம்.ஜி.ஆர். மீது கொலைப்பழி விழுந்ததும் அவர் மறைந்து வாழும் நாட்களில் ஒரு பாடல் சமூகத்தின் குரலாக பின்னணியில் ஒலிக்கும்.



"கடவுள் இருக்கின்றார் அது

கண்ணுக்கு தெரிகின்றதா

காற்றில் ஆடுகின்றார் - அது உன்

கண்ணுக்குத் தெரிகின்றதா ?

கண்ணுக்குத் தெரிகின்றதா?

புத்தன் மறைந்துவிட்டான் –அவன்

போதனை மறைகின்றதா?

சத்தியம் தோற்றதுண்டா உலகில்

தர்மம் அழிந்ததுண்டா? இந்த

சரித்திரம் முழுவதும் தெரிந்த பின்னாலும்

சங்கடம் வருகின்றதா? சங்கடம் வருகின்றதா?"

என்ற பாடல் சத்தியமும் தர்மமும் என்றும் அழியாது என்ற நம்பிக்கையை கொடுக்கும் வகையில் சமூகத்தின் குரலாக பின்னணியில் ஒலிக்கிறது.

மனதின் குரல்

சங்கே முழங்கு படத்தில் எம்.ஜி.ஆர். தனது மீது கொலைப் பழி சுமத்தப்பட்டு ஊரை விட்டு ரயிலில் புறப்பட்டு வரும்போது தன்னால் தன் தந்தைக்கு இறுதிக்கடன் செய்ய இயலவில்லையே என வருந்தும் சூழலில் அவர் மனம் வருந்தி பாடுவதாக அமைந்த 'அந்த நாலு பேருக்கு நன்றி', என்ற பின்னணிப் பாடலை எடுத்துக்காட்டலாம்.

"உள்ளத்தில்இருப்பதெல்லாம்,

சொல்ல ஓர் வார்த்தையில்லை,

நான் ஊமையாய் பிறக்கவில்லை,

உணர்ச்சியோ மறையவில்லை,

என் தங்கமே உனது மேனி,

தாங்கி நான் சுமந்து செல்ல,

எனக்கொரு பந்தமில்லை,

எவருக்கோ இறைவன் தந்தான்,

நாலு பேருக்கு நன்றி,

அந்த நாலு பேருக்கு நன்றி,

தாய் இல்லாத அனாதைக்கெல்லாம்,

தோள் கொடுத்து தூக்கி செல்லும்,

நாலு பேருக்கு நன்றி,

அந்த நாலு பேருக்கு நன்றி," *(சங்கே முழங்கு).*

2. தோழருடன் இணைந்து பாடிய பாடல்

எம்.ஜி.ஆர். இன்னொருவருடன் இணைந்து பாடிய பாடல்களில் நண்பர்களாக வருவோருடன் இணைந்து பாடுவார். இந்த நண்பர்கள் பெரும்பாலும் நகைச்சுவை நாயகர்கள் ஆகவே இருப்பதுண்டு. சில பாட்டுக்காட்சிகளில் துணை நடிகர் அல்லது குணச்சித்திர நடிகர்களுடன் இணைந்து பாடுவதாகப் பாடல்கள் அமைந்துள்ளன.

இருவராகப் பாடும் பாடல்களில் நண்பராக முத்துராமன், வி.கே.ராமசாமி போன்ற குணச்சித்திர நடிகர்கள் இடம்பெறுகின்றனர். சில பாடல்களில் நாகேஷ், கே ஏ தங்கவேலு, சந்திரபாபு போன்ற நகைச்சுவை நடிகர்கள் இடம்பெறுகின்றனர். எடுத்துக்காட்டாக,

"மாறாதையா மாறாது

மனமும் குணமும் மாறாது

துறவியின் வாழ்வில் துயரம் வந்தாலும்

தூய தங்கம் தீயில் வெந்தாலும்

காட்டுப் புலியை வீட்டில் வச்சாலும்

கறியும் சோறும் கலந்து வச்சாலும்

குரங்கு கையில் மாலையைக் கொடுத்து

கோபுரத்தின் மேலே நிக்க வச்சாலும்

மாறாதையா மாறாது

மனமும் குணமும் மாறாது” *(குடும்பத்தலைவன்)*

குழுவினருடன் பாடும் பாடல்

எம்.ஜி.ஆர். குழுவில் ஒருவராக இருந்து தலைமையேற்று எம்.ஜி.ஆர். பாடும் பாடல்களில் சில படங்களில் குழுவினர் பங்கேற்பு ஹம்மிங் அல்லது பல்லவியை திரும்பிப் பாடுவது என்ற அளவில் அமைந்திருக்கும் வேறு சில பாடல்களில் அவர்கள் அமைதியாகப் பங்கேற்றிருப்பர். சான்றாகப் பின்வரும் பாடலைச் சுட்டலாம்.

“அதோ அந்த பறவை போல வாழ வேண்டும்

இதோ இந்த அலைகள் போல ஆட வேண்டும்

ஒரே வானிலே ஒரே மண்ணிலே

ஒரே கீதம் உரிமை கீதம் பாடுவோம்

காற்று நம்மை அடிமையென்று விலகவில்லையே

கடல் நீரும் அடிமையென்று சுடுவதில்லையே

காலம் நம்மை விட்டு விட்டு நடப்பதில்லையே

காதல் பாசம் தாய்மை நம்மை மறப்பதில்லையே” *(ஆயிரத்தில் ஒருவன்)*

3. ஜோடியாகப் பாடும் சமூகச் சிந்தனைப் பாடல்

எம்.ஜி.ஆர். தன் ஜோடியுடன் இணைந்து பாடும் சமூக சிந்தனைப் பாடல்களில் இரண்டு வகை உண்டு.

3.1. படத்தின் தனது கதாபாத்திரமாகத் தோன்றிப் பாடுவது

3.2. ஜோடியுடன், மாறு வேடத்தில் வந்து பாடும் பாடல்

3.1. எ-டு பொங்கல் விழாவில் எம்.ஜி.ஆரும் ஜெயலலிதாவும் பாடுவதாக அமைந்த பாடல்

“இங்கு நல்லாயிருக்கனும் எல்லாரும்

நலம் எல்லாம் இருக்கனும் எந்நாளும்

நாம ஒன்னோடு ஒன்னாக சேரனும்

இந்த மண்ணெல்லாம் பொன்னாக மாறனும்” *(ஒரு தாய் மக்கள்),*

3.2. தன் உருவத்தை மறைத்து மாற்று உருவத்தில் வந்து பாடும் ஜோடிப்பாடல்.
மதுரை வீரன், ராஜா தேசிங்கு, ஒளிவிளக்கு போன்ற படங்களில் எம்.ஜி.ஆர். பத்மினி மற்றும் ஜெயலலிதாவுடன் மாறு வேடத்தில் தோன்றி பாடும் பாடல்களைச் சுட்டலாம்

“ஏச்சு பிழைக்கும் தொழிலே சரிதானா

எண்ணி ப் பாருங்கள்

எண்ணிப் பாருங்க – ஐயா

எண்ணி பாருங்க

நாச்சியப்பா சங்கிலி கருப்பா

பூச்சி காட்டும் போக்கிரி சுப்பா

மூட்டை அடிச்சா உனையே விடுவானா?

நெனச்சி பாருங்க - நல்லா

நெனச்சி பாருங்க” *(மதுரை வீரன்).*

எம்.ஜி.ஆர். தனது கதாபாத்திர உருவத்தோடு வந்து பாடும் குழுப் பாடல்களில் பெரும்பாலும் வெற்றி சூழ்நிலை அல்லது வேறு மகிழ்ச்சியான சூழ்நிலைகளில் அமைந்த பாடல்களாக உள்ளன. ஆயிரத்தில் ஒருவன் படத்தில் வரும் அதோ அந்த பறவை போல் ஆட வேண்டும் என்ற பாடல் ஒரு தாய் மக்களில் வரும் ‘இங்கு நல்லாயிருக்கனும் எல்லோரும்’ போன்ற பாடல்களை எடுத்துக்காட்டலாம்.

மாறுவேடமிட்டு வந்து பாடும் பாடல்கள் மேடை கூத்தாகவோ அல்லது பகைவர் முன்பு அவர்களுக்கு புத்திமதி சொல்வதாகவோ அமைந்திருப்பது வழக்கம். என் அண்ணன் படத்தில் வரும்

“தொந்தி கணபதிக்கும் சுப்பிரமணியனுக்கும்

அந்த பரமனுக்கும் கோடி கோடி ஆ...ஆ...ஆ

சக்தி உமையவட்கும் சாமுண்டி பைரவிக்கும்

பக்தியுடன் தொடுத்தேன் பாடி பாடி ஆ...ஆ...ஆ

ஆயிரம் எண்ணம் கொண்டு மானிட ஜாதி தன்னை

ஆண்டவன் படைத்தது அப்போ அப்போ – அதில்

தாயுடன் வந்த எண்ணம்

தான் கொண்ட சொந்த எண்ணம்

காலத்தில் மாறுவது இப்போ இப்போ” *(என் அண்ணன்)*

ஒலி விளக்கு படத்தில் குறவன் குறத்தி வேடத்தில் எம் ஜி ஆறும் ஜெயலலிதாவும் பாடும் பாடல்:,

“நாங்க புதுசா, கட்டிக்கிட்ட ஜோடிதானுங்க

நல்ல பாட்டு படிக்கும், வானம் பாடிதானுங்க

கண்ணாலே ரகசியம் பேசிக்கிட்டோம்

நாங்க ரெண்டு பேரும்

காதல் வலை வீசிப்புட்டோம்

சிக்கனமா கண்ணாலம் முடிச்சிக்கிட்டோம்

அதை சீர்திருத்த முறையில நடத்திப்புட்டோம்” *(ஒளிவிளக்கு).*

*4. **குழுவினருடன் பாடும் பாடல்***

எம்.ஜி.ஆர். ஒரு குழுவின் தலைவராக அடுத்து ஒரு குழுவில் முக்கியமானவராக, ஒரு கூட்டத்தினர் மத்தியில் இவர் மட்டுமே பாடுவோராகவும் மற்றவர்கள் பார்வையாளராகவும் வந்து அந்த ஊர் அநியாயம், அந்த

காலகட்டத்தில் நடக்கும் கொடுமை எனப் பொதுவான கருத்துக்களை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் வகையில் இப்பாட்டு வகைகள் அமைந்துள்ளன

“சித்திரச் சோலைகளே!

உமை நன்கு திருத்த இப்பாரினிலே

முன்னர் எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தனரோ!

உங்கள் வேரினிலே

உங்கள் வேரினிலே

தாமரை பூத்த தடாகங்களே

உமைதந்த இப்பாரினிலேமுன்பு

எத்தனை தோழர்கள்

ரத்தம் சொரிந்தனரோ

உங்கள் வேரினிலே ” *(நான் ஏன் பிறந்தேன்).*

5. எம்.ஜி.ஆர். பாடும் சிறுவர் பாடல்கள்

எம்.ஜி.ஆர். சிறுவர்களைத் தனது ரசிகர்களாக்குவதில் கண்ணும் கருத்துமாகச் செயல்பட்டார். அவர்கள் தம் பாடல்களைப் பாட வேண்டும் என்ற நோக்கத்துடன் எளிய சொற்களில் எழுதும்படி பாடலாசிரியர்களிடம் கேட்டுக் கொண்டார். அவர்களையும் தம் படத்தில் தன்னுடன் நடிக்கும் சக கலைஞர்களாக்கி அவர்களுடன் இணைந்து பாடல்காட்சிகளில் நடித்தார். எம்.ஜி.ஆர். பாடிய சிறுவர் பாடல்களை:

5.1. தனது பிள்ளைக்காகப் பாடியவை

“வெள்ளி நிலா முற்றத்திலே

விளக்கெரிய விளக்கெரிய

உள்ளமெனும் தாமரையில்

உனை எடுத்து கொண்டுவந்தேன்

வேலெடுக்கும் மரபிலே வீரம் செறிந்த மண்ணிலே

பால் குடிக்க வந்தவனே நடையை காட்டு

வரும் பகைவர்களை வென்று விடும் படையை காட்டு

வெள்ளி நிலா முற்றத்திலே" *(வேட்டைக்காரன்),*

5.2. அடுத்தவர் பிள்ளைக்காகப் பாடியவை

"சின்னப்பயலே சின்னப்பயலே

சேதி கேளடா!

நான் சொல்லப் போற வார்த்தையை நல்லா

எண்ணிப் பாரடா நீ எண்ணிப் பாரடா!

ஆளும் வளரணும் அறிவும் வளரணும்

அது தாண்டா வளர்ச்சி!

ஆசையோடு ஈன்றவளுக்கு அதுவே நீ

தரும் மகிழ்ச்சி!" *(அரசிளங்குமரி),*

5.3. பொதுவாக சிறுவர்களுக்கு அறிவுரை கூறிப் பாடிய பாடல்கள்

"சிரித்து வாழ வேண்டும்

பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே

உழைத்து வாழ வேண்டும்

பிறர் உழைப்பில் வாழ்ந்திடாதே

அன்பில் வாழும் இதயம் தன்னை

தெய்வம் கண்டால் வணங்கும்

ஆசை இல்லா மனிதர் தம்மை

துன்பம் எங்கே நெருங்கும்" *(உலகம் சுற்றும் வாலிபன்).*

5.4. ஊர்ப் பிள்ளைகளுக்கு அறிவுரையாகப் பாடியவை

"திருடாதே! பாப்பா திருடாதே!

வறுமை நிலைக்குப் பயந்துவிடாதே

திறமை இருக்கு மறந்துவிடாதே

சிந்தித்துப் பார்த்து செய்கையை மாத்து-தவறு

சிறிசா இருக்கையில் திருத்திக்கோ

தெரிஞ்சும் தெரியாமே நடந்திருந்தா-அது

திரும்பவும் வராமே பார்த்துக்கோ" *(திருடாதே)*

என வகைப்படுத்தலாம். மேலும் சிறுவர்கள் இவருடன் இணைந்து பாடியவை; இவர் தனியாகப் பாடியவை என்றும் பாகுபடுத்தலாம்.

6. எம்.ஜி.ஆர். படத்தில் அவர் பாடாத தனிப்பாடல்கள்

எம்.ஜி.ஆர். படங்களில் அவர் பாடாமல் மற்றவர் பாடும் சமூக சிந்தனை சார்ந்த பாடல்களும் இடம் பெற்றுள்ளன. இந்த பாடல்களையும் நாம் இரண்டு வகையாக பிரிக்கலாம். இவற்றை .தனிப்பாடல் மற்றும் குழு பாடல். தனிப்பாடலில் கதாநாயகி பாடிய பாடல்களும்

6.1. தனிப்பாடல்

நம் நாடு படத்தில் ஜெயலலிதா எம் ஜி ஆரின் வெற்றியை தம் குப்பத்தாருடன் சேர்ந்து வாழ்த்தி பாடுவதாக அமைந்த பாடலில் பின்பகுதியில் எம் ஜி ஆரும் பாடுவதாகக் அமைந்திருக்கும்.

"வாங்கய்யா வாத்தியாரய்யா

வரவேற்க வந்தோமைய்யா

ஏழைகள் உங்களை நம்பி

எதிர்பார்த்து நின்றோமய்யா

அண்ணனின் தம்பி உண்மையின் தோழன்

அண்ணனின் தம்பி உண்மையின் தோழன்

ஏழைக்குத் தலைவன் நீங்களய்யா" *(நம்நாடு) அல்லது வேறு நபர் பாடும் பாடல்களும் உண்டு.*

குழுப் பாடல் என்ற பிரிவில் எம்.ஜி.ஆரின் நண்பர்கள் பாடுவது; பொதுமக்கள் பாடுவது ; ஊழியர் பாடுவது எனப் பல வகையாகப் பகுத்தறியலாம்

'இதயக்கனி' படத்தில் எம் ஜி ஆருக்குச் சொந்தமான சத்யா தோட்டத்தின் ஊழியர்கள் பாடும் பாடல். அவரை வாழ்த்திப் பாடும் 'நீங்க நல்லாருக்கணும் நாடு முன்னேற' பாடல் ஆகும். அப்பாடல் வருமாறு''

"தென்னகமாம் இன்பத் திருநாட்டில் மேவியதோர்
கன்னடத்துக் குடகுமலைக் கனிவயிற்றில் கருவாகி
தலைக்காவிரி என்னும் தாதியிடம் உருவாகி
ஏர்வீழ்ச்சி காணாமல் இருக்க சிவசமுத்திர
நீர்வீழ்ச்சி எனும் பேரில் நீண்ட வரலாறாய்
வண்ணம் பாடியொரு வளர்த்தென்றல் தாலாட்ட
கண்ணம்பாடி அணைகடந்து
ஆடுதாண்டும் காவிரிப்பேர் பெற்று
அகண்ட காவிரியாய்ப் பின் நடந்து
கல்லணையில் கொள்ளிடத்தில் காணும் இடமெல்லாம்
தாவிப் பெருகி வந்து தஞ்சை வளநாட்டைத்
தாயாகிக் காப்பவளாம் தனிக்கருணை காவிரிபோல்

செல்லும் இடமெல்லாம் சீர் பெருக்கித் தேர் நிறுத்தி
கல்லும் கனியாகும் கருணையால் எல்லோர்க்கும்
பிள்ளையென நாளும் பேசவந்த கண்மணியே
வள்ளலே எங்கள் வாழ்வே இதயக் கனி
எங்கள் இதயக் கனி இதயக் கனி

நீங்க நல்லாயிருக்கோணும் நாடு முன்னேற இந்த
நாட்டில் உள்ள ஏழைகளின் வாழ்வு முன்னேற

என்றும் நல்லவங்க எல்லாரும் ஒங்க பின்னாலே நீங்க

நெனச்சதெல்லாம் நடக்குமுங்க கண்ணு முன்னாலே

என்றும் நல்லவங்க எல்லாரும் ஒங்க பின்னாலே நீங்க

நெனச்சதெல்லாம் நடக்குமுங்க கண்ணு முன்னாலே" (இதயக்கனி). மற்றவர் எம்.ஜி.ஆரைப் பாராட்டி பாடும் பாடல்கள் சிலவும் இந்த பிறர் பாடும் பாடல் வகையில் சேரும்.

பாடான் திணை வகை - பாடல் கருத்தும் தகுதியும்

சமூகக் கருத்துக்களை எடுத்துக் கூறும் தகுதி எம்.ஜி.ஆருக்கு உண்டு என்று மக்கள் நம்பியதால் அவருடைய தனிப் பாடல்கள் ரசிகர்கள் இடையே பெரும் வரவேற்பைப் பெற்றன. எம்.ஜி.ஆர். படத்தைப் பார்க்காத எதிரணியினர் கூட பாடல்களை ரசித்துக் கேட்டனர். எம்.ஜி.ஆர். படத்தில் கதாநாயகனின் நேர்மை, உழைப்பு, அழகு, வலிமை ஆகியவற்றை விவரிக்கும் பாடல்கள் ரசிகர்களால் அதிகமாக ரசிக்கப்பட்டன. சங்க காலத்தில் தலைவர்களின் வீரத்தையும் கொடையையும் புகழ்ந்து பாடும் பாடல்களை பாடாண் திணைப் பாடல்கள் என்பர். இப் பாடல் வகை மீண்டும் எம்.ஜி.ஆர். படங்களில் மறு மலர்ச்சி பெற்றது.

எம்.ஜி.ஆரின் தனிச் சிறப்பை விளக்கும் பாடல்கள்

தமிழ் இலக்கியத்தில் பாடாண்திணை பாடல்கள் என்ற வகை அக்காலத்தில் மன்னர்களைப் புகழ்ந்து பாடியதைப் போல எம்.ஜி.ஆர். படங்களிலும் சில பாடல்கள் அவருடைய அழகு இளமை மற்றும் குணாதிசயங்களை விவரித்து பாடின. அவரைப் பற்றிய புகழ்ச்சி பாடலாக, புகழ்ச்சி வரிகளாக அமைந்தன. இவை படம் பார்ப்பவரின் நெஞ்சத்தைத் எம்.ஜி.ஆரின்பால் ஈர்த்து உணர்வு மயமாக்கி அவர் மீது இருந்த ஈடுபாட்டை இன்னும் அதிகமாக்கி விடுகின்றன.

"என்னைப் பாட வைத்தவன் ஒருவன் -

என்பாட்டுக்கு அவன்தான் தலைவன்

ஒரு குற்றமில்லாத மனிதன் -

அவன்கோவில் இல்லாத இறைவன்

அவன் சோலையில் மலராய்ச் சிரிப்பான்

அந்தி மாலையில் நிலவாய் இருப்பான்

குளிர் ஓடையில் அலையாய்த் திரிவான்

நல்ல கோடையில் குடையாய் விரிவான்.. விரிவான்..” *என்ற வரிகள் அவருடைய புகழை எடுத்துரைத்தன. மற்றும் நீதிக்குப்பின் பாசம் படத்தில் இடம் பெற்ற*

“மானல்லவோ கண்கள் தந்தது

மயில் அல்லவோ சாயல் தந்தது

தேனல்லவோ இதழைத் தந்தது

சிலையல்லவோ அழகைத் தந்தது

என்ற பாடலில் அவருடைய மேனி வண்ணம் பின்வருமாறு வருணிக்கப்பட்டது.

தேக்கு மரம் உடலைத் தந்தது

சின்ன யானை நடையைத் தந்தது

பூக்களெல்லாம் சிரிப்பைத் தந்தது

பொன்னல்லவோ நிறத்தைத் தந்தது”,

என்ற வரிகள் எம்.ஜி.ஆரின் உடல்கட்டையும், இளமையையும் பாராட்டி எழுதப்பட்டவை ஆகும். .

பாடல்களின் சிறப்புக்கு காரணம்

எம்.ஜி.ஆர். தம் படங்களைத் தயாரிக்கவும் இயக்கவும் கதை எழுதவும் வசனம் எழுதவும் பாடல் இயற்றவும் இசை அமைக்கவும் உடன் சேர்ந்து நடிக்கும் மற்ற ஒலி, ஒளி, கலை இயக்கம், படத்தொகுப்பு, உடை, ஒப்பனை ஆகியவற்றிற்குத் தனக்கென தனி ஆட்களை தனிக் குழுவை வைத்திருந்தார். இக் குழுவினர் அனைவரும் ஒருமுகமாக எம்.ஜி.ஆரின்

வெற்றி மற்றும் புகழைப் பற்றியே சிந்தித்து கடமையாற்றினர்.

எம்.ஜி.ஆர். படத்தில் வரும் ஒவ்வொரு காட்சியும் ஒவ்வொரு சட்டகமும் [ஃபிரேமும்] எம்.ஜி.ஆருக்குப் புகழ் சேர்ப்பதாக மட்டுமே இருக்க வேண்டும் என்பதில் இப்படக்குழுவினர் கவனமாக இருந்து உழைத்தனர். எம்.ஜி.ஆரின் நோக்கத்தைப் புரிந்து கொண்டவர்களாக அவரது ஆவலை நிறைவேற்றுபவர்களாகவே இந்தப் படக்குழுவினர் உழைத்ததால் எம்.ஜி.ஆருடைய அன்புக்குப் பாத்திரமாயினர். அவர் படத்தில் அவர்களுக்கு அதிக அளவில் வருமானம் கிடைத்தது. புகழும் கிடைத்தது. இவர்களும் பிரபலம் ஆகி விட்டனர்.

எம்.ஜி.ஆரால் பிரபலமான பாடகர்கள்

ஜேசுதாஸ் பொம்மை படத்தில் முதல் பாடலைப் பாடி இருந்தாலும் உரிமைக்குரல் படத்தில் விழியே கதை எழுது பாடலைப் பாடிய பின்புதான் தமிழ்த் திரையுலகில் பிரபலமானார். அதுபோல எஸ் பி பாலசுப்ரமணியம் சாந்தி நிலையத்தில் 'இயற்கை என்னும் இளையகன்னி' பாடல் பாடி அப்பாடல் பிரபலமடைந்திருந்தாலும் கூட அவர் அடிமைப்பெண் படத்தில் 'ஆயிரம் நிலவே வா' பாடல் பாடிய பிறகுதான் புகழ் வெளிச்சம் அவர் மீது விழுந்தது. பன்னெடுங்காலமாக திரை உலகில் இருந்து வரும் சிறந்த கலைஞர்களும் திறமையான தொழில் நுட்பனர்களும் எம்ஜிஆர் படத்தில் அறிமுகமான பிறகு புகழின் உச்சத்தைத் தொடுவது இயல்பானதாக அமைந்து விட்டது.

நடிக நடிகையர் பலரும் எம்.ஜி.ஆர். படத்தில் நடிக்க மிகவும் விரும்பினார். அவர் படத்தில் நடிப்பதற்காக மற்ற படவாய்ப்புகளை இழக்கவும் தயாராக இருந்தனர். எதிர் அணியைச் சேர்ந்தவர்கள் கூட அவ்வப்போது எம்.ஜி.ஆர். படத்தில் தலைகாட்டி விட்டு தான் சென்றார்கள். தலை காட்ட வேண்டும் என்று விரும்பினார்கள். ஒட்டுமொத்தமாக எம்.ஜி.ஆர். அணியில் இருந்த திரைப்பட

கலைஞர்கள் எம்.ஜி.ஆரை விட்டு விலகி விடக்கூடாது என்பதில் மிகுந்த கவனம் செலுத்தினர்.

எம்.ஜி.ஆரை வைத்துப் படம் எடுக்க மாட்டேன் என்று சிவாஜியிடம் சத்தியம் செய்த பாலாஜி கூட பொங்கல் திருநாளன்று எம்.ஜி.ஆரைப் பார்த்து அவர் கையால் பணம் வாங்குவதை தன் வாடிக்கையாகக் கொண்டிருந்தார். சிவாஜியை வைத்துப் படம் எடுக்க மாட்டேன் என்று சத்தியம் செய்த சாண்டோ சின்னப்பா தேவர் கடைசிவரை தேவர் பிலிம்ஸ் என்ற பேனரின் கீழ் எம்.ஜி.ஆர். படங்களை மட்டுமே எடுத்தார். இவரே எம்.ஜி.ஆரை வைத்து அதிக படங்கள் [16] எடுத்த ஒரே தயாரிப்பாளர் ஆவார். தேவர் தயாரித்து எம்.ஜி.ஆர். நடித்த பதினாறு படங்களிலும் தேவரின் தம்பி எம். ஏ. திருமுகம் இயக்குனராக இருந்தார். ப. நீலகண்டனுக்கு [பதினெட்டு] அடுத்தபடியாக எம்.ஜி.ஆரை அதிகப் படங்களில் இயக்கிய பெருமை எம். ஏ. திருமுகத்தை சேரும்.

இவ்வாறு எம்.ஜி.ஆரின் படங்கள் தயாரிப்பாளருக்கு நட்டத்தை ஏற்படுத்தாமல் தொடர்ந்து வெற்றி கொடி நாட்டி வந்ததற்கு அவரது படத்தின் பாடல்கள் உறுதுணையாக இருந்தன. அவற்றை எழுதி இசையமைத்து வாங்குவதில் எம்.ஜி.ஆர். அதிக சிரத்தை எடுத்துக்கொண்டார். அவருக்கு இருந்த இசையறிவு மக்கள் ரசனை பற்றிய அறிவு சிறு வயது முதல் மக்கள் ரசனையை அவதானித்து வந்த போக்கு ஆகியன அவருக்குத் தெளிவையும் துணிவையும் அளித்திருந்தன. எனவே இன்றும் அவரது பாடல்கள் காலத்தால் அழியாமல் கருத்துள்ள பாடல்களாக நின்று நிலைக்கின்றன.



3. எம்.ஜி.ஆர். திரைப்படப் பாடல்களில் அரசியல் பின்னணி

ஜனாதிபதி விருது பெற்ற முதல் தமிழ்ப் படமான மலைக்கள்ளனில்

“எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே

இன்னும் எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே

சொந்த நாட்டிலே நம் நாட்டிலே

சத்தியம் தவறாத உத்தமன் போலவே நடிக்கிறார்

சமயம் பார்த்து பல வகையிலும் கொள்ளை அடிக்கிறார்

பக்தனை போலவே பகல் வேஷம் காட்டி

பாமர மக்களை வலையினில் மாட்டி”

என்ற பாடல் எம்.ஜி.ஆர். படுவதாக இடம்பெற்றது. இதுவே அவர் படத்தில் இடம்பெற்ற முதல் அரசியல் பின்னணி உள்ள பாடலாகும். அப்போது காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தது. காங்கிரஸ்காரர்கள் மக்களை ஏமாற்றுகிறார்கள் என்பதை மக்களுக்கு உணர்த்தும் வகையில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த எம்.ஜி.ஆர். இந்தப் பாட்டை அப்படத்தில் சேர்த்தார். இப்பாட்டை எம்.ஜி.ஆருக்காக முதன் முதலில் பாடிய டி.எம்.சௌந்தரராஜன் இதற்குப் பிறகு அவருடைய ஆஸ்தான பாடகர் ஆனார். பாட்டைக் கேட்ட பொதுமக்கள் பாட்டின் கருத்துக்களை முழுமையாக ஏற்றுக்கொண்டு ஆட்சி மாற்றம் வேண்டும் என்ற உறுதிப்பாட்டுக்கு வந்தனர். இதன் விளைவால் பிறகு வந்த தேர்தலில் திமுக முன்பிருந்ததை விட அதிக இடங்களைப் பெற்றது. திமுகவின் வெற்றிக்கு முக்கிய காரணமாக எம்.ஜி.ஆர். படத்தின் அரசியல் பின்னணி

உள்ள தத்துவப் பாடல்கள் அல்லது தனிப் பாடல்கள் அமைந்தன.

எம்.ஜி.ஆரின் சொந்தப் படத்தில் அரசியல் சிந்தனை

1958இல் எம்.ஜி.ஆர். இயக்கி தயாரித்த நாடோடி மன்னன் படம் வெளிவந்த போது அப்படத்தில் நான்கு பாடல்கள் அரசியல் கொள்கைகளை பிரச்சாரம் செய்யும் பாடல்களாக இடம் பெற்றன. 'செந்தமிழே வணக்கம்',

"செந்தமிழே வணக்கம்

ஆதி திராவிடர் வாழ்வினை சீரோடு விளக்கும்

செந்தமிழே வணக்கம்

ஐந்து இலக்கணங்கள் ஆய்ந்தே உலக

அரங்கினுக்கே முதன் முதல் நீ தந்ததாலும்

செந்தமிழே வணக்கம்

மக்களின் உள்ளமே கோயில் என்ற

மாசற்ற கொள்கையில் வாழ்ந்ததனாலே

பெற்ற அன்னை தந்தை அன்றி மேலாய்

பிறிதொரு தெய்வம் இலை என்பதாலே"

'உழைப்பதிலா உழைப்பை பெறுவதிலா இன்பம் உண்டாகும் என்றே சொல் என் தோழா',

"உழைப்பதிலா உழைப்பை பெறுவதிலா இன்பம்

உண்டாவதெங்கே சொல் என் தோழா

உழைப்பவரே உரிமை பெறுவதிலே இன்பம்

உண்டாகும் என்றே சொல் என் தோழா

கல்வி கற்றோம் என்ற கர்வத்திலே இன்பம்

கண்டவர் உண்டோ சொல் என் தோழா

கல்லாத பேரையெல்லாம் கல்வி பயிலச் செய்து

கல்லாத பேரையெல்லாம் கல்வி பயிலச் செய்து

காண்பதில் தான் இன்பம் என் தோழா

காண்பதில் தான் இன்பம் என் தோழா"

'தூங்காதே தம்பி தூங்காதே',

"தூங்காதே தம்பி தூங்காதே -

நீசோம்பேறி என்ற பெயர் வாங்காதே

நீ தாங்கிய உடையும் ஆயுதமும்

பல சரித்திரக் கதை சொல்லும் சிறைக்கதவும்

சக்தி இருந்தால் உனைக்கண்டு சிரிக்கும்

சத்திரம்தான் உனக்கு இடம் கொடுக்கும்"

'வருக வருக வேந்தே'

"வருக வருக வேந்தே எங்கள்

தலையான கலை ஞானம் தழைத்தோங்க

தலைவா நீ வருக வருக வேந்தே

வீரம் உறங்காத தென்னாடு தனை ஆளும் வேந்தே நீ

வருக வருகவே

பார் புகழும் உதய சூரியனே

பதி ஏந்தி புகழ் காக்கும் பார்த்திபனே

வருக வருகவே"

என்ற பாடலும் ஆக நான்கு பாடல்கள் திமுக கட்சியின் கொள்கைகளை இத்திரைப்படத்தின் மூலமாக காட்சி பிம்பங்களோடு எடுத்துரைத்தன.

திராவிட முன்னேற்ற கழகம் திராவிடம் என்பது தமிழ் தெலுங்கு மலையாளம் துளு ஆகிய மொழி பேசும் மக்கள் வாழ்கின்ற இடமாகும். திராவிட இனத்தைச் சேர்ந்த மக்கள்

அனைவரும் ஆரியப் பார்ப்பனரின் கைப்பாவையாக இருப்பதில் இருந்து விடுதலை பெற வேண்டும். அவர்களின் மூடநம்பிக்கை சார்ந்த பழக்கவழக்கங்களை திராவிடர்கள் பின்பற்றக்கூடாது, மக்கள் பகுத்தறிவு உடையவர்களாக

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்க வாழ வேண்டும், என்பது பிரச்சாரம் செய்யப்பட்டது. திருக்குறள் தமிழர்களின் மறை நூலாகப் போற்றப்பட்டது. எம்.ஜி.ஆர். தன் படங்களில் திருக்குறளை காண்பித்தார், வள்ளுவனைப் புகழ்ந்தார்.

நாடோடி மன்னன் படத்தில் தூங்காதே தம்பி தூங்காதே என்ற பாடல் அப்போதைய காங்கிரஸ் ஆட்சி தன் பொறுப்புகளில் இருந்து நழுவி தட்டிக் கழிக்கிறது என்பதை உணர்த்தும் வகையில்

இன்னும்

பொறுப்புள்ள மனிதரின் தூக்கத்தினால் – பல

பொன்னான வேலையெல்லாம் தூங்குதப்பா

என்ற வரிகளைக் கொண்டு மக்களிடம் அக்கட்சியின் மீது வெறுப்பைத் தூண்டியது. அடுத்து,

“உழைப்பதிலா உழைப்பைப் பெறுவதிலா இன்பம் உண்டாகும் என்றே சொல் என் தோழா

உழைப்பவரே உரிமை பெறுவதிலே இன்பம்

உண்டாகும் என்றே சொல் என் தோழா ‘‘

என்ற பாடல் உழைப்பாளிகளின் வாழ்க்கையில் அவர்கள் அடிமைகளாக இருப்பதையும் அவர்களுக்கு முழு உரிமைகள் தரப்படவில்லை என்பதையும் அந்த உரிமைகளை திமுக தருவதற்கு தயாராக இருக்கிறது என்பதையும் உணர்த்துகின்ற வகையில் அமைந்தது.

எம்.ஜி.ஆர். என்றால் திமுக

எம்.ஜி.ஆர். தி(முகவின் பிரதிநிதியாக சமூகச் சிந்தனை சார்ந்த பாடல்களைப் பாடுகிறார் என்று மக்கள் கருதினர்,

செந்தமிழே வணக்கம்;

திராவிடர் வாழ்வினை சீரோடு விளக்கும்

செந்தமிழே வணக்கம்

என்ற பாடல் தமிழின் சிறப்பை எடுத்துரைத்தது. மக்கள் தாம் தமிழர் என்பதில் பெருமிதம் கொண்டனர். எம்.ஜி.ஆரின் படப் பாடல்களும் வசனங்களும் திராவிடர்கள் அனைவரும் சீரும் சிறப்புமாக வாழ தி(முகவை ஆதரிக்க வேண்டும். காங்கிரஸ் ஆரிய பார்ப்பனர்களின் கைப்பிடியில் சிக்கி தவிக்கிறது; என்ற எண்ணத்தை வலியுறுத்தின. எம்.ஜி.ஆர். தன் பாடல்களின் மூலம் காங்கிரஸ் எதிர்ப்பையும் தி(முக ஆதரவையும் திரட்டி வந்தார். இப்பாடல்கள் வெற்றி பெற்றதை தொடர்ந்து அவர் தன்னுடைய படங்களில் தொடர்ந்து சமூக சிந்தனையுள்ள கொள்கைப் பிரச்சாரம் செய்கின்ற பாடல்களை அமைத்தார்.

1960 இல் வந்த மன்னாதி மன்னன் படத்தில் நாடோடி மன்னனை போலவே (முதல் பாடலாக பெயர் பட்டியல் வெளியிடும் போதே திராவிடர்களின் சிறப்பை உணர்த்தும்

“அச்சம் என்பது மடமையடா

அஞ்சாமை திராவிடர் உடமையடா

ஆறிலும் சாவு நூறிலும் சாவு

தாயகம் காப்பது கடமையடா

கனகவிஜயரின் முடித்தலை நெறித்து

கல்லினை வைத்தான் சேர மன்னன்

இமய வரம்பினில் மீன்கொடி ஏற்றி

இசை பட வாழ்ந்தான் பாண்டியனே”

என்ற பாடலை அமைத்திருந்தார். இது கண்ணதாசன் கதை வசனம் பாடல்கள் எழுதிய படம் ஆகும். இப்பாடல் தமிழரின் பெருமையை பறை சாற்றியது. கனக விசயரின் முடித்தலை நெறித்து இமயத்திலிருந்து கல்லெடுத்து கொண்டு வந்து கண்ணகிக்கு கோயில் கட்டிய செங்குட்டுவனின் வீரத்தை எடுத்துரைத்தது. இமய வரம்பில் புலிக்கொடி பொறித்த சோழனின் புகழ் பாடியது.

தமிழர்களின் பெருமையை பறைசாற்றுகின்ற வகையில் இப்பாடல்கள் எம்.ஜி.ஆர். படத்தில் அமைந்த போது மக்கள் தங்களுக்குள் தன்னம்பிக்கையும் பெருமிதமும் கொண்டவர்களாக மாறினர். எம்.ஜி.ஆர். உடைய பாடல்கள் எதிர்மறைக் கருத்துக்களையோ, நம்பிக்கை வறட்சியையோ சொல்வனவாக அமைக்கப்படவில்லை. தற்கொலைக்கு தூண்டுபவையாகவும் இருந்தது கிடையாது. சோகப்பாடல்கள் கூட தத்துவப் பாடல்கள் ஆகவே விளங்கின. எனவே, எம்.ஜி.ஆர். படம் பார்க்கும் ரசிகர்களை அவரது தத்துவப் பாடல்கள் வாழ்வில் நம்பிக்கை இழக்கச் செய்யவில்லை.

கருப்பு சட்டைக்காரர்

எம்.ஜி.ஆர். திமுகவை பிரதிபலிக்கும் வகையில் தமது படத்தில் பாடல்களை எழுதி வாங்கி பாடச் சொல்லி தன் கட்சியின் கொள்கைகளுக்கே ஏற்ப காட்சிகளை அமைத்தார். அவருடைய கொள்கைக்கு புறம்பாக எதுவும் அவர் படத்தில் இடம்பெறவில்லை. அவர் பாடல்கள் பார்ப்பவருக்குத் துணிச்சலையும் வாழ்க்கையில் எதையும் சந்திக்க முடியும் என்ற தன்னம்பிக்கையையும் வழங்கின. உடைகள், அணிமணி, நெற்றியில் வரையும் பொட்டு, கதாபாத்திரத்தின் பெயர், ஒப்பனை தோற்றம் என அனைத்தும் தன் கட்சி பிரச்சாரத்துக்கு ஆதரவாக இருக்கும்படி கவனித்துக் கொண்டார்.

1965, 1966 களில் அதிக எண்ணிக்கையில் எம்.ஜி.ஆர். படங்கள் நடிக்க ஆரம்பித்தார். அப்போது நிறைய பாடல்கள் தனிப்பாடல்களாக தத்துவ பாடல்கள் ஆக சமூக சிந்தனையும்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரச்சாரமும் கொண்டவையாக எம்.ஜி.ஆர். படத்தில் இடம் பெற்றன. மேலும் இத்தகைய பாடல்களை பாடும்போது இவர் கருப்புச் சட்டைக்காரர் என்பதை உணர்த்தும் வகையில் கலர் படங்களிலும் கூட கறுப்புச் சட்டை அணிந்து பாடினார். கம்யூனிஸ்டுகளை சிவப்பு சட்டைக்காரர் என்று அழைத்ததைப் போல அக்காலத்தில் திமுகவினரை கருப்புச் சட்டைக்காரர்கள் என்று குறிப்பிடும் வழக்கம் இருந்தது. அதனை அப்படியே பின்பற்றிய எம்.ஜி.ஆர். தன்னுடைய படத்தில் சமூக சிந்தனை சார்ந்த கொள்கைப் பிரச்சார பாடல்கள் வரும் போது கருப்புச்சட்டை அணிந்து நடித்தார்

எங்க வீட்டுப்பிள்ளை படத்தில் வில்லன் நம்பியாரை சவுக்கால் அடித்துவிட்டு மறுநாள் பணியாளர்களுடன் சேர்ந்து ஏளையோடு ஏழையாக

“நான் ஆணையிட்டால் அது நடந்து விட்டால்

ஏழைகள் வேதனை படமாட்டார்

உயிர் உள்ளவரை ஒரு துன்பமில்லை அவர்

கண்ணீர் கடலிலே விழமாட்டார் அவர்

கண்ணீர் கடலிலே விழ மாட்டார்.

ஒரு தவறு செய்தால் அதைத் தெரிந்து செய்தால்

அவன் தேவன் என்றாலும் விட மாட்டேன்

உடல் உழைக்கச் சொல்வேன் அதில் பிழைக்கச் சொல்வேன்

அவர் உரிமைப் பொருள்களைத் தொட மாட்டேன்”

என்ற பாடலைப் பாடும்போது படம் கலர் படம் என்றாலும் அவர் கருப்பு சட்டை அணிந்து தன்னை திமுக காரனாக காட்டியிருப்பார்.

சந்திரோதயம் படத்தில் மலையில் இருக்க இடம் தேடி ஏழை மக்களை அழைத்துக்கொண்டு வரும் காட்சியில்

“புத்தன் இயேசு காந்தி பிறந்தது பூமியில் எதற்காக

தோழா ஏழை நமக்காக

கங்கை யமுனை காவிரி வைகை ஓடுவது எதற்காக

நாளும் உழைத்து தாகம் எடுத்த தோழர்கள் நமக்காக

கேள்விக்குறி போல் முதுகு வளைந்து உழைப்பது எதற்காக

மானம் ஒன்றே பெரிதென எண்ணி பிழைக்கும் நமக்காக “

என்ற பாடலிலும் கருப்பு சட்டையே அணிந்திருப்பார். மழைவெள்ளத்தில் குடிசைகள் மூழ்கி விட்டதனால் ஆதரவின்றி நிற்கும் மக்களை அவர்களின் சிறு குழந்தைகளோடு அழைத்துக் கொண்டு புகலிடம் தேடி வரும்போது எம்.ஜி.ஆர். கருப்புச்சட்டை அணிந்து தான் பாடி வருவார்

“நிழல் வேண்டும்போது மரம் ஒன்று உண்டு

பகை வந்தபோது துணை ஒன்று உண்டு

இருள் வந்தபோது விளக்கொன்று உண்டு

எதிர்காலம் ஒன்று எல்லோர்க்கும் உண்டு

உண்மை என்பது என்றும் உள்ளது

தெய்வத்தின் மொழியாகும்

நன்மை என்பது நாளை வருவது நம்பிக்கை ஒளியாகும்”

என்று வரிகள் மக்களுக்கு எதிர்காலம் குறித்த நம்பிக்கையை அளித்தன. இத்தகைய பாடல்களில் வரும் குளோஸ் அப் காட்சிகள் இவராலேயே நமக்கு விடிவு கிடைக்கும் என்ற நம்பிக்கையை அழைத்தன.

ஆசை முகம் படத்தில் மூன்று பாடல்கள் தத்துவப் பாடல்களாக அமைந்தன. இப்படம் பிளாஸ்டிக் சர்ஜரியால் முக மாற்று அறுவை சிகிச்சை செய்வதை பற்றிய முதல் அறிவியல் தமிழ்ப்படம் ஆகும். அதன்பிறகு தான் ரேவதி நடித்த புதிய முகம் வந்தது. இப்படத்தில்

‘எத்தனை பெரிய மனிதனுக்கு எத்தனை சிறிய மனமிருக்கு’

என்ற பாடல் பெரிய மனிதர் என்ற போர்வையில் உலா வரும் காங்கிரஸ்காரர்களைத் தாக்கியது. மேலும் அவர்கள் வேடதாரிகள் என்பதை

“நாளொரு மேடை பொழுதொரு நடிப்பு

அவன் பெயர் மனிதனல்ல

நாவில் ஒன்று நினைவில் ஒன்று

அதன் பேர் உள்ளமல்ல

என்று தொடங்கும் பாடல் வெளிப்படுத்தியது.

காட்டில் நிலவாய் கடலில் மழையாய்

பிறந்தால் யாருக்கு இலாபம்

பகையில் துணையாய் பசியில் உணவாய்

இருந்தால் ஊருக்கு இலாபம்”

என்ற வரிகள் எம்.ஜி.ஆர். இவ்வாறு ஏழை மக்களுக்கு ஆபத்பாந்தவனாக, அனாத ரட்சகனாக துணையிருப்பார் என்ற நம்பிக்கையை அளித்தது.



திரையரங்கில் அதிக வரவேற்பு பெற்ற பாடல்

எங்க வீட்டு பிள்ளை படம் நாகிரெட்டி சக்கரபாணி நண்பர்கள் தங்கள் விஜயா வாகினி பட நிறுவனத்தில் ஒரு வண்ணப்படம் தயாரிக்கலாம் என்று முடிவெடுத்தவுடன் எம்.ஜி.ஆரை தான் நாடினர். அவரும் ஒப்புக்கொண்டார். ஜெமினி, தேவர், ஏ வி எம் , ஜி என் வேலுமணி எனப் பல தயாரிப்பாளர்கள் வண்ணப்படம் எடுக்க முடிவு செய்த போது எம்.ஜி.ஆரை வைத்து தான் முதல் தயாரிப்பை வெளியிட்டனர். அனைத்தும் வெற்றிப் படங்களாகி வசூலை அள்ளி குவித்தன.

எங்க வீட்டு பிள்ளை வெளிவந்த போது இந்தியத் திரைப்படங்களில் பாடல்கள் பற்றி ஆராய்ச்சி செய்து வந்த ஆராய்ச்சியாளர்கள் இந்தியத் திரையரங்கில் மிகுந்த வரவேற்பையும் ஆரவாரத்தையும் பெற்ற பாடல் எது என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். அப்போது நான் ஆணையிட்டால் பாட்டு இந்தியாவில் திரையரங்கில் மிகுந்த வரவேற்ப்பை பெற்ற பாடல் என்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

எம்.ஜி.ஆர். நான் ஆணையிட்டால் என்று பாடுவது திமுக ஆட்சிக்கு வந்து ஆணையிட்டால் என்ற கருத்தை மக்களுக்கு உணர்த்தியது மேலும்

“ஒரு தலைவன் உண்டு. அவன் கொள்கை உண்டு

அதை எப்போதும் காத்திருப்பேன்”

என்று எம்.ஜி.ஆர். பாடுகின்ற வரிகள் திமுகவின் தலைவரான அறிஞர் அண்ணாவின் வழியைப் பின்பற்றி திமுகவின் கொள்கைகளைக் காத்திருப்பேன் என்று அவர் பாடுவதாக மக்கள் புரிந்து கொண்டனர். மேலும் காங்கிரஸாரின் அட்டூழியங்களைக் குறிக்கும் வகையில் அவர்

“காலம் வரும் என் கடமை வரும் இந்தக்

காக்கைகள் கூட்டத்தை ஒழிப்பேன்

பொது நீதியிலே புது பாதையிலே வரும்

நல்லோர் முகத்திலே விழிப்பேன்”

என்று பாடிய வரிகளில் ‘காக்கைகள் கூட்டத்தை ஒழிப்பேன்’ என்ற வரியைத் தணிக்கை குழுவினர் அனுமதிக்க மறுத்துவிட்டனர். ஆனால் இப்பாடல் முதலிலேயே வெளிவந்துவிட்டதால் சிலோன் ரேடியோவில் இந்த வரிகள் காணப்பட்டன. ஆனால் தணிக்கை குழு அந்த வரியை மாற்றச் சொல்லியதால் ‘‘இந்தக் கூட்டத்தின் ஆட்டத்தை ஒழிப்பேன்’’ என்று அவ்வரி இந்தியாவில் மாற்றப்பட்டது. தமிழகத்தில் இப்பாடல் இக் கூட்டத்தின் ஆட்டத்தை ஒழிப்பேன் என்று மீண்டும் பதிவு செய்யப்பட்டது.

காங்கிரசாரை தோற்கடித்து காங்கிரஸ் ஆட்சியை ஒழித்து விட்டு திமுகவின் ஆட்சியைக் கொண்டு வருவேன் என்று எம்.ஜி.ஆர். பாடுவதாக அமைந்த இப்பாடல் பொதுமக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்றதில் வியப்பொன்றுமில்லை. மேலும் தவறு செய்பவரை சாட்டையால் அடித்து திருத்துவதாகவும் கதையில் இப்பாடல் காட்சி இடம்பெறும். அப்பாவியாக இருந்த எம்.ஜி.ஆரை ஏமாற்றி அவரது சொத்துக்களை அனுபவித்து வந்த வில்லன் நம்பியாரை சாட்டையால் அடித்த காட்சியை, பொது மக்கள் தங்களை சுரண்டிய ஒரு கொழுத்த பணக்காரனை அடித்து உதைப்பதாகவே எண்ணி ஆறுதலும் மகிழ்ச்சியும் அடைந்தனர். மறுநாள் கெட்டவர்கள் திருந்தி, நல்லவர்கள் மகிழ்ச்சியாக இருக்கும் சூழ்நிலையில் இப்பாடல் இடம்பெற்றதால் மக்கள் இதனை வெகுவாக ரசித்தனர்.

திருக்குறளும் தமிழ்ப்பற்றும்

நான் ஆணையிட்டால் படத்தில் திருடர் கூட்டத்தை திருத்த நினைக்கும் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு திருக்குறளைக் காட்டி தாய் மீது ஆணையாக அவர்களைத் திருத்துவேன் என்கிறார். தமிழ், திருக்குறள் என்பன திமுகவின் பிரச்சாரக் கருத்துக்களில் முக்கிய இடம் பெற்றனவாகும்.

“தாய் மேல் ஆணை தமிழ் மேல் ஆணை

குருடர்கள் கண்ணைத் திறந்து வைப்பேன்

தனியானாலும் தலை போனாலும்

தீமைகள் நடப்பதை தடுத்து நிற்பேன்

இருட்டினில் வாழும் இதயங்களே

கொஞ்சம் வெளிச்சத்தில் வாருங்கள்

நல்லவர் உலகம் எப்படி இருக்கும்

என்பதை பாருங்கள்

எத்தனை காலம் மனிதன் வாழ்ந்தான்

என்பது கேள்வி இல்லை அவன்

எப்படி வாழ்ந்தான் என்பதை உணர்ந்தால்

வாழ்க்கையில் தோல்வி இல்லை”

என்று அவர் திருக்குறள் நூலை வைத்துக் கொண்டு பாடும் பாடல் தீமைகளை தடுத்து நன்மைகளை உருவாக்கும் வகையில் என்னுடைய வாழ்வும் திரைப்படங்களும் அமையும் என்று சொல்வதாக நம்பப்பட்டதால் அவரை ஒரு நற்செய்தி கொண்டு வந்த தேவ தூதனாக மக்கள் கருதத் தொடங்கினர்.

நற்செய்தி கொண்டு வந்த தேவ தூதன்

விரைவில் திமுக ஆட்சி மலரப் போகிறது; மக்கள் வாழ்வு செழிக்கப் போகிறது என்ற நற்செய்தியை இவருடைய பாடல்கள் அவ்வப்போது மக்களிடையே கொண்டு போய் சேர்த்தன. இதனால் இவர் ஒரு மேசியாவாக கருதப்பட்டார். எம்.ஜி.ஆர். காங்கிரஸ் ஆட்சியின் அவலத்தை மக்களுக்கு எடுத்துரைத்து அக்கட்சியின் ஆட்சி மாற்றப்பட வேண்டும்; பகுத்தறிவு பாதையில் வளர்ந்துவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி மலர வேண்டும் என்பதை மக்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் எளிய சொற்களையும் இனிய இசையையும் கொண்ட பாடல்களின் மூலம் வலியுறுத்தினார்.

வெற்றிக்கான உத்திகள்

எம்.ஜி.ஆரின் பாடல்கள் எளிமையாக இருந்ததால் அதிக படிப்பறிவு இல்லாதவருக்கும் புரிந்தது. எளிய

இசையில் அமைந்ததால் எல்லோராலும் விரும்பி பாடப்பட்டது. கடினமான சொற்களோ சிக்கலான இசையமைப்போ இவரது பாடல்களில் இல்லை. நான்கு அல்லது ஐந்து சொற்கள் மட்டுமே ஒரு வரியில் இருந்தன. பல்லவி இரண்டு வரியில் அமைந்தது. முக்கியமான வரிகளை திருப்பி திருப்பிப் பாடியதால் கருத்துக்கள் கேட்போர் மனதில் ஆழமாகப் பதிந்தன. இவ்வாறான உத்திகளை எம்.ஜி.ஆர். பின்பற்றியதால் மூன்று வயது சிறுவர் முதல் எண்பது வயது கிழவர் வரை எம்.ஜி.ஆர். பாடலை ரசித்தனர், பாடினர்.

எம்.ஜி.ஆர். பாடலாசிரியர்களிடம் இன்னின்ன கருத்துக்கள் வர வேண்டும் என்று சொல்லி எழுதி வாங்கினார். சில கருத்துக்கள் சொற்கள் தன் கொள்கைக்கு முரண்பாடாக இருந்தபோது அவற்றை மாற்றும்படி தெரிவித்தார். தனக்கு மன நிறைவைத் தராத பாடல்கள் பெரிய கவிஞரால் எழுதப்பட்டதாக இருந்தாலும் அதனை நிர்த்தாட்சண்யமாக புறக்கணித்தார். வேறொருவரை விட்டு எழுதும்படி செய்தார். பாடல் நன்றாக எழுதப்பட்டு வந்ததும் பாடலாசிரியருக்கு தாராளமாக சன்மானம் வழங்கினார். வழங்கும்படி செய்தார். பாடல் வெற்றி பெறும்போது பாடலாசிரியருக்கும் மகிழ்ச்சியாக இருந்தது.

எம்.ஜி.ஆர். தன் பாடல்களில் நாடு மொழி சுய மரியாதை அண்ணா உழைப்பின் மேன்மை அன்பு இரக்கம் பாசம் பொதுநலம் போன்ற மையக் கருக்களை வைத்துப் பாடல்களை உருவாக்கி வாங்கினார். தமிழின் பெருமையை எடுத்துரைக்கும் பாடல்களை அமைத்தார். தமிழன் என்ற இனத்தின் பெருமையை உணர்த்தும் பாடல்கள் அமைத்தார் உயர்தனிச் செம்மொழி பேசும் பண்பாட்டுப் பாரம்பரியம் உடையவர்கள் என்ற எண்ணம் மக்களின் தன்னம்பிக்கையை வளர்த்தது.



4. நீதியை வலியுறுத்தும் எம்.ஜி.ஆரின் தனிப்பாடல்கள்

எம்.ஜி.ஆரின் படங்கள் 1947 முதல் இன்று வரை எழுபது ஆண்டுகளாக திரையரங்கில் தொடர்ந்து வெற்றிகரமாக ஓடி நல்ல இலாபம் ஈட்டி தருகின்றன. புது படங்களில் கிடைக்காத இலாபம் எம்.ஜி.ஆர். படங்களில் கிடைப்பதால் நகரத்தில் ஓரிரு திரையரங்குகளில் எப்போதும் எம்.ஜி.ஆர். படங்கள் ஓடிக்கொண்டு இருக்கின்றன. அவரது படங்களில் பாடல்கள் வரும்போது ரசிகர்கள் இன்றும் எழுந்து நின்று ஆடி பாடி கைதட்டி விசிலடித்து கொண்டாடுகின்றனர். ஏனெனில் அவர் பாடல் கருத்துக்கள் காலம் கடந்தனவாக நின்று நிலைபெற்றுள்ளன. அவர் பாடல்களின் கருத்துக்கள் காலத்தால் அழியாத கருப்பொருளை கொண்டுள்ளன. உலகளாவிய கருப் பொருட்களைத் தனது பாடலில் அமைத்து அன்று அவர் பாடலாசிரியரிடம் எழுதி வாங்கி இசையமைக்கச் செய்து பாடி ஆடி நடித்துள்ளார். எம் .ஜி.ஆரின் தத்துவப் பாடல்கள் எனப் புகழப்படும் அவரது தனிப் பாடல்கள் அல்லது சமூகச் சிந்தனை பாடல்களில் உலகப் பொது கருத்தான நீதியின் வெற்றி நீதிக்கான போராட்டம் குறித்தும் பாடியுள்ளன. எம்.ஜி.ஆர். பாடல்களில் உள்ள நீதி சார்ந்த கருத்துக்களை மட்டுமே இக்கட்டுரையில் காண்போம்.

நீதி பற்றி இரண்டு விதமான கருத்துக்கள் இவர் பாடல்களில் காணப்படுகின்றன. ஒன்று நீதி சில காலத்துக்கு மறைந்திருந்தாலும் அல்லது சிலருக்கு தற்காலிகமாக கிடைக்காமல் இருந்தாலும், பின்னர் அது தன்னை வெளிப்படுத்தி நல்லவர்களை காக்கும். இரண்டு, நீதி கிடைக்கும் என்று ஒருவர் சும்மா இருந்து விடக்கூடாது.

நீதிக்கான போராட்டத்தில் ஈடுபட வேண்டும். இப்போராட்டம் நல்லவருக்கு வெற்றியை தருவது உறுதி.

தளரா முயற்சி

நீதி சார்ந்த இரண்டு கருத்துக்களையும் எம்.ஜி.ஆரின் தனிப் பாடல்கள் பலவற்றில் நாம் காண்கிறோம். பாடலுக்கான காட்சி, பின்னணி பெரும்பாலும் எம்.ஜி.ஆரின் குற்றமற்றவராக இருந்து அவர் மீது குற்றம் சுமத்தப்படும் போது நீதி ஒருநாள் வெல்லும் தனக்கு நீதி கிடைக்கும் நீதிக்கான போராட்டத்தை தான் தொடர்ந்து நடத்துவதில் தளர்ச்சியடைய மாட்டேன். அனைவரும் நீதிக்குத் தலை வணங்கித்தான் ஆக வேண்டும் என்ற எண்ணங்களை கொண்டு அவர் பாடுவதாக பல பாடல்கள் அவர் படங்களில் இடம் பெற்றுள்ளன.

இதே சூழ்நிலையில் ஒரு சாமான்யன் இருந்தால் 'அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்' என்று அவனுக்கு ஆறுதல் சொல்லி நீதி கிடைக்கும் கவலைப்படாதே என்று பெரியவர்கள் நம்பிக்கை அளிப்பது உண்டு. அதுபோல எம்.ஜி.ஆரும் அநீதி அநியாயம் என்பதெல்லாம் தற்காலிகமானதுதான்; முடிவில் நீதியே வெல்லும் என்ற நம்பிக்கையை ஊட்டும் வகையில் இந்தக் கருத்துக்களைத் தன் பாடல்களில் வைத்துள்ளார்.

வழிகாட்டிப் பாடல்கள்

'இருப்பவன் வீட்டு கோழி முட்டை இல்லாதவன் வீட்டு அம்மிக்கல்லையும் உடைக்கும்' என்பது பழமொழி. பணம் இருப்பவனின் அதிகாரம் சிறிதாக இருந்தாலும் பணம் இல்லாதவனை அது பெரிதாகப் பாதிக்கும் என்பது நடைமுறையில் காணப்படும் செயல் என்பதால் ஏழை மக்கள் தமக்கு நீதி கிடைக்காத போது அல்லது அநியாயங்கள் நடக்கும் போது அதிகார வர்க்கத்தினருடன் எதிர்த்து நிற்க இயலாது என்று மனம் சோர்ந்து போய் விடுகின்றனர். அச்சமயங்களில் அவர்கள் பொழுதுபோக்குக்காக தன் மனக் கவலை தீர்வதற்காக ஆடல் பாடல் காட்சிகளை கொண்ட திரைப்படங்களைப் பார்க்க வரும்போது வருகின்றனர்.

இப்படங்களில் எம்.ஜி.ஆர். படம் மட்டும் மனச்சோர்வு அடைய வேண்டாம் நீதி கிடைக்கும் கொஞ்சம் பொறுத்திருங்கள்; நீதி கிடைக்கும்வரை சலிப்படையாதீர்கள் என்று அவர்களை நேர்வழியில் முடுக்கிவிட்டு அவர்கள் செல்ல வேண்டிய பாதை எதுவென க் காட்டுகின்றன. எனவே ***எம்.ஜி.ஆர். பாடல்கள் நீதியின் மீது நம்பிக்கை கொள்ளத் தூண்டுவதில் மக்களுக்கு அவை வழிகாட்டிப் பாடல்களாக அமைகின்றன****.*

நீதி கருத்துக்களை உள்ளடக்கிய எம்.ஜி.ஆரின் தனிப் பாடல்கள், பணக்காரனின் அநியாயத்துக்குக் கட்டுப்பட்டு ஏழைகள் வாய்மூடி மௌனிகளாக இருக்க வேண்டாம். நீதிக்கான போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தால் நம் பக்கம் இருக்கும் நியாயமும் நேர்மையும் நமக்கு நீதியைப் பெற்று தரும் என்று நம்பிக்கை ஊட்டும் வகையில் செயல்பட்டு மக்களைப் புரட்சிப் பாதையில் போராட்டப் பாதையில் செல்லும்படி அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்றன.

நீதியின் நிச்சயமான வருகை

ஆனந்த ஜோதி படத்தில் எம்.ஜி.ஆர். குற்றவாளி ஆக்கப்பட்டு அவர் ஒளிந்து மறைந்து வாழ்ந்து கொண்டிருந்தபோது நல்லவன் துன்பப்படுவதற்கான காரணம் என்ன? கடவுள் ஏன் இவ்வாறு நல்லவர்களுக்கு துன்பம் அளிக்கிறார்? என்ற கேள்வியை தனக்குள்ளாகக் கேட்டுக் கொண்டு தானும் தன் மனசாட்சியும் ஆக இரண்டு உருவங்கள் ஆகி கருத்துக்களைப் பாடி வருவதாக ஒரு பாடல் காட்சி உண்டு. இக்காட்சியில் ஒருவன் தான் படும் துன்பங்களை எல்லாம் சொல்லிக் கொண்டு வரும் பொழுது இறுதியில் அவனுடைய மனசாட்சி இந்தத் துன்பங்களைப் போக்குகின்ற வழி என்ன என்பதைச் சொல்லி அந்த துன்பங்களுக்கான தீர்வை காட்டுகின்றது.

"தேடியும் கிடைக்காது நீதி தெருவினில் விற்காது

சாட்டைக்கு அடங்காது நீதி சட்டத்தில் மயங்காது"

என்ற வரிகள் நீதியைத் தேடி நீதிமன்றத்துக்கு போக வேண்டுமே தவிர தெருவில் இருப்போரிடம் புலம்பி தீர்ப்பதால் பயனில்லை என்ற கருத்து உணர்த்தப்படுகிறது.

சட்டத்தை வளைத்தல்

அதிகாரம் படைத்தவர்கள் சாட்டையால் அடித்து உதைத்தாலும் ஏழைகளுக்கு கிடைக்க வேண்டிய நீதி கிடைக்காமல் போகாது. அவர்களால் சட்டத்தை வளைக்க முடியும் என்றாலும் இறுதியில் நீதி தான் வெல்லும் என்பதை உணர்த்தும் வகையில் சில பாடல் வரிகள் அமைந்துள்ளன. ரிக்க்ஷாக்காரன் (1971) படத்தில் அசோகன் ஒரு கொலையை செய்துவிட்டு அதை சட்டத்தில் உள்ள ஓட்டைகளின் உதவியுடன் மறைத்துவிட்டு அதற்கு உதவிய வழக்கறிஞரோடு விருந்து களியாட்டங்களில் ஈடுபட்டிருப்பார். அங்கு சிரிக்கும் சத்தத்தையும் அசோகனின் செயலால் அனாதையாகி போன ஒரு சிறு குழந்தையின் புன்சிரிப்பையும் ஒப்பிட்டு எழுதப்பட்ட பாடல் ஒன்றில்

“நாணல் போல வளைவதுதான் சட்டமாகுமா?

அதை வளைப்பதற்கு வழக்கறிஞர் பட்டம் வேணுமா?”

என்ற வரிகளும்

“தோட்டம் காக்கப் போட்ட வேலி

பயிரைத் திண்பதோ அதைக் கேள்வி கேட்க

ஆளில்லாமல் பார்த்து நிற்பதோ

நான் ஒரு கை பார்க்கிறேன்

நேரம் வரும் கேட்கிறேன்

பூனை அல்ல புலி தான் என்று

போகப் போகக் காட்டுகிறேன்”

என்று எம்.ஜி.ஆர். பாடும் வரிகள் படம் பார்ப்பவருக்கும் நமக்காக வாதாட நமக்காக போராட எம்.ஜி.ஆர். இருக்கிறார் என்ற ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தியது.

சொந்தக் கருத்து சேர்த்து கொடுத்த சொத்து

எம்.ஜி.ஆர். தம்மைக் காப்பாற்ற வருவார் என்ற நம்பிக்கையே பிற்காலத்தில் அவரது புதிய கட்சிக்கு அவர்கள் மனப்பூர்வமாக ஆதரவளிக்கவும் உதவின. எம்.ஜி.ஆர். படத்தில் பாடல் வரிகள் என்பது பாடலாசிரியர் எழுதி பின்னணி பாடகர் பாடி எம்.ஜி.ஆர். வாயசைத்து கையசைத்து நடித்து பதிவு செய்யப்பட்டது அல்ல. மற்றவர்களின் படங்களுக்கு இந்த நடைமுறை பொருந்தும். ஆனால் எம்.ஜி.ஆரைப் பொருத்தவரை பாடலாசிரியர் பாடல் எழுதி முடித்ததும் அவர் அந்தப் பாடலை வாங்கி படித்துப் பார்த்து அந்தக் காட்சிக்கு அந்தப் பாடலில் உள்ள வரிகளும் வார்த்தைகளும் பொருத்தமாக இருக்கின்றனவா என்பதை ஆராய்ந்து பொருத்தமாக இல்லை என்று உணர்ந்தால் உடனே அவற்றை மாற்றும்படி கூறுவார். பாடல் எழுதுவது இன்னொருவருடைய பணி; அதில் அவர் மேதமை பெற்றவர்; அவருடைய பணியில் நாம் தலையிடக்கூடாது என்று எம்.ஜி.ஆர். எப்போதும் நினைத்தது கிடையாது. இது எம்.ஜி.ஆர். படம். இப்படத்தின் வெற்றிக்கு அனைத்து கூறுகளும் தங்களுடைய பங்களிப்பை அளிக்க வேண்டும். இது வாலி பாட்டு, இது கண்ணதாசன் பாட்டு என்று இப்பாட்டுக்குப் பெயர் வரப்போவதில்லை. இது எம்.ஜி.ஆர். பாட்டு என்றுதான் காலங்காலமாக நிற்கப்போகிறது. எனவே எம்.ஜி.ஆர். பாடுகிறார் என்று தான் மக்கள் கருதுவார்களே தவிர இன்னொருவர் எழுதி கொடுத்ததற்கு எம்.ஜி.ஆர். வாயசைக்கிறார் என்று ஒருபோதும் ரசிகர்கள் கருதுவது கிடையாது.

எம்.ஜி.ஆர். வாக்கு தெய்வ வாக்கு

எம்.ஜி.ஆருடைய வார்த்தைகளைத் தெய்வ வாக்காகக் கருதிய ஏழை மக்களுக்கு நல்ல கருத்துக்களையும், அறிவுரைகளையும் பாடல்களின் மூலம் சொல்லி அவர்களை ஊக்கப்படுத்தி உற்சாகப்படுத்தி நன்னெறியில் வாழும்படி செய்ய வேண்டும் என்பதில் எம்.ஜி.ஆர். கவனமாக இருந்தார். அதனால் அவருக்கு மனம் ஒப்பாத ஒரு சொல்லைக் கூட தன் பாடலில் இடம் பெற விடமாட்டார். இந்த காட்சிக்குத் தேவையான

கருத்து இது என்று அவர் விரும்பும் கருத்தை வெளிப்படுத்தும் வகையில் மிகச் சிறப்பாக அந்த பாடல் வரிகள் இருந்தால் மட்டுமே அந்த பாடலை ஏற்றுக்கொள்வார். இல்லை என்றால் வேறு ஒரு கவிஞரிடம் கொடுத்து பாடல் எழுதி வாங்க தயங்கவே மாட்டார். அவரிடம் கொடுத்தால் இவர் கோபித்துக் கொள்வாரே இவர் என்ன நினைப்பாரோ என்ற எண்ணங்களுக்கு இடம் கொடுக்காமல் தன்னுடைய படம் சிறப்பாக வரவேண்டும் என்பதில் மட்டுமே கருத்துச் செலுத்துவார்.

இன்னொரு படத்தில் நீதி சில காலம் மறைந்திருக்கும் உரிய காலத்தில் தன்னை வெளிப்படுத்தும் என்பதை உணர்த்தும் வகையில்

“என்னதான் நடக்கும் நடக்கட்டுமே

இருட்டினில் நீதி மறையட்டுமே

தன்னாலே வெளிவரும் தயங்காதே

ஒரு தலைவன் இருக்கிறான் மயங்காதே”

என்று பல்லவியை ஆரம்பிக்கும்போது தன்னுடைய தலைவனான அறிஞர் அண்ணாவையும் அவருடைய வழியில் செயல்படுகின்ற திமுகவையும் அதன் தொண்டர்களையும் சேர்த்தே இப்பாடலுக்குள் கொண்டுவந்துவிடுகிறார். ஒரு தலைவன் இருக்கிறான் மயங்காதே என்ற வரி அண்ணா இருக்கும்போது தொண்டர்கள் கவலைப்பட வேண்டிய தேவையில்லை. அவர் தன் தம்பிகளைப் பாசத்தோடு கவனித்து அவர்களின் துன்பத்தை பிரச்சனைகளை தீர்த்து வைப்பார் என்ற மறைமுகமான ஒரு நற்செய்தியையும் ரசிகர்களுக்குத் தந்துவிடுகிறார். நீதி சில காலம் மறைந்தாலும் தன்னாலே வெளிவரும் என்ற நம்பிக்கையைத் தன் ரசிகர்களுக்கு அளிக்கிறார்.

என் அண்ணன் (1970) படத்தில் நிரபராதியான எம்.ஜி.ஆர். சிறையில் அடைபட்டுக் கிடக்கும் போது நல்லவர்கள் சிறையிலும், குற்றம் செய்தவர்கள் வெளியிலும்

இருக்கும் நிலையைப் பற்றி **கடவுள் ஏன் கல்லானார்** எனத் தொடங்கும் பாடலில் தெரிவிக்கின்றார்

"சதிச்செயல் செய்தவன் புத்திசாலி

அதை சகித்துக் கொண்டு இருந்தவன் குற்றவாளி

உண்மையை சொல்பவன் சதிகாரன் இது

உலகத்தில் ஆண்டவன் அதிகாரம்"

என்று கடவுளை நொந்து கொண்டவர்.

"நெஞ்சுக்கு தேவை மனசாட்சி அது

நீதி தேவனின் அரசாட்சி

அத்தனை உண்மைக்கும் அவன் சாட்சி மக்கள்

அரங்கத்தில் வராது அவன் சாட்சி"

என்று நீதிமன்றத்துக்கு அவன் சாட்சி வராது என்று பாடுவார். இப்பாட்டில் அவரவர் தனது மனசாட்சி படி நடந்தால் அங்கு நீதி தேவன் அரசாட்சி நடப்பதாக அர்த்தம் என்று பாடுவது மக்களை நேர்வழியில் பயணிக்க தூண்டுகிறது. மனசாட்சிக்கு புறம்பாக நடக்கக் கூடாது என்ற கருத்தையும் இவ்வரிகள் தெளிவாக்குகின்றன.

நீதிக்கான போராட்டம்

நீதி கண்டிப்பாக கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஊட்டிய எம்.ஜி.ஆரின் பாடல்கள் நீதிக்கான போராட்டம் பற்றியும் ஆங்காங்கே எடுத்துரைக்கின்றன. அவருடைய பாடல்களில் இரண்டாவது முக்கிய கருத்தாக அமைவது நீதிக்கான போராட்டம் ஆகும். நீதிக்காக மனிதன் சலிப்பின்றி போராட வேண்டும் என்பதை அவரது பாடல் வரிகள் வலியுறுத்துகின்றன. அண்ணா திமுக கட்சி ஆரம்பித்த பின்பு வந்த உலகம் சுற்றும் வாலிபன் படத்தில் அரசியலே கிடையாது என்றாலும் கூட பெயர் போடும்போது வருகின்ற பின்னணிப் பாடல் [டைட்டில் சாங்] அக்காலகட்டத்தின் அரசியலை தெள்ளத் தெளிவாக படம் பார்த்தவர்களுக்கு விளக்கியது. அப்போது அண்ணா திமுக கட்சியின்

தோற்றமும் அதற்கான காரணமும் நீதிக்கான போராட்டமே என்பதை விளக்குகிறது.

“நீதிக்கு இது ஒரு போராட்டம் இதை

நிச்சயம் உலகம் பாராட்டும்”

என்று தன் கட்சியின் கொள்கையே நீதிக்கான போராட்டம் என்பதை குறிப்பிடுகிறார்.

“வல்லோர்கள் சுரண்டும் பொல்லாத உலகம்

இல்லாமல் மாறும் ஒரு தேதி”

என்ற வரிகள் நீதி நிச்சயம் வெல்லும்; பொருளாதாரச் சுரண்டல் ஒய்ந்து விடும் என்ற ஒரு நம்பிக்கையான நற்செய்தியை இப்பாடல் படம் பார்த்தவர்களுக்கு கொடுப்பதால் அண்ணா திமுக கட்சிக்கு ஆதரவு பெருகியது.

உலகம் சுற்றும் வாலிபன் (1973) படம் வந்த 20 நாட்களில் நடைபெற்ற திண்டுக்கல் இடைத்தேர்தலில் அண்ணா திமுக முதன் முதலாக களம் இறங்கி இருந்தது. அப்போது அந்த தேர்தலில் தமிழகத்தின் ஐந்து மிகப் பெரிய கட்சிகளான ஸ்தாபன காங்கிரஸ், இந்திரா காங்கிரஸ், திமுக, கம்யூனிஸ்ட் ஆகியவை போட்டியிட்டன. ஐந்துமுனை போட்டியாக திண்டுக்கல் இடைத் தேர்தல் நடைபெற்ற போதும் அண்ணா திமுக மட்டுமே 52 சதவீத வாக்குகளைப் பெற்று மக்களிடையே தான் பெற்றிருந்த பேராதரவை உறுதி செய்தது. ஜனநாயக நாட்டில் அரசியல் களத்தில் முதல் தேர்தலில் 52 சதவீத வாக்குகளைப் பெறுவது என்பது இதுவரை நடந்திராத ஒரு அதிசயமாகும். எம்.ஜி.ஆரின் நீதிக்கான போராட்டத்தை நிச்சயமாக உலகம் பாராட்டியது என்பதை இத்தேர்தல் முடிவுகள் அரசியல் உலகுக்கு தெளிவாக்கின.

நீதியின் தீபம் ஏந்திய பயணம்

அண்ணா திமுக ஆரம்பித்த பிறகு எடுக்கப்பட்ட படங்களில் கலைஞர் மீதான ஊழல் குற்றச்சாட்டுகளை

முன்வைத்து அதற்கான சட்ட நிவாரணங்களை தேடி அவர் அரசியல் பணிகளை தொடர்ந்தார். அதே வேளையில் தன்னுடைய நீதிக்கான போராட்டத்தை அரசியல் பயணத்தை தன் படங்களில் பாடல்கள் மூலமாகவும் கதை வசனம் காட்சிகள் மூலமாகவும் உறுதி செய்து கொண்டே வந்தார். மீனவ நண்பன் (1974) படத்தில் ஏழையாக வந்து பணக்கார மாமனாருடன் மோதுகின்ற காட்சிகளில் ஏழையின் உரிமைக் குரலை உயர்த்தினார். பணக்காரனை, அநியாயக்காரனை எதிர்க்கும் நேர்மையான ஒரு ஏழையின் குரலாக அப்படத்தில் இவரது பாட்டு ஒலித்தது. பாட்டின் வரிகள் சில அண்ணா திமுகவில் உள்ள ஒரு சாதாரண தொண்டனின் உரிமைக்குரல் ஆகவும் கொள்கை முழக்கமாகவும் அமைந்தன.

நீதியின் தீபங்கள் ஏந்திய கைகளில்

லட்சிய பயணம் இது

இதில் சத்திய சோதனை எத்தனை நேரினும்

தாங்கிடும் இதயம் இது

நல்லவன் லட்சியம்

வெல்வது நிச்சயம்

அண்ணா அன்று சொன்னார்

என்றும் அது தான் சத்தியம்

மற்றும்

அண்ணனின் பாதையில் வெற்றியே காணலாம்

தர்மமே கொள்கையாய் நாளெல்லாம் போற்றலாம்

போன்ற வரிகள் அண்ணா திமுக நீதிக்கான பயணத்தில் அடியெடுத்து வைத்துள்ள தனது கட்சி இந்த போராட்டத்தில் கண்டிப்பாக அண்ணாவின் வழியில் வந்த தம்பிகளான அண்ணா திமுகவினருக்கு வெற்றியை அழிப்பது உறுதி என்ற நம்பிக்கையை அளித்தது. எம்.ஜி.ஆர். தன் ரசிகர்களுக்கும், தன் தொண்டர்களுக்கும் பாடல் வரிகள் மூலமாக நீதியின்பால்

நம்பிக்கை ஊட்டினார். இந்த நம்பிக்கை அடுத்து வந்த சட்டமன்ற தேர்தலில் உறுதியாகிவிட்டது. அவர் காலம் வரை அடுத்தடுத்து வந்த சட்டமன்ற தேர்தலில் நல்லவன் லட்சியம் வெல்வது நிச்சயம் என்ற வரிகளை உண்மையாக்கி கொண்டே வந்தனர்.

நீதியின் வெற்றி

ஆரம்ப காலத்தில் இருந்து தன்னுடைய படங்களில் நீதி வெற்றி பெற வேண்டும். நீதி கிடைப்பதற்கான முயற்சியில் தளர்ச்சி அடையக் கூடாது என்றார் கருத்துக்களைப் புகட்டிய எம்.ஜி.ஆர். நீதிக்கு பின் பாசம் (1963), நீதிக்கு தலைவணங்கு (1976) போன்ற கருத்துக்களை எல்லாம் தன் படத்தின் பெயர்களாகவும், பாடல்களாகவும் பாடல்களின் வரிகள் ஆகவும் ஆக்கி மக்களுக்கு எடுத்துச் சொல்லிய படியே வந்தார். தானே ஒரு குற்றம் செய்திருந்தாலும் சட்டத்தின் கைகளில் தன்னை ஒப்படைக்கவேண்டும். நீதிதேவதையின் தீர்ப்புக்கு கட்டளைக்குக் கட்டுப்பட வேண்டும் என்ற கருத்தை உறுதிப்படுத்தும் வகையில் அவர் நீதிக்கு தலைவணங்கு என்ற படத்தில் நடித்திருந்தார். நீதிக்குப் பின் பாசம் என்ற படத்திலும் அப்பா அம்மா அண்ணன் தம்பி ஆகிய நால்வருக்கு இடையிலும் நடக்கும் போராட்டத்தில் பாசத்துக்கு இடமில்லை நீதிக்கு தான் முதலிடம் என்ற ஒப்பற்ற கருத்தை உணர்த்தும் வகையில் கதைப்பின்னலும் வசனமும் காட்சிகளும் இடம் பெற்றிருந்தன.

நீதி மாலையோடு தேடி வரும்

என் அண்ணன் படத்தில் முதல் காட்சியில் அவர் குதிரை வண்டிக்காரனாக அறிமுகமாகும் போது முதலில் குதிரை வண்டியின் சக்கரம் பின்பு குதிரையின் பாதங்கள் பிறகு அதன் முழு கால், அதன் பிறகு அதன் முகம், எம்.ஜி.ஆரின் உடல் நிறைவாக அவருடைய முகம் என்று மெல்ல மெல்ல படிப்படியாக காட்டிக் கொண்டு வந்து எம்.ஜி.ஆர். முகம் வந்ததும் ஹே என்ற உற்சாக ஒலியுடன்

"நெஞ்சம் உண்டு நேர்மை உண்டு ஓடு ராஜா

நேரம் வரும் காத்திருந்து பாரு ராஜா

அஞ்சி அஞ்சி வாழ்ந்தது போதும் ராஜா

நீ ஆற்று வெள்ளம் போல் எழுந்து ஓடு ராஜா"

என்ற பல்லவியுடன் ஒரு உற்சாகமான பாடல் தொடங்கும் இப்பாடலின் கடைசி சரணத்தில் அதில் **நீதி உன்னைத் தேடி வரும் மாலை தொடுத்து** என்று முடியும். நீதி வெற்றியை அழைக்கும் போது தனது பாராட்டுக்களையும் கொண்டு வரும் என்ற மகிழ்ச்சியான தகவலை இங்கு தருகிறார்.

முதலில் இப்பாடல் வரி '**அதில் நீதி வரவில்லை என்றால் வாளை நிமிர்த்து'** என்று எழுதப்பட்டிருந்தது. ஆனால் தணிக்கை குழுவினர் இப்பாடல் நீதிக்காக வன்முறையில் இறங்கலாம் என்ற கருத்தை சொல்வதாக இருப்பதால் இவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியாது என்று அனுமதி கொடுக்க மறுத்துவிட்டனர். நீதிக்காகவும் கூட வன்முறை கூடாது என்று கூறியதால் பின்னர் அவ்வரி மாற்றப்பட்டு நீதி உன்னை தேடி வரும் மாலை தொடுத்து என்று பாசிட்டிவான சிந்தனையுடன் திருத்தப்பட்டது. ஆனால் படத்தில் இக்காட்சியில் எம்.ஜி.ஆர். வாளை நிமிர்த்து என்ற வரிகளுக்கு கையசைத்து பாடுவதாகவே எடுக்கப்பட்டிருந்தது. அது அப்படியே இன்றும் படத்தில் இக்காட்சியில் காணப்படுகின்றது இக்காட்சியைக் காணும் போது மாலை தொடுத்து என்பதற்கும் இவருடைய கையசைக்கும் தொடர்பு இல்லையே என்று தோன்றலாம் பாடல் வரி பின்னர் நிறுத்தப்பட்டதால் பாடலில் மட்டுமே அத்திருத்தம் இடம் பெற்றுள்ளது.

நிறைவு

நீதியே இறுதியில் வெற்றி பெறும். நீதிக்கு சோதனை வந்தாலும் அது சோர்ந்து விடாது நீதி தன் இருப்பை உறுதிப்படுத்தும்; நிலைநிறுத்தும் என்ற ஒரு நம்பிக்கை ஏழைக்கு இருந்தால் அவன் வாழ்வில் சோர்வடைய மாட்டான். என்றும் நீதிக்காக போராடும் துணிச்சல்

உடையவனாக இருப்பான். இவ்வுலகில் நிறைய நன்மைகள் உண்டு நல்லவர்கள் உள்ளனர். நல்லதுக்கு காலம் உண்டு என்ற ஆக்கப்பூர்வமான [பாசிட்டிவான] சிந்தனை அவன் வாழ்க்கைக்கு உற்சாகத்தைத் தரும்; ஊக்கம் அளிக்கும். இதைத்தான் எம்.ஜி.ஆர். தன் பாடல்களை படங்களில் செய்து வந்தார்.

"MGR is an uplifting person; if you are with him for five minutes you will feel great and happy"

என்று ஓர் அயல்நாட்டு நண்பர் எம்.ஜி.ஆரைச் சந்தித்த பின்பு தெரிவித்தார்.



5. எம்.ஜி.ஆரின் படப்பாடல்களில் தர்ம சிந்தனை

எம்.ஜி.ஆர். என்றாலே ஈகை என்று பொருள்படும் படி அவரைப் பற்றிய ஒரு பிம்பம் எல்லோருடைய மனதிலும் பதிந்து விட்டது. தன்னிடம் வந்து கேட்டவருக்கு மட்டுமல்லாது தன்னை அணுகாமல் தள்ளி நிற்கும் பலருக்கும் கூட எம்.ஜி.ஆர். அவரவர் தேவைக்கு அதிகமாகவே எண்ணற்ற முறை உதவிகள் செய்திருக்கிறார் என்பதை பலரது பேட்டிகள் வாயிலாகவும் அவருடைய வாழ்க்கை வரலாற்றுப் பதிவுகள் வாயிலாகவும் அறிகின்றோம். அவரது தர்ம சிந்தை அவரது தனிப்பாடல்களில் பாடலாசிரியர்கள் மூலமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. தர்மமாக கொடுக்கும் தொகைக்குக் கூட வரி கேட்கிறார்கள் என்று ஒரு முறை எம்.ஜி.ஆர். தனது பேட்டியில் தெரிவித்தார். இந்த பதில் எம்.ஜி.ஆர். விளம்பரத்துக்காகவும் வரி ஏய்ப்புக்காகவும் தர்மம் செய்கிறார் என்ற வதந்திக்கு முற்றுப்புள்ளி வைத்தது. எம்.ஜி.ஆர். கொடுத்த தர்மத் தொகைக்கும் அவர் வரி செலுத்தி இருக்கிறார். ஆக அவர் வரி ஏய்ப்புக்காக தர்மம் செய்யவில்லை. உள்ளார்ந்த அன்பின் காரணமாக அவர் தொடர்ந்து பல தர்ம காரியங்களைச் செய்து வந்துள்ளார். தன்னைப்பற்றிய நல்ல விஷயங்களைப் பாடலாசிரியர்கள் எழுதித் தரும் போது அதை அவர் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கிறார். அந்தப் பாடல்கள் அவை எழுதப்பட்ட காலகட்டத்திற்கும் பொருத்தமாக இருந்தன. பிற்காலத்தில் அவை பொருத்தமாக இருந்ததையும் வரலாறு நமக்கு மெய்ப்பிக்கின்றது.

கலியுகத்தில் தர்மம் காப்பாற்றும்

அக்கிரமங்களும் அட்டூழியங்களும் பல்கிப் பெருகி பேயாட்டம் ஆடும்போது அவற்றிலிருந்து மக்களைக் காப்பாற்றக்கூடியது அவரவர் தத்தம் சக்திக்கு ஏற்றவாறு செய்யும் தர்மமே ஆகும் என்பது முன்னோர் மொழிந்த கருத்தாகும். எனவே, ‘நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்! நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்’ என்று பாரதியார் பாடியது போல மக்கள் தத்தம் சக்திக்கு ஏற்றவாறு தர்மம் செய்தால் அவர்களுக்கு இக்கலியுகத்தில் ஏற்படும் தொல்லைகள் விலகும். இக்கருத்தைத் தம் வாழ்க்கை நெடுகிலும் பின்பற்றியவர் எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர். படத்தில் நடிக்க வாய்ப்புக் கேட்டு அலைந்து கொண்டிருந்த நாட்களிலும் கூட தன் கையில் இருக்கும் பணம் நாலணா எட்டணாவாக இருந்தாலும் தன்னைவிட நலிந்த கலைஞரை பார்க்கும்போது அவர்களுக்கு அதை கொடுப்பது வழக்கமாம். என் தங்கை(1953) படத்தில் பசியினால் செத்துக் கொண்டிருக்கும் தங்கச்சிக்கு இட்லி வாங்கிக் கொண்டுச் செல்லும் போது வழியில் ஒரு பிச்சைக்காரரர் சாப்பிட்டு மூன்று நாள் ஆகிவிட்டது பிச்சை போடுங்கள் என்று கையேந்துவார். அவரிடம் ‘உனக்கு தர முடியாது என் தங்கைக்கு கொண்டு போகிறேன்’ என்று சொல்ல மனம் வராமல் அவர் கையில் எம்.ஜி.ஆர். கொடுத்து விடுவார். இது கதைக்கு எடுக்கப்பட்ட காட்சி என்றாலும் அவரது இளம் வாழ்வில் இதுபோன்ற சம்பவங்கள் நடந்ததாக அறிகின்றோம்.

எளிய வாழ்விலும் பகிர்ந்து உண்ணல்

கோவையில் நடந்த ஆரம்பகாலப் படப்பிடிப்புகளின் போது எம்.ஜி.ஆர். தன்னுடன் இருக்கும் நடிகர்களில் சமைக்கத் தெரிந்தவரை அழைத்து கோவைக்கு அருகில் உள்ள மேட்டூர் அணையில் போய் ஐந்து ரூபாய்க்கு மீன் வாங்கி வரச்சொல்லி அங்கே இருக்கும் நண்பர்களுக்கு எல்லோருக்கும் சேர்த்து நிறைய சமைக்கச் சொல்லி பகிர்ந்து உண்பது வழக்கம். கோவையில் அவர் தங்கி இருக்கும் போது

நடந்த இச்சம்பவம் பற்றி நாம் வாசித்து அறிகிறோம். அவருக்கு மட்டும் மீன் வாங்கி வரச்சொல்லி அவர் சமைத்து சாப்பிட்டு இருக்கலாம், மற்றவராக இருந்தால் அதைத்தான் செய்து இருப்பர். ஆனால் நிறைய மீன் வாங்கி வந்து நிறைய பேருக்கு பகிர்ந்து கொடுத்து சுவையான உணவை பலரோடு சேர்ந்து உண்ணும் மகிழ்ச்சியை அவர் அடைந்திருக்கிறார். இதைத்தான் அவரது ஆரம்ப காலத்திலிருந்து அந்திம காலம் வரை 'ஈத்துவக்கும் இன்பம்' பெற்றவராகவே இருந்தார் என்ற முடிவுக்கு வருகிறோம்.

ஈத்துவக்கும் இன்பம்

ஈகையினால் அவருக்கு இன்பம் கிடைத்தது. பிறருக்குக் கொடுத்து மகிழ்ந்த குணம் அவருடையது.

தண்டாமால் ஈவது ஈகை

தண்டி அடுத்தக்கால் ஈவது வன்மை;- அடுத்தடுத்து

பின் சென்றால் ஈவது காற்கூலி

பின் சென்றும் ஈயானை எச்சம் போல அறு

என்றார் அவ்வையார். பிறர் கேட்காமல் கொடுக்கும் குணம் எம்.ஜி.ஆருக்கு எப்போதும் இருந்து வந்தது. பிறர் கண்ணீர் விடுகிறார் என்பதை தெரிந்த உடனேயே அவர் அந்த இடத்திற்கு வந்து அவரது கண்ணீரை துடைப்பது வழக்கம்.

ஒருமுறை எம்.ஜி.ஆர். காரில் வந்து கொண்டிருந்த போது தொலைவில் ஒரு ஆணின் அழுகுரல் கேட்கிறது. உடனே காரை நிறுத்தி தன் உதவியாளை அனுப்பி போய் பார்த்துவிட்டு வரச்சொல்கிறார். அங்கு ஒரு குதிரை வண்டிக்காரர் தனது குதிரை இறந்து விட்டது என்று அழுது கொண்டிருக்கிறார். சுற்றிலும் அவர் குடும்பத்தினரும் உட்கார்ந்து இருக்கிறார்கள். உடனே எம்.ஜி.ஆர் அவரை அழைத்து குதிரை வாங்குவதற்கும் பணம் கொடுத்து குதிரை வாங்கி வந்து வண்டியில் பூட்டி ஓட்டும் வரை அவர் குடும்பத்தினரின் சாப்பாட்டுச் செலவுக்கும் பணம் தருகிறார். குதிரைக்காரர் குதிரை வண்டியை தயார் செய்ததும்

தோட்டத்துக்கு வந்து எம்.ஜி.ஆரை பார்த்து நன்றி சொல்லிவிட்டுப் போகிறார். இது போன்ற உதவிகள் சாதாரணமாக எவரும் செய்யக்கூடியது அல்ல. சாலையில் போகும் போது கேட்கும் கண்ணீருக்கெல்லாம் காரணம் கேட்டு அதை தீர்த்து வைக்க வேண்டும் என்று எவரும் நினைப்பது கிடையாது.

எம்.ஜி.ஆர். தாமே முன்வந்து உதவும் சம்பவங்களைக் கேள்விப்படும் பாடலாசிரியர்கள் அவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து அதனை அவரது திரைப்படப் பாடலின் பாடுபொருளாக்குகின்றனர். கொடுப்பதால் இன்பமும் பாராட்டுவதால் மற்றொரு இன்பமும் அடையும் எம்.ஜி.ஆர். இதனால் பலர் நம்மிடம் வந்து உதவி கேட்போர்களின் எண்ணிக்கை மேலும் மேலும் அதிகரிக்கும் என்ற கவலை இன்றி தொடர்ந்து பிறருக்கு கொடுத்து மகிழ்வதில் இன்பம் காண்கிறார். மனநிறைவு பெறுகிறார்.

எம்.ஜி.ஆருடைய மனைவி ஜானகி அம்மையாரும் தனது கணவருடைய கொடைப் பண்புக்குக் குந்தகம் விளைவித்தது இல்லை. பொதுவாக வீடுகளில் ஆண்கள் சற்று தாராளமாக செலவு செய்யும் போது பெண்கள் அவர்களின் செயல்பாடுகளைக் கண்டிப்பதும் அதற்கு முட்டுக்கட்டை போடுவதும் வழக்கம். ஆனால் எம்.ஜி.ஆரின் கொடைப் பண்புக்கு ஜானகி அம்மையார் எப்போதும் முட்டுக்கட்டை போட்டது கிடையாது. ஜானகி அம்மையாரால் ஒரு தர்ம காரியம் நின்றுபோனது என்று ஒரு தகவல் கூட இதுவரை நமக்கு கிடைக்கவில்லை. எனவே காதல் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம் என்ற அவ்வையின் வாக்கின்படி இருவரும் காதலாலும் கொடையாலும் ஒருமித்த கருத்துடையவர்களாக வாழ்ந்ததால் மட்டுமே எம்.ஜி.ஆர். கொடைப்பண்பு மிக்கவராக புகழ் பெற முடிந்தது.

ஈகையும் இரக்கமும் பிறவிக்குணம்

கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகம் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு எம்பதி கொஷன்ட் *[empathy quotient]* ஐ

உருவாக்கியது. மரபியல் நிறுவனமான 23 and Me என்ற நிறுவனம் மிகப் பெரிய அளவில் நாற்பதாயிரம் பேரிடம் ஓர் ஆய்வை நடத்தியது. அந்த ஆய்வில் பிறரிடம் இறக்கம் காட்டுவதும் அவர்களுக்கு உதவுவதும் மரபியல் கூறுகளில் ஒன்று என்பது கண்டறியப்பட்டது. empathy எனப்படும் பண்பு பலருக்கு வெறும் அறிதல் [cognitive] நிலையில் மட்டுமே இருக்கும் ; சிலரிடம் மட்டுமே இப்பண்பு பயன் தரும் [effective] நிலையில் காணப்படும். இவர்களின் மரபணுவில் ஈகையும் இரக்கமும் இணைந்து காணப்படும். [The Times of India, 13-3-18, p.11]. இதைத்தான் அவ்வையார் பிறவிக்குணம் என்றார்.

எம்.ஜி.ஆர். பாடல்களில் பதிவான அவரது தர்ம சிந்தை

எம்.ஜி.ஆரின் பாடல்களில் இவருடைய கொடைப் பண்பு தனிப்பாடல்களிலும் காதல் பாடல்களிலும் விளக்கப்பட்டுள்ளது. தர்மம் தலைகாக்கும்(1963) படத்தில் எம்.ஜி.ஆர்., சரோஜாதேவியின் அப்பா எம் ஆர் ராதாவிடம் தான் ஒரு மருத்துவர் என்றும் ஒரு தர்ம ஆஸ்பத்திரி வைத்து நடத்துவதாகவும் பேசிக்கொண்டே இருக்கிறார். அப்போது அவர் தலைக்கு மேல் இருந்த ஒரு சரவிளக்கை எலி கடித்து கொண்டிருந்ததைப் பார்த்த சரோஜாதேவி எம்.ஜி.ஆரை இழுத்து கீழே உருட்டி விடுகிறார். சரவிளக்கு அவர் உட்கார்ந்திருந்த இடத்தில் விழுந்து உடைந்து சிதறுகிறது. அவர் எழுந்து அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு தன் காரில் ஏறி பயணத்தை தொடர்கிறார். அப்போது "தர்மம் தலைகாக்கும் தக்க சமயத்தில் உயிர் காக்கும்"என்ற பாட்டை பாடிய படி செல்கிறார்.

"தர்மம் தலை காக்கும்

தக்க சமயத்தில் உயிர் காக்கும்

கூட இருந்தே குழி பறித்தாலும்

கொடுத்தது காத்து நிக்கும்...

செய்த தர்மம் தலை காக்கும்"

எனத் தொடங்கும் பாடலில் .

"அள்ளிக்கொடுத்து வாழ்பவன் நெஞ்சம்

ஆனந்த பூந்தோப்பு வாழ்வில்

நல்லவர் என்றும் கெடுவதில்லை இது

நான்குமறை தீர்ப்பு"

என்றும்

"மலை போலே வரும் துயரங்கள் யாவும்

பனி போல் நீங்கி விடும்

நம்மை வாழவிடாதவர் வந்து

நம் வாசலில் வணங்கிட வைத்து விடும்"

என்று பாடும் வரிகள் மிகவும் கருத்து பொதிந்தவையாகும். பிறருக்கு உதவி செய்வதால் உதவியைப் பெறுவோர் மட்டுமல்லாமல் உதவியை அளிப்பவரின் மனமும் மகிழ்ச்சி அடைகின்றது என்ற கருத்தும், பிறருக்கு உதவி செய்து வாழ்பவர்கள் வாழ்க்கையில் மலைபோல் வரும் துயரங்கள் கூட பனிபோல் நீங்கி விடும் என்ற கருத்தும் எதிரிகள் கூட நம்மிடம் சரணடைந்து விடுவார்கள் என்ற கருத்தும் எம்.ஜி.ஆர். வாழ்க்கையில் பின்னர் உண்மையாகவே நடந்துவிட்டன.

இப் பாட்டு வரிகள் இப்படத்துக்காக எழுதப்பட்ட போது படத்துக்கு மிகவும் பொருத்தமாக இருந்தது என்றாலும் அவரது வாழ்க்கையிலும் அவை மிகவும் பொருத்தமாக இருந்தன. எம்.ஜி.ஆரை., எம் ஆர் ராதா துப்பாக்கியால் சுட்ட போது அவர் பின்கழுத்தில் காதுக்குப் பின்னால் பாய்ந்த குண்டு அவருக்கு உயிர் சேதத்தை ஏற்படுத்தாமல் அங்கேயே தங்கியிருந்து பின்னர் ஒருநாள் இருமும் போது வெளியே வந்துவிட்டது. அந்த துப்பாக்கிச் சூட்டுக்கு பின்பு எம்.ஜி.ஆரால் பேச முடியாது சினிமாவில் நடிக்க முடியாது என்று எதிரிகள் ஆர்ப்பரித்துக் கொண்டிருந்த போது எவ்வித சேதாரமும் இல்லாமல் எம்.ஜி.ஆர். உயிர்

பிழைத்து மீண்டும் சினிமாவில் நடித்து முன்பைக் காட்டிலும் அதிகப் புகழும் பணமும் பெற்றார்.

தர்மம் தலைகாக்கும் என்ற வரி அவருடைய வாழ்க்கையில் உண்மையிலேயே நடந்து விட்டது. இதனைக் கவனித்த ரசிகர்கள் அவரை ஒரு அவதார புருஷனாக ஒரு தெய்வ பண்புடையவராகவே கருதி மகிழ்ந்தனர்.

எம்.ஜி.ஆர். ஜாதி மத பேதம் அற்றவர்

எம்.ஜி.ஆருடைய ரசிகர்கள் அனைத்து மதத்தையும் சாதியையும் சேர்ந்தவர்களாக இருந்தனர். தன்னை வாழ வைத்த, தான் வசதியாகவும் புகழோடும் வாழ உதவிய ரசிகர்களை அவர் மிகவும் நேசித்தார் அவரிடம் ஜாதி மத துவேஷம் காணப்படவில்லை. இதனை அறிந்த பாடலாசிரியர்கள் இக்கருத்தையும் சேர்த்து பல பாடல்களில் பதிய வைத்தனர்.

‘இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்

பட்டாங்கில் உள்ளபடி’

என்று அவ்வையார் பாடிய கருத்தை பாடலாசிரியர் எம்.ஜி.ஆரின் வாய்மொழியாக ஒரு படத்தில் தன்னுடைய பாட்டில் பதிய வைத்தார்.

“கொடுப்பவன் தானே மேல் ஜாதி

கொடுக்காதவனே கீழ் ஜாதி,

படைத்தவன் பேரால் ஜாதி வைத்தான்

பாழாய்ப் போன இந்த பூமியிலே”

என்று நாடோடி படத்தில்

“கடவுள் செய்த பாவம்

இங்கு காணும் துன்பம் யாவும்

என்ன மனமோ என்ன குணமோ – இந்த

மனிதன் கொண்ட கோலம்

எனத் தொடங்கும் பாடலில் ஒரு சரணம் அமைந்துள்ளது.

எம்.ஜி.ஆரின் பாடல் வரிகள் பிறருக்குக் கொடுப்பவனுக்கு இந்த சமூகத்தில் மிகப் பெரிய அந்தஸ்து இருப்பதை உணர்த்துகின்றது. கொடுப்பதனால் மட்டுமே ஒருவன் பெரியவனாக சமூகத்தில் மதிக்கப் படுகின்றான். பிறருக்கு தன்னால் ஆன உதவிகளை பணமாகவோ பொருளாகவோ செயலாகவோ செய்ய இயலாதவன் கீழ்த்தரமானவன் என்ற கருத்தை பாடலாசிரியர்கள் இங்கு பதிவு செய்வது எம்.ஜி.ஆரின் புகழை பரப்பும் ஒரே நோக்கத்தினால் ஆகும்.

பாதுகாப்பு அளித்தல்

உதவி என்பது பணமாக மட்டுமே இருக்க வேண்டும் என்பதில்லை என கருத்தில் நம்பிக்கை கொண்டிருந்த எம்.ஜி.ஆர். மற்றவர்களுக்கு அவர்கள் கேட்காமலேயே வேறு பல உதவிகளையும் செய்து இருக்கிறார். கே ஆர் விஜயா ஒரு பேட்டியில் எம்.ஜி.ஆரைப் பற்றி குறிப்பிடும் போது அவர் இருந்தால் எங்களுக்கு பாதுகாப்பாக இருக்கும் என்று குறிப்பிட்டார். இது அவர் மட்டும் தெரிவித்தது அல்ல வேறு பல நடிகையரும் தங்களது பேட்டியில் எம்.ஜி.ஆர். படப்பிடிப்பு என்றால் நாங்கள் பாதுகாப்பாக உணர்வோம். எங்களுக்கு பயம் என்பதே கிடையாது. அவர் எங்களை பத்திரமாகப் பாதுகாத்துக் கொள்வார் என்று சச்சு, லக்ஷ்மி, லதா போன்றோரின் பேட்டிகளிலும் நாம் அறிகின்றோம்.

கலைமாமணி விருது வாங்கிய விழா முடிந்ததும் எம்.ஜி.ஆர். விஜயாவிடம் 'நீ எப்படி போகப் போகிறாய்' என்று கேட்கிறார். விஜயா 'நான் என்னுடைய காரில் வந்து இருக்கிறேன் காரில் போவேன்' என்று சொல்லவும், எம்.ஜி.ஆர். 'வேண்டாம் உன்னுடைய காரில் இப்போது போய் ஏறினால் கூட்டம் அதிகமாக இருப்பதால் நீ நசுங்கி விடுவாய். நீ என்னோடு வேனில் வா' என்று வேறு ஒரு வேனில் ரசிகர்கள் எதிர்பாராத வகையில் எம்.ஜி.ஆர்., கே ஆர் விஜயா மற்றும் விழாவில் பங்கேற்ற நடிகர்களும் நடிகைகளும் அந்த இடத்தை விட்டு வெளியேறி

விடுகின்றனர். விஜயாவின் டிரைவரிடம் கடற்கரைச் சாலையில் ஒரு இடத்தைக் குறிப்பிட்டு அங்கு காரை கொண்டு வந்து விடும்படி தன்னுடைய ஆட்களிடம் எம்.ஜி.ஆர். சொல்லிவிடுகிறார். அவர்கள் போய் விஜயாவின் டிரைவரிடம் சொன்னதும் விஜயாவின் டிரைவர் காரைக் கொண்டு வந்து எம்.ஜி.ஆர். குறிப்பிட்ட இடத்தில் காத்துக்கொண்டிருக்கிறார். அங்கு வந்ததும் எம்.ஜி.ஆர். அது விஜயாவின் கார் தானா என்பதை கேட்டு தெளிவு பெற்ற பிறகு விஜயாவை இறங்கி அந்தக் காரில் ஏறிப் போகும்படி செய்கிறார். அந்த கார் பத்திரமாகக் கிளம்பிப் போன பிறகு தன்னுடைய வேனில் இவர் கிளம்பிப் போகிறார். இதை விஜயா குறிப்பிட்டுச் சொல்லி எம்.ஜி.ஆருடன் இருந்தால், எம்.ஜி.ஆருடன் ஒரு விழாவிலோ படப்பிடிப்பிலோ பங்கேற்றால் நாங்கள் எவ்வித ஆபத்துமின்றி பத்திரமாக பாதுகாப்பாக இருப்போம் என்று மகிழ்ச்சியுடன் கூறினார். இதுவும் அவருடைய ஈகைப் பண்புகளில் ஒன்று தான். இதை மனிதநேய பண்பு என்று நாம் கருதினாலும் கூட செயலால் செய்யும் ஈகை என்று பொருள் கொள்ள வேண்டும்.

தேவையறிந்து உதவுதல்

ஒருவருக்கு உதவும் போது அதற்கான தேவை என்ன என்பதை அறிந்து உதவ வேண்டும் என்பார் வள்ளுவர். நம்மிடம் இருக்கிறது என்று அதிகமாக கொடுப்பதோ நம்மிடம் இல்லை என்று குறைவாக கொடுப்பதோ கூடாது. அவருக்கு எது தேவையோ அவருக்குப் பயன்படும் வகையில் அவருடைய தேவைகள் நிறைவேறும் வகையில் கொடுத்து மகிழ வேண்டும். இந்தப் பண்பு சிலரிடம் உண்டு; சிலரிடம் இருக்காது. எனவே சந்திரோதயம் (1966) படத்தில் இச்சிறப்புப் பண்பு எம்.ஜி.ஆரிடம் இருக்கின்றது மற்ற பணக்காரர்களிடம் இல்லை என்பதைக் குறிக்கும் வகையில் பாடலாசிரியர் சில வரிகளை எழுதி இருந்தார்.

“பொருள் கொண்ட பேர்கள் மனம் கொண்டதில்லை

தரும் கைகள் தேடி பொருள் வந்ததில்லை

மனம் என்ற கோயில் திறக்கின்ற நேரம்



அழைக்காமல் அங்கே தெய்வம் வந்து சேரும்

அழுதவர் சிரிப்பதும் சிரித்தவர் அழுவதும்

விதி வழி வந்ததில்லை

ஒருவருக்கென்றே உள்ளது எல்லாம்

இறைவனும் தந்ததில்லை"

என்ற வரிகள் பணம் இருப்பவனிடம் மனமிருப்பதில்லை; மனமிருக்கும் ஒருவனிடம் பணம் இருப்பதில்லை என்ற கருத்தை வெளிப்படுத்துகின்றன. மேலும் 'உன்னை அறிந்தால் நீ உன்னை அறிந்தால்' என்ற தனிப்பாடலில்

"பூமியில் நேராக வாழ்பவர் எல்லோரும்

சாமிக்கு நிகர் இல்லையா

பிறர் தேவை அறிந்து கொண்டு

வாரிக்கொடுப்பவர்கள்

தெய்வத்தின் பிள்ளை இல்லையா"

என்ற வரி எம்.ஜி.ஆர். பிறருடைய தேவையை அறிந்து கணக்குப் பார்க்காமல் நிறையக் கொடுக்கும் பண்புடையவர் என்பதால் அவர் தெய்வத்தின் பிள்ளை ஆவார்; தேவகுமாரனுக்கு நிகரானவர். அவர் ஒரு தெய்வ மைந்தன் என்று பாடலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். தேவ மைந்தன் அல்லது தெய்வத்தின் பிள்ளை என்று சொல்லும் சொற்கள் அவரை தெய்வத்திற்கு நிகராக புகழ் பெற வைக்கின்றன.

ஒளிவிளக்கு எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆரின் நூறாவது படமான ஒளிவிளக்கு (1968) அவரது வாழ்வில் மறக்க முடியாத படமாகும். படத்தில் அவர் ஒரு சிறுமியை காப்பாற்றப் போய் தீ விபத்தில் சிக்கி மரணப்படுக்கையில் இருக்கும் போது பல மதத்தைச் சேர்ந்த அண்டை அயலார் அவர் உயிர் பிழைக்க வேண்டும் என்று அனைத்து கடவுளரையும் தத்தம் கடவுளரை வேண்டிக் கொள்வர். பின்பு அவர் தெய்வத்தின் கருணையால் உயிர் பிழைத்து விடுவார். இது படத்தில் அமைந்த இக்காட்சியில் சவுகார் ஜானகி எம்.ஜி.ஆரை அண்டிப் பிழைக்கும் இளம் அனாதைப் பெண். கொழுந்தனின் கொடூர காமக் கரங்களுக்குள் சிக்காமல் பாதுகாப்பாக எம்.ஜி.ஆரின் நிழலில் வாழ்ந்து கொண்டிருக்கும் இப்பெண், எம்.ஜி.ஆர். இறந்துவிட்டால் தன்னுடைய வாழ்க்கை சிதைந்து போய் விடுமே என்ற நிலையில் எம்.ஜி.ஆர். உயிர் பிழைக்க வேண்டும் என்று முருகனிடம் அழுது மன்றாடுவார், பாட்டில்

“ஆண்டவனே உன் பாதங்களை - நான்

கண்ணீரில் நீராட்டினேன்

இந்த ஒருயிரை நீ வாழ வைக்க

இன்று உன்னிடம் கையேந்தினேன்..

முருகையா...

பன்னிரண்டு கண்களிலே,

ஒன்றிரண்டு மலர்ந்தாலும்,

என்னிரண்டு கண்களிலும்,

இன்ப ஒளி உண்டாகும்,

உள்ளமது உள்ளவரை,

அள்ளித் தரும் நல்லவரை,

விண்ணுலகம் வாவென்றால்,

மண்ணுலகம் என்னாகும்..”

என்று பாடும்போது உள்ளமதில் உள்ளவரை அள்ளித்தரும் நல்லவரை என்ற வரிகள் வருவதற்கு முன்பே ரசிகர்கள் கை தட்டி ஆரவாரம் செய்வர். இப்பாடல் சோகப் பாடல் என்றாலும் எம்.ஜி.ஆர். பிழைத்துக்கொள்வார் என்பது ரசிகர்களுக்குத் தெரியும் என்பதால் கைதட்டுவார்கள்.

இப்பாடல் உண்மையான காலகட்டம் ஒன்று தமிழக அரசியல் வரலாற்றில் வந்தது. எம்.ஜி.ஆர். சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்காகவும் மூளையில் இருந்த ரத்தக் கட்டி கரைவதற்காகவும் அமெரிக்காவில் புருக்லின் ஸ்டேட் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அப்போது அனைத்துத் திரையரங்குகளிலும் யார் படம் நடந்தாலும் இடைவெளியின் போதும் படம் முடிந்த பிறகும் இப்பாடல் இறை வேண்டல் பாடலாக ஒலித்தது. மக்கள் அழுது கடவுளிடம் வேண்டினர். எம்.ஜி.ஆர். உயிர் பிழைத்த அதிசயம் நடந்தது. இப்பாடல் முடிந்தது படத்தில் ஒரு பாட்டி செத்துவிடுவார் எம்.ஜி.ஆர். பிழைத்து விடுவார். அது போல அந்தக் காலகட்டத்தில் மூத்த அரசியல்வாதியான இந்திரா காந்தி அவரது பாதுகாப்பு அதிகாரிகளால் கொல்லப்பட்டார். எம்.ஜி.ஆர். உயிர் பிழைத்து தேர்தலில் வெற்றி பெற்று முதல்வராகவே திரும்பி வந்தார். இப்பாட்டில் வருவது போல அனைத்து மதக் கோவில்களிலும் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. மக்கள் பல்வேறு நேர்த்திக்கடன்களைச் செய்து எம்.ஜி.ஆர். உயிர் பிழைக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டனர். ஏனெனில் அதற்கு முன்பு வரை அமெரிக்காவுக்கு சிகிச்சைக்கு கொண்டு செல்லப்பட்ட அறிஞர் அண்ணா, கண்ணதாசன், கிருபானந்த வாரியார் ஆகியோர் இறந்து போய் பிணமாகத்தான் திரும்பி கொண்டு வரப்பட்டனர். எம்.ஜி.ஆர். ஒருவர் மட்டுமே முதல்வராக

போய் முதல்வராகவே திரும்பி வந்தார். சிகிச்சை பலன் அளித்து ஆரோக்கியத்துடன் வந்தார். எனவே, **உள்ளமதில் உள்ளவரை அள்ளித்தரும் நல்லவரை விண்ணுலகம் வா என்றால் மண்ணுலகம் என்னாகும்** என்ற பாடல் வரிகள் அவரது கொடைப் பண்பினால் அவர் உயிரை மற்றும் ஒரு முறை காத்துத் தந்தது.

காதல் பாடல்களில் தர்மம்

பாடலாசிரியர்கள் எம்.ஜி.ஆர். படத்தில் தனிப் பாடல்களில் அவரது தர்ம சிந்தனை பற்றிய கருத்துக்களை இடம்பெறச் செய்தது போல காதல் பாடல்களிலும் காதலிகள் அவரை வர்ணித்து பாடும்போது இடம்பெறச் செய்தனர். எம்.ஜி.ஆர். படத்தின் காதல் பாடல்களில் பெண்கள் அவரை வர்ணித்து நலம் புனைந்துரைத்துப் பாடுகின்ற தன்மை இடம்பெற்றது. காதலிகள் படங்களில் அவருடைய அழகையும் அன்பையும் வர்ணித்துப் பாடும் போது அவருடைய பொன் நிறம், இளமை கட்டுடல், தர்ம குணம் ஆகியவை தவறாமல் இடம்பெறுகின்றன.

பொன்னின் நிறம்; பிள்ளை மனம்; வள்ளல் குணம்

உலகம் சுற்றும் வாலிபன் படத்தில் தாய்லாந்து நடிகை மேதா ரூங் ராத் என்ற நடிகை எம்.ஜி.ஆருடன் ஜோடியாக நடித்திருந்தார். அவரும் எம்.ஜி.ஆரும் பாடுகின்ற ஜோடி பாடல் ஒன்றில் எம்.ஜி.ஆர் தன் காதலியை

“பச்சைக்கிளி முத்துச்சரம்

முல்லைக்கொடி யாரோ

பாவை என்னும் பேரில் வரும்

தேவன் மகள் நீயோ ?

என வருணித்துப் பாடியதற்குப் பதிலாகக் காதலி பாடும்போது

பொன்னின் நிறம் பிள்ளை மனம்

வள்ளல் குணம் யாரோ

மன்னன் எனும் பேரில் வரும்

தேவன் மகன் நீயோ” *என்கிறார். இவ்வரிகளில் எம்.ஜி.ஆரின் வள்ளல் குணமும் அவர் தேவன் மகன் என்பதும் குறிக்கப்படுவதைக் காண்கிறோம்.*

எம்.ஜி.ஆரைப் பற்றி ஜெயலலிதா அரசகட்டளை படத்தில் பாடும் தனிப்பாடலில் அவருடைய அழகும் பண்பும் கொடையும் போற்றப்படுகின்றது.

“அவன் கொடுத்தது எத்தனை கோடி

அந்த கோமகன் திருமுகம் வாழி வாழி”

என்றும்

“நல்ல கலைஞருக்கு எல்லாம் வள்ளல்”

என்றும் இப்பாடலில் அவரது வள்ளல் குணம் பாராட்டப்படுகின்றது. எம்.ஜி.ஆரை நடைமுறையில் எட்டாவது வள்ளல் என்றும் பாராட்டப்படுவது போலவே காதல் பாடல் வரிகளிலும் பாராட்டப்பட்டார். இப்பாடல் வாலி அவர்கள் படத்தின் கதாநாயகனுக்காக என்றில்லாமல் எம்.ஜி.ஆருக்காக எம்.ஜி.ஆரை நினைத்து எழுதியதாகத் தெரிவித்தார்.

“என்னைப் பாட வைத்தவன் ஒருவன் -

என்பாட்டுக்கு அவன்தான் தலைவன்

ஒரு குற்றமில்லாத மனிதன் -

அவன் கோவில் இல்லாத இறைவன்”

என்று வாலி எம்.ஜி.ஆரை நினைத்து அவரைப்பற்றி பாராட்டியே எழுதி இருந்தார். இந்த வரிகளிலும் எம்.ஜி.ஆரை இறைவன் என்று பாராட்டியிருப்பதை காணலாம்.

யாரும் இல்லை என்று சொல்லிவிட்டால் வாடுவான்

ஆர் ஆர் பிக்சர்ஸ் எடுத்த பாசம் (1962) என்ற படம் எம்.ஜி.ஆரைத் திருடனாக படம் முழுக்க காட்டியிருந்தது. மேலும் நல்ல தோற்றப் பொலிவு , நல்ல பழக்கவழக்கங்கள்

இன்றி அவர் எப்போதும் இடது கை பெருவிரல் நகத்தை எந்நேரமும் கடித்து கொண்டிருப்பவராக இப்படத்தில் நடித்திருந்த எம்.ஜி.ஆர். இறுதியில் தன் தாயின் மரணத்துக்கு தானே காரணமாகி விட்டோம் என்பதை அறிந்து உயிரை விடுவதாக படம் முடிவடையும். இப்படம் எடுக்கும்போது இயக்குனர் ஆர் ராமண்ணாவிடம் எம்.ஜி.ஆர். நான் படத்தில் இறந்து போவதாக காட்டினால் படம் ஓடாது; என்னுடைய ரசிகர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்றார். ஆனால் இராமன்னா 'இந்த கதைக்கு இப்படி முடிவு இருந்தால் தான் சிறப்பாக இருக்கும்' என்று எம்.ஜி.ஆரிடம் சொன்னார். எம்.ஜி.ஆரும் "சரி இவர் சொல்லி கேட்பவர் அல்ல; அனுபவப்பட்டு தெரிந்து கொள்பவர்" என்று விட்டுவிட்டார். முதல் நாள் முதல் காட்சியிலேயே ரசிகர்கள் ஆரவாரம் செய்து திரையரங்கின் திரைகளை கிழிக்கத் தொடங்கிவிட்டனர். அதன்பின்பு அப்படத்தைத் திரையிட முடியாமல் போய்விட்டது

பாசம் படத்தில் திருடனாக நடித்திருந்த எம்.ஜி.ஆர். இரக்கமுள்ள குணம் உடையவர் என்பதை அவரை காதலிக்கும் நாட்டியப் பெண் அவரை வர்ணித்து பாடி வரும் பாடலில் குறிப்பிட்டிருப்பார்.

இரக்கமுள்ள திருடனாக ஆனவன்;

யாரும் இல்லை என்று சொல்லி விட்டால் வாடுவான்

பொன் பொருளை அவர்க்குத் தந்து போற்றுவான்

சாலை வரை துணைக்கு வந்து வாழ்த்துவான்

போன்ற வரிகள் அவன் திருடனாக இருந்தாலும் ஏழைகளின் பால் இரக்கமுள்ளவன்; மேலும் யாரும் தன்னிடம் வாழ்க்கைக்குத் தேவையான பணம் இல்லை என்று சொல்லி விட்டால் தன்னிடம் இருக்கும் பொன் பொருளைக் கொடுத்து அவர்களை சாலை வரை பாதுகாப்பாகக் கொண்டு வந்து விடுவான் என்ற வரிகள் எம்.ஜி.ஆர் ஏழைகளிடம் இரக்கம் காட்டும் நல்ல சுபாவம் படைத்தவர் என்று பாராட்டி எழுதப்பட்ட வரிகள் ஆகும்.

இதயக்கனியில் அறிமுகப் பாடல்

எம்.ஜி.ஆர். நடித்து 1975இல் ஆகஸ்ட் மாதம் திரைக்கு வந்து வெள்ளிவிழா கொண்டாடிய மிகப்பெரிய வெற்றிப்படம் இதயக்கனி. 'இந்த கனி யார் மடியில் விழும் என்று அனைவரும் காத்துக் கொண்டிருந்த போது அது என் மடியில் விழுந்தது அதை எடுத்து என் இதயத்தில் வைத்துக் கொண்டேன்' என்று அறிஞர் அண்ணா எம்.ஜி.ஆரை தனது இதயக்கனி என்று மேடையில் பாராட்டியிருந்தார். அந்தப் பாராட்டுதலை நினைவிற்கொண்டு இப்படத்திற்கு இதயக்கனி என்று எம்.ஜி.ஆர். பெயர் சூட்டினார். படத்தின் தொடக்கத்தில் எம்.ஜி.ஆரின் அறிமுகக்காட்சியில்

"தென்னகமாம் இன்பத் திருநாட்டில் மேவியதோர்

கன்னடத்துக் குடகுமலைக் கனிவயிற்றில் கருவாகி

தலைக்காவிரி என்னும் தாதியிடம் உருவாகி

ஏர்வீழ்ச்சி காணாமல் இருக்க சிவசமுத்திர

நீர்வீழ்ச்சி எனும் பேரில் நீண்ட வரலாறாய்

வண்ணம் பாடியொரு வளர்த்தென்றல் தாலாட்ட

கண்ணம்பாடி அணைகடந்து ஆடுதாண்டும் காவிரிப் பேர் பெற்று

அகண்ட காவிரியாய்ப் பின் நடந்து

கல்லணையில் கொள்ளிடத்தில் காணும் இடமெல்லாம்

தாவிப் பெருகி வந்து தஞ்சை வளநாட்டைத்

தாயாகிக் காப்பவளாம் தனிக்கருணை காவிரிபோல்

செல்லும் இடமெல்லாம் சீர் பெருக்கித் தேர் நிறுத்தி

கல்லும் கனியாகும் கருணையால் எல்லோர்க்கும்

பிள்ளையென நாளும் பேசவந்த கண்மணியே

வள்ளலே எங்கள் வாழ்வே இதயக் கனி

எங்கள் இதயக் கனி இதயக் கனி

நீங்க நல்லாயிருக்கோணும் நாடு முன்னேற இந்த

நாட்டில் உள்ள ஏழைகளின் வாழ்வு முன்னேற

என்றும் நல்லவங்க எல்லாரும் ஒங்க பின்னாலே நீங்க

நெனச்சதெல்லாம் நடக்குமுங்க கண்ணு முன்னாலே”

என்ற பாடல் அவருடைய சத்யா காப்பித் தோட்ட தொழிலாளர்கள் அவருக்கு பாராட்டு விழா நடத்தி பாடும் பாடலாக அமைந்தது.

இப்பாடலில் ***வள்ளலே எங்கள் வாழ்வே*** *என்று எம்.ஜி.ஆர். அழைக்கப்படுகிறார். மேலும்* ***கருணையால் எல்லோர்க்கும் பிள்ளையென நாளும் பேச வந்த கண்மணி*** *என போற்றப்படுகிறார். எம்.ஜி.ஆரை மக்கள் எங்க வீட்டுப் பிள்ளை என அன்றும் கருதினர், இன்றும் கருதுகின்றனர். இதே கருத்தை இப்பாடலிலும்* ***பிள்ளை என நாளும் பேச வந்த கண்மணி*** *என பாடலாசிரியர் குறித்துள்ளார். எம்.ஜி.ஆர். மக்களின் இதயங்களில் வாழ்கிறார். கட்சியினர் அவரை இதய தெய்வம் எம்.ஜி.ஆர். என்றே போற்றுகின்றனர். எனவே இதயக் கனி படமும் இப்பாட்டு இன்றைக்கும் மக்களால் பெரிதும் ரசிக்கப்பட்டு வருகிறது.*

உங்களை நினைவில் வைத்திருப்பார்களா*?*

1947 முதல் எழுபது வருடங்களுக்கும் மேலாக மக்களின் மனதில் இதய தெய்வமாக இருந்து செங்கோலோச்சி வரும் எம்.ஜி.ஆரிடம் ஒருமுறை பத்திரிகையாளர்கள் உங்களை உங்கள் ரசிகர்கள் எவ்வளவு நாள் நினைவில் வைத்திருப்பார்கள் என்று கேட்ட போது எம்.ஜி.ஆர். ‘என் படத்தின் நெகட்டிவ் இருக்கும் வரை என்னை மறக்க மாட்டார்கள்’ என்றார். அவருடைய அந்த கணிப்பும் கருத்தும் உண்மையாயிற்று. எம்.ஜி.ஆரின் பல படங்கள் இன்று டிஜிட்டல் மயமாகி விட்டன. அனைவரும் தங்கள் கைபேசிகளில் நினைத்த நேரத்தில் எம்.ஜி.ஆர். படங்களையும் பாடல்களையும் பார்க்கக்கூடிய அளவுக்கு

விஞ்ஞானம் வளர்ந்து விட்டது. எனவே நினைத்த போதெல்லாம் எம்.ஜி.ஆர். படத்தைப் பார்த்து மக்கள் தங்களுடைய ரசிப்பை நிலைநிறுத்திக் கொண்டனர். எம்.ஜி.ஆரின் வளர்ந்து வரும் ரசனையை கண்ட மற்றவர்களும் இளைய தலைமுறையினரும் இப்போது எம்.ஜி.ஆர். பாடல்களைப் பார்க்கவும், கேட்கவும் படங்களைப் பார்க்கவும் ஆரம்பித்துவிட்டனர். இதனால் எம்.ஜி.ஆருடைய ரசிகர்களின் எண்ணிக்கை இன்னும் தொடர்ந்து பெருகிக் கொண்டே போகிறதே தவிர குறைந்தபாடில்லை.

காலத்தால் நிலைத்து நிற்கும் பாடுபொருள்

விஞ்ஞானமும் வளர்கிறது எம்.ஜி.ஆரின் ரசிகர்களும் அதிகரிக்கின்றனர். இந்த இரண்டிற்கும் ஒத்துப்போவதாக அமைந்திருப்பது அவருடைய படங்களின் பாடுபொருளும் கருத்துக்களும் ஆகும். எம்.ஜி.ஆருடைய படங்களில் இருக்கக்கூடிய உலகளாவிய பாடுபொருள் அல்லது உலகில் எந்தப் பகுதியில் வாழும் மனிதனும் சரி என்று ஏற்றுக் கொள்ளும் கருத்துக்கள் அவரது படங்களும் பாட்டிலும் இருப்பதால் இன்னும் அவை காலத்தால் அழியாத கருத்துகளாக இருக்கின்றன. அடுத்த தலைமுறையினராலும் எம்.ஜி.ஆர். பாடல்களை ரசிக்க முடிகின்றது. அவரது தர்ம குணத்தை ஆதரிக்க முடிகின்றது; அவரை வியந்து பார்க்கின்றனர்.

எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றங்களின் கொடைப் பண்பு

Charity begins at home என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. பிறருக்குக் கொடுத்து மகிழ வேண்டும் என்ற பழக்கத்தை நாம் நம் பிள்ளைகளுக்கு கற்றுத் தர வேண்டும். வீட்டில் இருந்துதான் தர்ம சிந்தனை பிள்ளைகளுக்குப் போதிக்கப்பட்டு பின்பு அது வெளியே சமூகத்தில் நடைமுறைப்படுத்தப்படும். எம்.ஜி.ஆர். படங்களைப் பார்ப்பவர்கள் **சிறுபிள்ளை பருவத்திலிருந்தே** எம்.ஜி.ஆருடைய தர்ம சிந்தனையால் ஈர்க்கப்பட்டு பின்னர் பெரியவராகி வரும்போது அவரவரால் இயன்ற அளவுக்கு

பிறருக்கு உதவ வேண்டும் என்ற கொள்கையுடன் வளர்ந்து வருகின்றனர். இதனால் இன்றைக்கும் இருக்கும் எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றங்கள் ஒரு வருடத்தில் இரண்டு மூன்று முறையாவது தங்களால் ஆன தர்ம காரியங்களைச் செய்து வருகின்றனர். பள்ளிக்குழந்தைகளுக்கு நோட்டுப் புத்தகம் வழங்குவது; பள்ளிக்கூட பை வழங்குவது; ஏழைப் பெண்களுக்கு இலவசமாக சேலை, ஆண்களுக்கு வேட்டி வழங்குவது, அன்னதானங்கள் செய்விப்பது; வெயில் காலத்தில் நீர் மோர் பந்தல் அமைப்பது, தண்ணீர் பந்தல் வைத்து அவ்வழியில் நடந்து போவோருக்கு தண்ணீர் வழங்குவது என எம்.ஜி.ஆர். ரசிகர்கள் அவர்களாலான தர்ம காரியங்களைத் தொடர்ந்து செய்து வருகின்றனர். எம்.ஜி.ஆர். தனது ரசிகர்களுக்கு இன்றும் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருந்து வருகின்றார்.

நிறைவு

கலியை எதிர்ப்பதற்கு தர்மம் ஒன்றே வழி என்பதைப் படித்தவர்கள் புத்தகங்களில் படித்து தெரிந்து கொள்ளலாம். ஆனால் இத்தகைய புத்தகங்களைப் படிக்க வாய்ப்பு இல்லாதவர்கள் எம்.ஜி.ஆர். படங்களைப் பார்த்து தர்மம் ஒன்றே நமக்கு வாழ்வில் கலியின் துன்பங்களிலிருந்து உய்விக்கும் ஒரே வழி என்பதை புரிந்து கொண்டு அறச் செயல்களில் தர்ம காரியங்களில் ஈடுபடுகின்றனர். இவ்வகையில் எம்.ஜி.ஆர். ஓர் ஆன்மிக குரு போல செயல்படுகிறார். அவரது படங்களும் பாடல்களும் வழிகாட்டிப் பெட்டகங்களாக திகழ்கின்றன.



6. எம்.ஜி.ஆர். படப் பாடல்களில் தமிழ்ப்பற்று மற்றும் தமிழ் நாட்டுப் பற்று

எம்.ஜி.ஆர். 1950களில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினராக இருந்து பின்பு அதன் பொருளாளர் ஆகி கட்சிப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு, அதன் பின்னர் 1977இல் அண்ணா திமுக என்ற புதிய கட்சியைத் தோற்றுவித்தார். இடைத் தேர்தல்களில் மாபெரும் வெற்றி பெற்று பின்னர் சட்டமன்றத் தேர்தலில் பெரும்பான்மை இடங்களைப் பெற்று ஆட்சி அமைத்தார். இந்த அரசியல் வெற்றிகளுக்கு முக்கிய காரணமாய் இருந்தவற்றில் ஒன்று அவரது படப்பாடல்களின் பாடுபொருளை அவர் வரையறுத்துக் கொடுத்தது எனலாம். அவரது படப்பாடல்கள் அவரது ரசிகர்களின் மனதில் கல் மேல் எழுத்துப் போல பதிந்தன. 1947இல், ராஜகுமாரி படத்தில் கதாநாயகனாக நடிக்க ஆரம்பித்தவர் 1977இல் அவர் முதலமைச்சர் ஆகும் வரை 30 ஆண்டுகளாக திரைப்படங்களில் நடித்து வந்தார். 1950 முதல் அவர் படங்கள் பெற்ற வெற்றி அவரைத் திரையுலகின் முடிசூடா மன்னனாக மாற்றியது. அதன்பின்னர் அவருடைய படங்களில் அவர் தன்னைப் பற்றியும் தான் சார்ந்திருந்த திமுக மற்றும் தான் தோற்றுவித்த அண்ணா திமுக ஆகிய கட்சிகளின் கொள்கைகளைப் பற்றியும் பாடலாசிரியர்களிடம் சொல்லி எழுத வைத்து அவற்றைத் தனிப்பாடல்களாக அமைத்து தன் படங்களில் சேர்த்துக்கொண்டார். மேலும் காதல் பாடல்களிலும், சோகப் பாடல்களிலும் கூட தன்னுடைய கொள்கை சார்ந்த கருத்துக்கள் இடம்பெறும்படி செய்தார். இவற்றில் எம்.ஜி.ஆருக்கு இருந்த தமிழ் மொழி பற்றும் தமிழ் நாட்டின் மீது இருந்த பற்றும் வெளிப்படுத்தப்பட்ட முறை குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

எம்.ஜி.ஆர். பிறப்பால் மலையாளியாக அறியப்பட்டாலும் அவருடைய முன்னோர்கள் மன்றாடியார் வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்றும் இஸ்லாமிய சமயத்திற்கு கட்டாய மதமாற்றம் நடைபெற்றபோது உயிர்பிழைத்து வாழ்வதற்காக பாலக்காட்டுக்கு இடம் பெயர்ந்தவர்கள் என்பதும் வரலாறு காட்டும் தகவல்கள் ஆகும். எனினும் அவருடைய பெற்றோரும் பாட்டனார் குடும்பங்களும் மலையாள மொழி பேசி வந்ததனால் இவருடைய தாயார் வீட்டில் தன் மருமகள் மற்றும் சம்பந்தி குடும்பத்தாருடன் அவர்களுக்குத் தெரிந்த மலையாள மொழியில் பேசினார்கள். மகன்களுடன் மலையாளத்தில் பேசவில்லை எம்.ஜி.சக்கரபாணிக்கும் எம்.ஜி.ஆருக்கும் திருமணம் செய்துவைத்த போது அப்பெண்களை சத்யபாமா அம்மையார் கேரளாவில் இருந்து மலையாளம் பேசும் குடும்பங்களிலிருந்து தான் கொண்டு வந்தார். அப்பெண்கள் இங்கு வரும்போது தமிழ் பேசத் தெரியாதவர்களாக இருந்து பின்னர் மெல்ல மெல்ல தமிழ் பேசக் கற்றுக் கொண்டனர். எனினும் வீட்டில் சக்கரபாணி அவர்களின் மனைவியும் அவர்களின் உறவினர்கள் எம்.ஜி.ஆரின் மனைவி பார்கவி மற்றும் பார்கவி மறைவுக்குப் பிறகு திருமணம் செய்து கொண்ட சதானந்தவதி ஆகியோர் தன் உறவினர்கள் மலையாளத்தில் பேசும் போது மலையாளத்தில் தான் பேசினர். ஆனால் எம்.ஜி.ஆர். இரண்டு வயதிலேயே தமிழகம் வந்து விட்டதால் அவருக்கு விபரம் தெரிந்த நாளிலிருந்து தமிழ் மொழியில் பேசியும் தமிழ்மொழி பேசுவதைக் கேட்டும் வளர்ந்து வந்ததால் அவர் தன்னைப் பொறுத்த வரை தான் ஒரு தமிழன் என்ற உணர்வோடு பெருமிதத்தோடு வாழ்ந்து வந்தார். இதனை அவர் ஒரு பேட்டியிலும் எடுத்துக் கூறியுள்ளார்.

கேரள நாட்டிற்கு ஒரு விழாவிற்குச் சென்ற போது அங்கிருந்தவர்கள் மலையாளத்தில் பேசுங்கள் என்று கத்தினர். அதற்கு எம்.ஜி.ஆர். 'எனக்கு மலையாளம் பேச வராது. நான் தமிழில் தான் பேசுவேன். விருப்பமிருப்பவர்கள் இருந்து கேட்கலாம் இல்லையென்றால் போய்விடலாம்' என்று மேடையில் கோபமாகத் தெரிவித்து விட்டார். எம்.ஜி.ஆர். தமிழை நேசித்த அளவுக்கு வேறு எந்தத் தலைவரும் தமிழை

நேசிக்கவில்லை என்று கூறும்படியான பல சீர்திருத்தங்களையும் திட்டங்களையும் அவர் தமிழுக்காக செய்துள்ளார். அறிஞர்களைப் போல தானும் படிக்கவில்லையே அவர்களைப் போல அடுக்கு திரைப்படங்களில் அவர் போலியாக தமிழ் ஆர்வத்தை காட்டவில்லை. அவருக்கு மற்ற அறிஞர்களைப் போல தமிழ் மொழியில் தன்னால் பேச இயலவில்லையே என்ற ஏக்கத்துடன் இருந்தார். 'இன்னொரு பிறப்பு என்று எனக்கிருந்தால் நான் நிறையப் படித்து பெரிய அறிஞராக வாழவேண்டும்' என்று அரூர் தாஸ் அவர்களிடம் ஓர் உரையாடலின் போது சொல்லியிருக்கிறார். அவர் அடி மனதின் ஆழத்தில் இருந்த தமிழ் ஆர்வத்தையே அவர் தன்னுடைய பாடல் ஆசிரியரிடம் எடுத்துக் கூறி அக்கருத்துக்களை அழகுற புனைந்து எழுதச் சொல்லி அதனை ஆடி பாடி நடித்து காட்டினார்.

தமிழன் என்றொரு இனமுண்டு

1954இல் நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் எழுதிய மலைக்கள்ளன் நாவலை பட்சிராஜா ஸ்டுடியோஸ் அதிபர் ஸ்ரீ ராமுலு நாயுடு படமாக எடுத்த போது அதில் பெயர்ப் பட்டியல் வெளியிடும் வேளையில் அவர் இயற்றிய

"தமிழன் என்றொரு இனமுண்டு

தனியே அதற்கொரு குணமுண்டு

அமிழ்தம் அவனது மொழியாகும்

அன்பே அவனது வழியாகும்"

எனத் தொடங்கும் பாடல் பின்னணியில் ஒலித்தது. இப்படத்தில் எம்.ஜி.ஆரின் நடிப்பு மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. படம் தமிழ் திரையுலகின் முதல் ஜனாதிபதி விருதை பெற்றது. தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி, சிங்களம் என ஆறு மொழிகளில் வெளிவந்தது. எனினும் மற்ற படங்களில் எவரும் எம்.ஜி.ஆர். அளவுக்கு சிறப்பாக நடிக்கவில்லை என்பதும் அக்காலத்தில் பேசப்பட்டது. அவர் ஐந்து வேடங்களில் நடித்திருந்தார். குரலிலும் மாற்றி மாற்றிப்

பேசி தன் நடிப்பை வெளிப் படுத்தியிருந்தார். இப்படத்தின் வெற்றிக்குப் பிறகு எம்.ஜி.ஆர். தமிழ்த் திரையுலகின் உச்ச நட்சத்திரமாகி எவராலும் அசைக்க முடியாத இடத்தைப் பெற்றார். தமிழ்த் திரையுலகில் தமிழினக் காவலனாகப் போற்றப்பட்டார். இவ்வாறு படத்தின் ஆரம்பத்திலேயே தமிழின் பெருமையை தமிழனின் சிறப்பை பாடலாக அமைத்ததால் அது ரசிகர்களின் உள்ளத்தை கொள்ளை கொள்ளும் என்ற உத்தியைப் புரிந்து கொண்ட எம்.ஜி.ஆர். அடுத்து வந்த தனது படங்களில் இம்முறையை பின்பற்றினார்.

நாடோடி மன்னனில் ‘செந்தமிழே வணக்கம்’

எம்.ஜி.ஆர். தன் சொந்தப் படம் தயாரித்து அதை 1958இல் நாடோடி மன்னன் என்ற பெயரில் வெளியிட்ட போது பெயர்ப் பட்டியலுடன் செந்தமிழே வணக்கம் என்ற பாடலை [title song] தமிழ்த்தாய் வணக்கமாக அமைத்திருந்தார்.

“செந்தமிழே வணக்கம்

ஆதி திராவிடர் வாழ்வினை சீரோடு விளக்கும்

செந்தமிழே வணக்கம்

ஐந்து இலக்கணங்கள் ஆய்ந்தே உலக

அரங்கினுக்கே முதன் முதல் நீ தந்ததாலும்

செந்தமிழே வணக்கம்”

“ஜாதி சமயங்கள் இல்லா நல்ல

சட்ட அமைப்பினைக் கொண்டே

நீதி நெறி வழி கண்டாய் எங்கள்

நெஞ்சிலும் வாழ்விலும் ஒன்றாகி நின்றாய்”

என்ற வரிகள் தமிழின் பெருமையை எடுத்துரைத்தன. இப்பாடல் தற்போது மதிமுக கட்சியின் இறை வணக்கப் பாடலாக கட்சி கூட்டங்களில் முதலில் பாடப்பட்டு வருகிறது. மேலும் இதே படத்தில் மன்னன் மார்த்தாண்டனுக்கு

*வரவேற்பு அளிக்கும் "**வருக வருக வேந்தே**" என்ற பாடலில் பிற திராவிட மொழிகளில் இருந்தும் வாழ்த்துப் பாடல்களையும் இணைத்திருந்தார். மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளிலும் கவிஞர்களை வைத்துப் பாடல் எழுதி அவற்றையும் இணைத்து அதற்கு அந்தந்த மாநில உடைகளை அணிந்து பெண்கள் ஆடிப் பாடுவதாகக் காட்சியும் அமைத்திருந்தார்.*

திராவிட நாடு என்பது தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, துளு ஆகிய மொழி பேசும் மக்களை உள்ளடக்கியதாகும். திமுக திராவிட நாடு பற்றிய கருத்தாக்கத்தைப் பல இடங்களிலும் வலியுறுத்திப் பேசி வந்ததாலும் எம்.ஜி.ஆருக்கும் தீவிர ரசிகர்கள் ஆந்திராவிலும் கர்நாடகத்திலும் அதிக அளவில் இருந்ததாலும் அந்த ரசிகர்களுக்காகவும் எம்.ஜி.ஆர். அவர்களையும் தன்னுடைய ரத்தத்தின் ரத்தங்கள் ஆக கருதி நேசித்து வந்ததால் இப்பாடல்களை அவர் தன் படத்தில் அமைத்திருந்தார். எம்.ஜி.ஆரிடம் மதம் மொழி பேதங்கள் இல்லாமல் போனதற்கு ஒரு முக்கிய காரணம் அவருக்கு எல்லா சாதியிலும் ரசிகர்கள் இருந்ததும் பிற மொழியினரும் மதத்தினரும் அவரை நேசித்ததும் ஆகும்.

வழிநடைப் பாடல்கள்

மலைக்கள்ளன், நாடோடி மன்னனுக்குப் பிறகு அவரது மற்ற படங்கள் பலவற்றிலும் முதல் பாட்டு அல்லது அவரது அறிமுகப்பாட்டு தமிழ் அல்லது தமிழ்நாட்டைப் போற்றி பாடும் பாடலாக அமைந்தது; அல்லது கதாநாயகனும் தோழனும் பயணம் செய்யும்போது பாடும் வழிநடைப் பாடல்களும் இக்கருத்துள்ள பாடல்களாக அமைந்தன. 1960 இல் வந்த மன்னாதி மன்னன் படத்திற்கு கண்ணதாசன் கதை வசனம் எழுதினார். இப்படத்திலும் [டைட்டில் சாங்] பெயர்கள் தோன்றும் போது முதல் பாடலாக

"அச்சம் என்பது மடமையடா

அஞ்சாமை திராவிடர் உடமையடா"

எனத் தொடங்கும் பாடல் அமைந்திருந்தது.

பெரும்பாலும் எம்.ஜி.ஆர். உடைய தத்துவப் பாடல்கள் அல்லது சமூக சிந்தனைப் பாடல்கள் வண்டிப் பாடல்களாகவே அமைந்திருப்பதைப் பார்க்கிறோம். அவர் கார், குதிரை, கட்டை வண்டி, ரதம், மாட்டு வண்டி போன்றவற்றில் தனியாகவோ வேறு ஒருவருடனோ பயணிக்கும் போது பாடுகின்ற பாடலாக இத்தகைய தத்துவ பாடல்கள் அமைந்துள்ளன. இதே முறையில் மன்னாதி மன்னன் படத்திலும் குலதெய்வம் ராஜகோபாலுடன் செல்லும் எம்.ஜி.ஆர் ஒற்றைக் குதிரை பூட்டிய ரதத்தில் அச்சம் என்பது மடமையடா பாட்டை பாடியபடி செல்வதாக அக்காட்சி அமைந்திருந்தது.

"அச்சம் என்பது மடமையடா

அஞ்சாமை திராவிடர் உடமையடா

ஆறிலும் சாவு நூறிலும் சாவு

தாயகம் காப்பது கடமையடா

தாயகம் காப்பது கடமையடா

கனகவிசயரின் முடித்தலை நெறித்து

கல்லினை வைத்தான் சேர மன்னன்

இமய வரம்பினில் மீன்கொடி ஏற்றி

இசை பட வாழ்ந்தான் பாண்டியனே"

இப்பாட்டில் தமிழின மன்னர்களான சேரன் மற்றும் பாண்டியனின் சிறப்புகள் எடுத்துரைக்கப்பட்டன. எம்.ஜி.ஆர் படங்களில் அவர் கேரளத்தைச் சேர்ந்தவர் என்பதாலும் கேரளா சேரன் ஆட்சி செய்த நாடு என்பதாலும் சேர நாட்டின் சிறப்பு அவர் பாடல்களில் இடம்பெற்றன. அவர் தமிழகத்தில் தமிழ் மக்களின் அன்பில் திளைத்து இருப்பதால் அவர்களின் இதய சிம்மாசனத்தில் இருந்து ஆட்சி செலுத்துகிறார் என்ற கருத்தில் தமிழின் தலைநகரான தமிழுக்குச் சங்கம் வைத்து வளர்த்த மதுரையை ஆட்சி செய்த

பாண்டியனைப் பற்றிய சிறப்பும் அவர் பாடல்களில் இடம் பெற்றன. காதல் பாடலில் கூட

“பாடுவது கவியா -இல்லை

பாரி வள்ளல் மகனா

எனத் தொடங்கும் பாடலில்

சேரனுக்கு உறவா

செந்தமிழன் நிலமா”

என்று எம்.ஜி.ஆரைக் குறித்துப் பாடுவதாகப் பாடல் வரிகள் உள்ளன.

“கருவினில் மலரும் மழலையின் உடலில்

தைரியம் வளர்ப்பாள் தமிழன்னை

களங்கம் பிறந்தால் பெற்றவள் மானம்

காத்திட எழுவான் அவள் பிள்ளை”

என்ற வரிகள் கதைக்குப் பொருந்துவனவாக எழுதப்பட்டிருந்தன. தமிழனாகப் பிறந்த ஒருவன் தன் தாய்க்கு ஒரு பழி நேர்ந்தால் அதை பொறுத்துக் கொள்ள மாட்டான் என்பதும் ஒரு தாய் தன் மகனை கடமை உணர்வோடும் கண்ணியமானவன் ஆகவும் வளர்ப்பாள் என்ற பெருமையும் இப்பாடல் வரிகளில் இடம் பெற்றுள்ளன. பல்லவி நேரடியாக கதையின் உட்பொருளை விளக்குவதாக அமைந்தாலும் கதையைப் பற்றி அறியாதவர்களுக்கும் கவலைப்படாதவர்களுக்கும் கூட இது ஒரு பொருள் பொதிந்த கருத்துள்ள வரிகளாகவே அமைந்துள்ளன.

ஒருமுறை எம்.ஜி.ஆரிடம் நீங்கள் அதிகமாக விரும்பி கேட்கும் பாடல் எது அல்லது உங்கள் படத்தில் உங்களுக்கு மிகவும் பிடித்த பாடல் எது என்று கேட்டபோது அவர் ‘மன்னாதி மன்னன் படத்தில் வரும் அச்சம் என்பது மடமையடா எனக்கு மிகவும் பிடிக்கும்’ என்று கூறினார். அவர் முதலமைச்சர் ஆன பிறகு எதிர்கட்சித் தலைவரின் மூத்த

மகனை கேட்டபோது அவரும் இதே பதிலைத்தான் கூறினார். 'எனக்கு எம்.ஜி.ஆர். பாடல்கள் மிகவும் பிடிக்கும் அதிலும் குறிப்பாக அச்சம் என்பது மடமையடா பாட்டு மிக மிக பிடிக்கும்' என்றார்.

பள்ளிகளின் இறை வணக்கப் பாடல்

ஆனந்தஜோதி (1963) திரைப்படத்தை பி எஸ் வீரப்பா தன் சொந்த தயாரிப்பில் உருவாக்கியபோது அப்படத்தில் கவிஞராகவும் உடற்பயிற்சி ஆசிரியராகவும் எம்.ஜி.ஆர். நடித்திருந்தார். தன்னுடைய மாணவர்களைக் கொண்டு நடத்தும் நிகழ்ச்சி ஒன்றில் தமிழின் சிறப்பை தமிழ் நாட்டின் சிறப்பை எடுத்துரைக்கும் பாடலை பயன்படுத்தியிருப்பார்.

"ஒரு தாய் மக்கள் நாமென்போம்

ஒன்றே எங்கள் குலம் என்போம்

தலைவன் ஒருவன் தான் என்போம்

சமரசம் எங்கள் வாழ்வென்போம்"

எனத் தொடங்கும் பாடல் அன்றைய காலகட்டத்தில் திண்டுக்கல்லில் ஒரு பள்ளியிலும் மலேசியாவின் சில ஊர்களில் தமிழ் பேசும் மாணவர்கள் படித்த பள்ளிகளிலும் காலையில் இறை வணக்கப் பாடலாக இடம் பெற்றிருந்தது. இப்பாடலில் தமிழின் சிறப்பை கூறும் சரணமாக

"பொதிகை மலையில் பிறந்தவளாம்

பூவை பருவமடைந்தவளாம்

கருணை நதியில் குளித்தவளாம்

காவிரிக்கரையில் களித்தவளாம்"

என்ற வரிகள் இடம்பெற்றன. மேலும் தமிழினமே மூத்த இனம் முத்தமிழும் சிறப்பிக்கும் மொழியே தங்களுடைய மொழி என்ற பெருமை பாராட்டும் விதமாக நான்கு திசையும் ஒரு காலத்தில் தமிழரின் ஒரு குடைக்கீழ் இருந்தன என்ற கருத்தும் சேர்ந்து வரும்படி

“உரிமையில் நான்கு திசை கொண்டோம்

உறவினில் நண்பர் பலர் கொண்டோம்

மூத்தவர் என்னும் பெயர் கொண்டோம்

முத்தமிழ் என்னும் மொழி கொண்டோம்”

என்ற வரிகள் அடுத்த பல்லவியாக அமைந்தன.

*நாடோடி மன்னனுக்கு அடுத்து வந்த திரைப்படம் **‘தாய் மகளுக்கு கட்டிய தாலி(1959)’.** இப் படத்தில் எம்.ஜி.ஆர்., கே ஏ தங்கவேலுவுடன் ஒரு ஒற்றை மாட்டு வண்டியில் பயணிக்கும்போது தமிழின் சிறப்புகளை பாடுவதாக ஒரு பாடல் இடம்பெற்றது.*

“ஒன்றல்ல இரண்டல்ல தம்பி சொல்ல

ஒப்புமை இல்லாத அற்புதம் தமிழ்நாட்டில்”

ஒன்றல்ல இரண்டல்ல தம்பி என்ற பாடளில் உடுமலை நாராயண கவி தமிழ் இலக்கியங்களை வரிசைப்படுத்தி பாடியிருப்பார்.

“பகை வென்ற திறம் பாடும் பரணி வகை- செலும்

பரிபாடல் கலம்பகங்கள் எட்டுத்தொகை- வான்

புகழ் கொண்ட குறளோடு அகம்புறமும் – செம்

பொருள் கொண்ட தமிழ்ச் சங்க இலக்கியப் பெருஞ்செல்வம்

ஒன்றல்ல இரண்டல்ல தம்பி”

என்ற இப்பாடல் தமிழின் இலக்கியச் சிறப்பை எடுத்துரைத்தது. நாடோடி மன்னனைப் பார்த்த ரசித்த நினைப்பில் இப்படத்துக்குச் சென்றவர்கள் ஏமாந்து திரும்பியதால் இன்று இப்பாடல் அதிகமாக மக்கள் நினைவில் இடம் பெறாமல் போனது.

பாரதிதாசன் பாடல்கள்

கலங்கரை விளக்கம் (1965) படம் வெளிவந்த போது பாரதிதாசனின் சங்கே முழங்கு பாடலை கதையின் முக்கிய திருப்பமாக அமைந்த அந்த நடனக் காட்சியில் இணைத்திருந்தனர். ஈப்பாடலை எம்.ஜி.ஆர். பாடி நடிக்காவிட்டாலும் இக்காட்சி படம் பார்க்கும் அனைவருடைய கவனத்தையும் வெகுவாக ஈர்த்தது.

"சங்கே முழங்கு

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்

மங்காத தமிழென்று சங்கே முழங்கு

எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்

இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே

பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால்

சங்காரம் நிசமென்று சங்கே முழங்கு"

என்ற பாரதிதாசன் பாடல் வரிகளுக்கு மிக அருமையாக வீரம் செறிந்த பாவனைகளுடன் நடனக் காட்சி அமைக்கப்பட்டிருந்தது. அந்தக் காலகட்டத்தில் பல பள்ளிக்கூடங்களிலும் மாணவர்கள் இப்பாட்டுக்கு தங்கள் பள்ளிக்கூட விழாக்களில் பாட்டுக்கு நடனம் ஆடினர்.

"திங்களோடும் செழும் பருதி தன்னோடும்

விண்ணோடும் உடுக்களோடும்

மங்கு கடல் இவற்றோடும்

பிறந்த தமிழுடன் பிறந்தோம் நாங்கள்

தமிழுடன் பிறந்தோம் நாங்கள்

ஆண்மை சிங்கத்தின் கூட்டமென்றும்

சிறியோர்க்கு ஞாபகம் செய் முழங்கு

சங்கே சங்கே முழங்கு

வெங்க்கொடுமை சாக்காட்டில் விளையாடும் தோள்

எங்கள்வெற்றித் தோள்கள்

கங்கையைப் போல் காவிரிப் போல்

கருத்துக்கள் ஊரும் உள்ளம் எங்கள் உள்ளம்

வெங்குருதி தனில் கமழ்ந்து

வீரம் செய்கின்ற தமிழ் எங்கள்

மூச்சாம் தமிழ் எங்கள் மூச்சாம்"

என்ற பாடல் ரசிகர்களின் உள்ளம் கவர்ந்ததோடு எம்.ஜி.ஆரின் தமிழ்ப்பற்றையும் உறுதி செய்தது.

தாலாட்டுப் பாடல்களில் தமிழ்

பாரதிதாசன் தன்னுடைய பாடல் தொகுதியில் ஆண் குழந்தை தாலாட்டு பெண் குழந்தை தாலாட்டு என்று தாலாட்டுப் பாடல்களை வகைப்படுத்தியிருப்பார். பாரதியாரும் கண்ணம்மா என் குழந்தை என்ற பெயரில் தாலாட்டுப் பாடல் பாடியிருப்பார். தாலாட்டுப் பாடுவது என்பது தந்தைக்கும் தாய்க்கும் விருப்பமான ஒன்றாகவே அன்று முதல் இன்று வரை அமைந்துள்ளது. அவ்வகையில் எம்.ஜி.ஆர். படத்திலும் தாலாட்டு பாடல்கள் அல்லது குழந்தைப் பாடல்கள் உண்டு. பணம் படைத்தவன் (1965) படத்தில் அவருக்கு குழந்தை பிறக்கப்போகிறது என்று தகவலை அறிந்ததும் அவர் மகிழ்ச்சியாக ஆடிப்பாடிக் கொண்டு வரும் காட்சியில்

"எனக்கொரு மகன் பிறப்பான் அவன்

என்னைப் போலவே இருப்பான்

தனக்கொரு பாதை வகுக்காமல் என்

தலைவன் வழியிலே நடப்பான்"

என்று தன் மகனும் அண்ணாவின் வழியில் நடக்கும் தம்பியாகவே வருவான் என்று திமுகவின் கொள்கையை வலியுறுத்திப்பாடுவதாக இப்பாடல் தொடங்கும். அப்பாடலில்

“இரண்டு வரி கொண்டு மூன்று நெறி கண்ட

குறளின் பொருள்தேடிச் செல்வான்

நாளை வருகின்ற வாழ்வு நமக்கென்று

ஏழை முகம் பார்த்துச் சொல்வான்”

என்ற வரிகளில் திருக்குறளின் பெருமை எடுத்து கூறப்பட்டது.

“உயிரைத் தமிழுக்கும் உடலை மண்ணுக்கும்

உதவும் நாள் கண்டு துடிப்பான்

சுற்றிப் பகை வந்து சூழும் திரு நாளில்

வெற்றித் தோள் கொண்டு முடிப்பான்

வெற்றித் தோள் கொண்டு முடிப்பான்”

என்ற வரிகள் ‘உயிர் தமிழுக்கு உடல் மண்ணுக்கு’ என்று இந்தி எதிர்ப்பின்போது வீர முழக்கமிட்ட மொழிப் பேராளிகளின் குரலை எதிரொலித்தது.

வேட்டைக்காரன் (1964) படத்தில் தன் மனைவிக்கு காசநோய் வந்ததால் மனைவியிடம் பிள்ளையை நெருங்கவிடாமல் தானே வளர்க்க வேண்டிய ஒரு சூழ்நிலையில் இருக்கும் தந்தையின் கதாபாத்திரத்தில் எம்.ஜி.ஆர். நடித்து இருந்தார். அப்போது தன் மகன் ராஜாவுக்கு இரவில் பால் கொடுத்து தூங்க வைப்பதற்காகப் பாடுகின்ற பாடல் காட்சி ஒன்று அப்படத்தில் இடம்பெற்றது.

வெள்ளி நிலா முற்றத்திலே விளக்கெரிய விளக்கெரிய

உள்ளமெனும் தாமரையில் உன்னை எடுத்துக்கொண்டு வந்தேன்

என்று தொடங்கும் பாடலில்

முக்கனியின் சாறெடுத்து முத்தமிழின் தேனெடுத்து

முப்பாலிலே கலந்து எப்போதும் இருப்பாய்

என்ற பாடல் வரிகள் இடம் பெற்றிருந்தன. இவற்றில் தமிழின் சிறப்பும் தமிழ்ப் பொதுமறையின் சிறப்பும் சுவையும் எடுத்துக்காட்டப்பட்டன.

எம்.ஜி.ஆருக்காக பாடல் எழுதும்போதே அவரது விருப்பத்திற்கேற்ப கவிஞர்கள் தாய், தமிழ், தாய் நாடு போன்ற கருத்துக்களை ஏதாவது இடத்தில் சிறப்பாக வைத்து எழுதுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

பாரதி, பாரதிதாசன் பாடல்கள்

திராவிட முன்னேற்ற கழகம் தன்னுடைய கட்சியில் பலர் கவிஞர்களாகவும் பேச்சாளர்களாகவும் இருந்தாலும் கூட பாரதிதாசன் தனிப்பெருமை பெற்றவராக இருந்தார். பாரதிதாசனை திமுகவின் கவிஞர் என்று முத்திரை குத்தி இருந்தனர். எனவே எம்.ஜி.ஆரும் தன்னுடைய படங்களில் பாரதிதாசன் எழுதிய சித்திரை சோலைகளே, சங்கே முழங்கு, புதியதோர் உலகம் செய்வோம் போன்ற பாடல்களை இடம்பெறச் செய்தார்.

பாரதியாரின் பாடல்களும் எம்.ஜி.ஆர். படத்தில் இடம் பெற்றன. அதிக அளவில் இடம் பெறவில்லை என்றாலும் ஒரு சில படங்களில் காட்சிகளில் எம்.ஜி.ஆர். பாரதியாரையும் இணைத்துக் கொண்டிருந்தார். படத்தில் எம்.ஜி.ஆர் உடைய வீடு ஒவ்வொரு திமுக உறுப்பினர் அல்லது அண்ணா திமுக உறுப்பினர் வீட்டுக்கு முன் மாதிரியாகக் காட்டப்பட்டிருந்தது. திரைப்படத்தில் அவருடைய வீட்டின் சுவர்களில் அண்ணா, திருவள்ளுவர், பாரதியார் ஆகியோரின் படங்கள் மாட்டப்பட்டிருக்கும். சில படங்களில் இயேசு கிறிஸ்து மற்றும் புத்தர் சிலையும் காணப்படும். ஆனால் எந்த படத்திலும் பாரதிதாசனின் படம் இருந்ததாகத் தெரியவில்லை.

எம்.ஜி.ஆர். நடித்த அந்தமான் கைதி [1952] என்ற வெற்றிப் படத்தில் பாரதியாரின் பாடலான

‘காணி நிலம் வேண்டும் பராசக்தி

காணி நிலம் வேண்டும்’

என்ற பாடல் காதல் காட்சியில் இடம்பெற்றது. எம் எஸ் திரவுபதியுடன் இணைந்து எம்.ஜி.ஆர். இக்காட்சியில் நடித்திருந்தார். அவர் திமுகவில் உறுப்பினரான பிறகு அங்கு பிராமண எதிர்ப்பு இருந்ததனால் பாரதியார் பாடல்கள் எம்.ஜி.ஆர். படங்களில் இடம் பெறவில்லை. எம்.ஜி.ஆர். அண்ணா திமுக ஆரம்பித்த பின்னர் 1977 ல் வெளிவந்த மீனவ நண்பன் படத்தில்

தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை என்றால்

ஜகத்தினை அழித்திடுவோம் என்று

தமிழ் கவி பாரதி சொல்லிய சொல்லை

நடைமுறை ஆக்கிடுவோம்

என்ற வரிகள் பாரதியாரின் பாடல் வரிகளைத் தாங்கியபடி வந்தன. பாரதியார் படத்தை வைத்து ஊர்மக்கள் பாரதி விழா கொண்டாடுவதாக ஒரு காட்சி அமைக்கப்பட்டு அங்கு வந்து எம்.ஜி.ஆர். ஈவரிகளைப் பாடுவதாக இக்காட்சி எடுக்கப்பட்டது. மைசூரில் படப்பிடிப்பு நடந்ததால் அங்கு பாரதியார் படம் கிடைக்கவில்லை. உடனே எம்.ஜி.ஆர். ஆர்ட் டைரக்டர் அங்கமுத்துவிடம் சொல்லி ஒரு பாரதியார் படத்தை வரையச் செய்து, படத்துக்கு மாலை சூட்டி ஒரு சிறிய பந்தலில் வைத்து, அந்தப் பந்தலை அலங்கரித்து அங்கு அந்த கிராமத்து மக்கள் வந்து நின்று பாரதியாரின் விழாவை கொண்டாடுவதாக காட்சி அமைக்கப்பட்டது. இவ்வாறு பாரதியாருக்கு விழா கொண்டாடுவதாக ஏற்பாடுகள் செய்து அங்கு வந்து நின்று தான் பாடலைப் பாடுவதாக படம்பிடித்து இக்காட்சியில் பாரதியாருக்குச் சிறப்புச் செய்தார்.

எம்.ஜி.ஆர். முதலமைச்சரான பிறகு பாரதியார் நூற்றாண்டு விழாவை அரசு விழாவாக எடுத்து சிறப்பாக நடத்தினார். அப்போது பல்கலைக்கழகங்கள் மூலமாக பாரதியாரின் படைப்புகள் பிற மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டன. பாரதியாருக்கு டில்லி பாராளுமன்றத்தில் சிலை அமைக்கப்பட்டது. இவ்வாறாக பாரதியாரின் மீது

கொண்டிருந்த பற்றை தன்னுடைய படத்திலும் ஆட்சியிலும் அவர் வெளிப்படுத்தினார்.

நிறைவு

எம்.ஜி.ஆர். தனது கட்சியின் கொள்கைகளை தனது தனிப்பட்ட விருப்பங்களைத் தனது திரைப்படப் பாடல்களில் பதிய வைக்க விரும்பி அவற்றைப் பாடலாசிரியர்களிடம் கேட்டு எழுதி வாங்கி ரசிகர்கள் ரசிக்கும் வகையில் தன்னுடைய படங்களில் அப்பாடல்களுக்கான காட்சிகளை அமைத்தார். தமிழ் நாட்டின் பெருமையையும் திராவிட நாட்டின் பெருமையையும் நான்கு மொழி மக்களும் ஒரு தாய் மக்கள் என்ற உணர்வை ஏற்படுத்தக்கூடிய கருத்துக்களையும் தன்னுடைய பாடல்களில் அமைத்தார். இதனால் உலகின் மூத்த மொழி, வாழும் ஒரே செவ்வியல் மொழி தமிழ். நாம் அதனை பேசும் சிறப்புடையோர் என்ற பெருமித உணர்வு உலகெங்கும் வாழும் மக்களுக்கு உண்டாகியுள்ளது. இவ்வாறு வளர்ந்து வரும் தமிழின் சிறப்பால் இன்றும் இப்பாடல்கள் உலெகெங்கும் வாழும் தமிழ் மக்களால் ரசிக்கப்படுகின்றன. நின்று நிலைத்துள்ளன. பொது விழாக்களிலும் தமிழர் விழாக்களிலும் கட்சி விழாக்களிலும் இசைக்கப்படுகின்றன. உலக நாடுகளில் தமிழர் வாழும் பகுதிகளில் இலண்டன், பிரான்ஸ், மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் எம்.ஜி.ஆர். உலகப் பேரவை அமைத்து மக்கள் எம்.ஜி.ஆரை உலகத் தமிழினத் தலைவராக போற்ற இப்பாடல்கள் உதவுகின்றன. உலகத் தமிழர்கள் அனைவரும் ஒருமித்த மனதுடன் ஏற்றுக் கொண்டுள்ள தலைவர் எம்.ஜி.ஆர். என்ற பெருமையை அவர் அடைவதற்கு தமிழ் மொழியின் சிறப்பு குறித்து அவர் படங்களில் அவர் அமைத்த பாடல்கள் பெரும் பங்காற்றியுள்ளன.



7. எம்.ஜி.ஆர். வலியுறுத்தும் உழைப்பின் உயர்வு

எம்.ஜி.ஆர். திரைப்படங்களில் பல தனிப் பாடல்களை, தத்துவப் பாடல்களை அவர் கருத்திற்கேற்ப கேட்டு பாடலாசிரியர்கள் எழுதியுள்ளனர். ஆனால் ஆரம்ப காலங்களில் 1947 முதல் 1957 வரை பாடல்கள் எழுதிய தஞ்சை ராமையாதாஸ், மாயவநாதன், பாபநாசம் சிவம், கவிதா கிருஷ்ணமூர்த்தி, ஆத்மநாதன், கே. டி சந்தானம், உடுமலை நாராயணகவி, லட்சுமணதாஸ், கு.மா. பாலசுப்பிரமணியன், சுரதா, முத்துக்கூத்தன், இன்னும் பஞ்சு அருணாச்சலம், விந்தன் போன்றோர் தமது விருப்பத்திற்கு ஏற்ப கதைக்கு ஏற்ப பாடல்களை எழுதிக் கொடுத்தனர்.

நாடோடி மன்னன் வெற்றிக்குப் பிறகு எம்.ஜி.ஆரின் செல்வாக்கு உயர்ந்து விட்டது. அதன் பிறகு 1977 இல் அவர் திரைப்படங்களில் நடிப்பதை விட்டு விடும் வரை அவருக்குப் பாடல்களை எழுதிய வாலி, கண்ணதாசன், ஆலங்குடி சோமு, அவிநாசிமணி, புலமைப்பித்தன் நா காமராசன், முத்துலிங்கம் போன்றோர் எம்.ஜி.ஆரின் விருப்பப்படியே பாடல்களை எழுதிக் கொடுத்தனர்.

1936 முதல் 1947 வரை சிறிய வேடங்களில் நடித்து வந்த எம்.ஜி.ஆர். இந்த 11 ஆண்டுகளும் திரை உலகில் நிலைத்து நிற்க அரும்பாடுபட்டார். ஆனால் அதேவேளை இந்த பதினோரு ஆண்டுகள் தான் அவருக்கு பயிற்சி காலமாகவும் திரையுலகில் அமைந்தது. திரையுலகின் பல்வேறு துறைகளை அவர் உன்னிப்பாகக் கவனித்து

ஆராய்ந்து பல நல்ல கருத்துக்களை தொழில் நுட்ப முறைகளைக் கற்றுத் தெளிந்து மனதில் பதிய வைத்துக் கொண்டார்.

1947இல் ராஜகுமாரி படத்தில் கதாநாயகனாக அறிமுகமான பிறகு 1950 வரை அவர் பெரிய நடிகராக வசூல் சக்கரவர்த்தியாக உயரவில்லை. ராஜகுமாரி படம் நல்ல வசூலை தந்தாலும் அது புதுமுகங்களின் படமாகவே கருதப்பட்டது. 1951இல் மர்மயோகி வெளியான பிறகு எம்.ஜி.ஆர். உச்ச நட்சத்திரமானார். 1954இல் மலைக்கள்ளன் வெளிவந்த பிறகு எம்.ஜி.ஆர். திரை உலகின் அசைக்க முடியாத சக்தியாக உயர்ந்தார். இப்படத்திற்கு ஜனாதிபதி விருது கிடைத்தது. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி, சிங்களம் என ஆறு மொழிகளிலும் அந்தந்த மொழி நடிகர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. தமிழில் மலைக்கள்ளன் படத்தில் அமைந்த

“எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே

சொந்த நாட்டிலே, நம் நாட்டிலே”

என்ற பாடல் எம்.ஜி.ஆர். திரைப்பட பாடல்களின் வெற்றி வரலாற்றில் முதல் தடம் பதித்த பாடலாகும். அந்த பாடலை கேட்டு படத்தை பார்த்த தமிழ் ரசிகர்கள்

‘ஓராயிரம் ஆண்டுகள்

ஓய்ந்து கிடந்த பின்னர்

வாராது போல வந்த

ஓர் மாமணி எம்ஜிஆர்’

என்று பாரதியின் வழியில் நின்று போற்றிப் புகழ்ந்தனர்.

மலைக்கள்ளன் படத்தில் பணக்காரர்களிடமிருந்து எடுத்துக் கொடுத்து ஏழைகளுக்கு உதவிய எம்.ஜி.ஆரை ஏழைப் பங்காளனாகக் கருதினர். அவரும் அன்றாட வாழ்வில் ஏழைகளுக்குத் தன்னாலான பல உதவிகளை செய்து வந்தார்.

‘சித்திரமும் கைப்பழக்கம்

செந்தமிழும் நாப்பழக்கம் வைத்ததொரு

கல்வி மனப்பழக்கம்

நித்தம் நடையும் நடைப்பழக்கம்

நட்பும் தயையும் கொடையும் பிறவிக்குணம்’

என்று அவ்வையார் பாடியதை அகத்தில் கொண்டவர்கள் எம்.ஜி.ஆரின் கொடை குணத்தை அவருடைய பிறவிக் குணமாக கருதினர். அவரை பெருந்தன்மை கொண்ட கொடை வள்ளலாக மதித்தனர். மக்களின் மதிப்பும் மரியாதையும் எம்.ஜி.ஆரை சலியாத உழைப்புக்கும் சொந்தக்காரர் ஆக்கிற்று.

எம்.ஜி.ஆர். ஒருபோதும் பகலில் உறக்கம் கொள்வது கிடையாது. இரவிலும் அளவாக தூங்கிப் பழகியவர். அதிகாலை நான்கு மணிக்கு எழுந்துவிடுவார். ஆறு மணிக்கு வெள்ளை உடையுடன் அரசியல்வாதிகள் பலர் அவரை சந்திக்க ராமாவரம் தோட்டத்தில் காத்திருப்பார்கள். சோம்பல் என்பதை அவரிடம் காணவே இயலாது. உட்காரும் போது கூட நிமிர்ந்து உட்கார வேண்டும் என்ற கொள்கையை பழக்கவழக்கத்தை பின்பற்றியவர். நடிகை லட்சுமி ஒருமுறை படப்பிடிப்பு நிலையத்தில் சாய்வாக சரிந்து உட்கார்ந்து இருந்தபோது ‘இந்த வயதில் இப்படி உட்கார்ந்தால் இதுவே பழக்கமாகி முதுகு கூன் போட்டு விடும். நிமிர்ந்து உட்கார்ந்து பழகு’ என்று தனக்கு அறிவுரை கூறியதாக ஒரு பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

மற்றவர்கள் எப்படி போனால் நமக்கென்ன என்ற விட்டேற்றியான குணம் கொண்டவர் அல்ல எம்.ஜி.ஆர். வாழு வாழ விடு என்ற உயர் பண்பினை போற்றி வளர்ந்தவர் என்பதால் தானும் வாழ வேண்டும் மற்றவர்களும் சிறப்பாக வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் அவர் தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக்கொண்டார்.

கடுமையான உழைப்புக்கு சொந்தக்காரர். உடல் அலுத்து ஓய்வு பெறுவதாக இருந்தால் கூட அவர் பகலில்

உறக்கம் கொள்வது கிடையாது. அந்த ஓய்வு நேரம் கூட சமூகத்தைப் பற்றிய, மனிதர்களைப் பற்றிய, நாட்டு மக்களிடையே இருக்கும் ஏற்றத்தாழ்வை பற்றிய சிந்தனையாகவே அவருக்கு இருந்தது. அவருடைய படங்களில் வரும் பாடல்களுக்கு இந்த சிந்தனையே புதிய கருத்துக்களை எடுத்துக் கொடுத்தது. அந்தப் பாடல்களைப் பாடி நடிக்கும் போது என்ன பாவனைகள் காட்ட வேண்டும் என்று சிந்திப்பதாக, ஒத்திகை பார்ப்பதாக கூட, சில ஓய்வுக்காலம் இருந்திருக்கிறது. ஆனால் ஒருபோதும் எம்.ஜி.ஆர். ஓய்வு என்று உறங்குவது இல்லை.

உழைப்புக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கும் எம்.ஜி.ஆர். மற்றவர்களிடமும் உழைத்து முன்னேற வேண்டும் கடுமையாக உழைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி கொண்டிருந்தார். அவருடைய கால்ஷீட் கிடைப்பது கடினம் என்று தயாரிப்பு காலம் நீண்டு போகும் என்று சொல்லி வருத்தப்படும் தயாரிப்பாளர்கள் கூட அந்தப் படம் முடிந்ததும் அடுத்த படத்திற்கு அவரிடம் தான் போய் நிற்பார்கள் என்று ஒரு பேட்டியில் சோ குறிப்பிட்டிருந்தார். காரணம் அவர் முனைப்புடன் வந்து படப்பிடிப்பு நிலையத்தில் படப்பிடிப்பை தொடங்கி விட்டால் பின்பு எக்காரணம் கொண்டும் சோம்பி இருக்க மாட்டார். இரவும் பகலும் கடுமையாக உழைக்கக் கூடியவர். தன் படம் சிறப்பாக வரவேண்டும் என்பதில் தயாரிப்பாளரை விட இவருக்கு அக்கறை அதிகம் என்பதால் படம் காலத்தால் முந்தி வருவதை விட மக்கள் கவனத்தில் முக்கிய இடத்தை பெற வேண்டும் என்பதில் எம்.ஜி.ஆர். அதிக அக்கறை காட்டினார். இவ்வாறு ரசிகர்களின் ஏகோபித்த வரவேற்பை பெற்றுவிடுவார். எனவே வசூல் அதிகமாகி தயாரிப்பாளருக்கு நல்ல லாபத்தை பெற்றுத் தரும்.

பணத்தோட்டம் படத்தின் கிளைமாக்ஸ் காட்சி இரவு பகலாக 24 மணி நேரம் நடந்தது. முதல் நாள் 7 மணிக்கு காலை 7 மணிக்கு தொடங்கிய படப்பிடிப்பு தொடர்ந்து நடந்து கொண்டே இருந்தது. எம்ஜிஆர் ஆர்வம் காட்டியதால் மற்றவர்களால் எதுவும் சொல்ல இயலவில்லை.

தொடர்ச்சியாக நடந்த படப்பிடிப்பு முடிந்து எல்லோரும் வீட்டுக்கு புறப்படும் போது மறுநாள் விடிந்து ஏழு மணி ஆகிவிட்டது. இவ்வாறாக சலியாத உழைப்பைக் கொண்ட எம் ஜி ஆர் படப்பிடிப்பில் முனைப்புக் காட்டத் தொடங்கிவிட்டால் முடிக்காமல் கிளம்ப மாட்டார்.

ஆட்டோகிராபில் உழைப்பவரே உயர்ந்தவர் என்று எழுதி கையெழுத்து போட்டு தரும் எம் ஜி ஆர் தன்னுடைய படத்திலும் பாடல்களிலும் உழைப்பின் மேன்மையை வலியுறுத்த விரும்பினார். ஒளி விளக்கு படத்தில் மாசக் ஷாட் காட்சிகளாக எடுக்கப்பட்ட தைரியமாக சொல் நீ மனிதன் தானா பாடலின் படப்பிடிப்பு நடந்த போது கேமராவை பின்னோக்கி சுற்றுவதில் ஏற்பட்ட ஒரு பிழை எடுத்த காட்சிகள் எல்லாம் வீணாகிவிடுமோ என்ற ஐயத்தை ஏற்படுத்தியது. 'சரி கேமராவை மீண்டும் சரி பார்த்து வையுங்கள்' என்று சொல்லிவிட்டு எம்ஜிஆர் கிளம்பிவிட்டார்.

கேமராமேனும் தான் எடுத்த காட்சிகளை மீண்டும் சரிபார்த்தபோது ஐந்து ஐந்தாக எடுத்ததில் ஒன்று சரியாக மட்டும் வந்திருந்தது. 'சரி இனி அவருக்கு போன் போட்டு சொல்லி விடுங்கள்' என அவர் சொல்லி விட்டு திரும்பிய போது அவர் தோளில் ஒரு கை அழுத்தியது. திரும்பிப் பார்த்தால் அங்கே எம்ஜிஆர் நின்று கொண்டிருந்தார். 'வீட்டுக்கு போக மனம் இல்லை அதனால் வந்து விட்டேன் இப்போது மகிழ்ச்சி காட்சிகள் நல்லபடியாக வந்திருப்பது எனக்கு நிம்மதியை தருகிறது இனி நான் போய் நிம்மதியாக தூங்குவேன்' என்றாராம். அவர் உறங்க வேண்டிய நேரத்தில் கூட உறங்காமல் தான் செய்த வேலைகள் சரியாக இருக்கின்றனவா? நாம் சிறப்பாக செய்திருக்கிறோமா? எடுத்த காட்சிகள் சிறப்பாக வந்துள்ளனவா என்ற ஆர்வத்துடன் செயல்படுவார்.

உழைப்பு உழைப்பு உழைப்பு என்பதே தாரக மந்திரமாக கொண்டிருந்தவர் எம்.ஜி.ஆர். அண்ணா திமுக கட்சி ஆரம்பித்த பிறகு பகலில் ஷூட்டிங் இரவில் மீட்டிங் என்று பிரித்துக் கொண்டு தன்னுடைய பணிகளில் ஈடுபட்டாலும் பகலிலும் அவரைப் பார்க்க பிற

மாவட்டங்களிலிருந்து ரசிகர்களும் தொண்டர்களும் படப்பிடிப்பு நிலையத்திற்கு வந்து கூடி விடுவார்கள். அவர்களைப் பார்த்துப் பேசிவிட்டு காட்சிகளை நடித்துக் கொடுப்பார். மீண்டும் இடைவேளையில் அடுத்த மாவட்டத்தில் ரசிகர்களைப் பார்த்து பேசுவார். இவ்வாறாக அவர் தொடர்ச்சியாக கடுமையாக உழைத்துக் கொண்டிருந்தார். அந்த உழைப்பின் பலன் தான் அண்ணா திமுக கட்சி மாபெரும் வெற்றியை பெற்று தொடர்ந்து 10 ஆண்டுகளாக ஆட்சியை தக்க வைத்துக் கொண்டிருந்தது.

எம்.ஜி.ஆர். எப்போதும் தன்னுடைய நேரத்தை வீணாக செலவிடுவது கிடையாது. அடியாட்களோடு அல்லது நண்பர்களோடு உட்கார்ந்து வெட்டியாக அரட்டை அடிப்பதில் அவருக்கு விருப்பமில்லை. பிறரைப்பற்றி புறம் பேசுவதை அவர் ஆதரிக்க மாட்டார். யாராவது அப்படி ஒரு தகவலை தெரிவித்தால் கூட ‘பாவம் அவர்களுக்கு என்ன கஷ்டமோ என்ன நிலைமையோ’ என்று சொல்லி அந்தப் பேச்சுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விடுவார். தன்னைப் பற்றி புகழ்ச்சியாகப் பேசுவதை கேட்டு உட்கார்ந்து ரசித்துக்கொண்டிருக்கும் பழக்கமும் எம்.ஜி.ஆருக்கு கிடையாது. மற்றவர்களை கேலி பேசுவதும் கிண்டலடிப்பதும் பட்டப்பெயர் வைத்து குறிப்பிட்டு பேசுவதும் எதிர் அணியினரின் தோல்விகளை சிலாகித்து மகிழும் பழக்கமும் எம்.ஜி.ஆருக்கு கிடையாது. எம்.ஜி.ஆர். தன்னுடைய நேரத்தை வீணடிக்காமல் உரிய முறையில் சிறப்பாக பயன்படுத்தி வந்தார்.

உழைப்பின் பெருமையை அவர் உணர்ந்து இருந்தமைக்கும் அவர் அதை மற்றவர்களிடம் வலியுறுத்தியதற்கும் ஒரு சம்பவத்தை சான்றாக எடுத்துக்காட்டலாம். ராமானுஜம் என்ற வழக்கறிஞர் தினமும் காலையில் நீதிமன்றத்துக்கு கிளம்பும்போது எம்.ஜி.ஆருடைய “கான்வாய்” போகும் நேரம் பார்த்து அதனுடன் சேர்ந்து பின்னாலேயே ஸ்கூட்டரில் போய்விடுவார். இதனால் அவருக்கு வழியில் ‘டிராபிக் ஜாம்’

ஏற்படாது. அவர் வேகமாக போய் விடலாம். அவர் போகும் போது தினமும் மெரினா கடற்கரையில் ஒரு முடவன் எழுந்து நின்று வணங்குவதை பார்த்திருக்கிறார். கால் இல்லாத இந்த முடவன் தன் கம்புகளை வேகமாக எடுத்து ஊன்றிக்கொண்டு எம்.ஜி.ஆர். வரும்போது கையெடுத்து கும்பிட்டபடி நிற்பார். இது தினமும் நடக்கும் ஒரு செயல்.

ஒருநாள் எம்.ஜி.ஆர். கார் பத்தடி தூரம் போய்விட்டு மீண்டும் திரும்பி நின்று எம்.ஜி.ஆர். இறங்கி வந்து அந்த நபரை பார்த்து ஏதோ பேசிவிட்டு போனார். வழக்கறிஞர் ராமானுஜம் தன் வண்டியை விட்டு இறங்கவில்லை. அன்று மாலை நீதிமன்றத்தில் இருந்து திரும்பும்போது அதே முடவரை அங்கு தேடினார். அவர் அந்த இடத்தில் இல்லை. பின்பு தேடி கண்டுபிடித்து விட்டார். கண்டுபிடித்து அவரிடம் இன்று காலை உன்னிடம் முதல்வர் என்ன பேசினார் என்று கேட்டார். அதற்கு அந்த முடவன் ‘நீ என்ன செய்கிறாய்’ என்று கேட்டார் ‘நான் பிச்சை எடுத்த சாப்பிடுகிறேன்’ என்றேன். ‘பிச்சை எடுக்கக்கூடாது உழைத்து சம்பாதிக்க வேண்டும்’ என்று சொல்லி என்னிடம் பணம் கொடுத்தார். “நீ ஒரு பெட்டிக்கடை வைத்துக் கொள்; ஆனால் சிகரெட் மட்டும் விற்காதே” என்று சொன்னார் என்றதும் வக்கீல் அசந்து போய்விட்டார்.

சில வாரங்களுக்கு முன்பு இதே முடவனிடம் ஒரு ராமானுஜம் போய் ஒரு கேள்வி கேட்டார். ‘நீ ஏன் தினமும் எழுந்து நின்று முதல்வருக்கு வணக்கம் சொல்கிறாய்; அவர் காருக்குள் உட்கார்ந்து பேசிக் கொண்டு போகிறார்; அவர் உன்னை கவனிப்பாரா; உனக்கு வணக்கம் சொல்லுவாரா? எதற்கு இவ்வளவு சிரமப்பட்டு கைக்கட்டையை எடுத்து எழுந்து ஊன்றிக் கொண்டு நிற்கிறாய்” என்று கேட்டபோது அந்த முடவன் ‘ஐயா பெரியவர்களைப் பார்க்கும்போது வணக்கம் சொல்வது என் பழக்கம். நாம் கோயிலுக்குப் போகிறோம் சாமியை பார்த்து கும்பிடுகிறோம் நம்முடைய குறைகளை சொல்கிறோம். சாமி கேட்கிறது பார்க்கிறது என்ற நம்பிக்கையில் தான் இதை செய்கிறோமே தவிர வேறு ஒன்றும் கிடையாது. நம்முடைய வேண்டுதல்

நிறைவேறவில்லை என்றால் நாம் சாமியை குறை சொல்லவா முடியும். அது போல் நான் அவரை வணங்குகிறேன். அவர் என்னை வணங்குகிறாரா இல்லையா என்பதைப் பற்றி நான் கவலைப் படுவதில்லை' என்று சொல்லிவிட்டார் அன்று ராமானுஜம் தனக்குள் சிரித்துக்கொண்டார். இப்படியும் ஆட்களும் இருக்கிறார்களே. காருக்குள் உட்கார்ந்து போகின்ற அவரைப் பார்த்து வெளியே நின்று கும்பிடுவதால் என்ன பலன் என்று தனக்குத் தானே சிரித்துக் கொண்டு போய்விட்டார். ஆனால் இப்போது ராமானுஜத்துக்கு நன்றாக புரிந்தது. எம்.ஜி.ஆர். தினமும் இந்த முடவனை பார்த்திருக்கிறார். வணக்கம் சொல்லியும் இருக்கலாம். இவருடைய வாழ்க்கைக்கு ஒரு நல்ல வழி காட்ட வேண்டும் என்ற எண்ணத்தோடு அங்கு காரை நிறுத்தி அவரிடம் பேசி அவருக்கு ஒரு சொந்த தொழில் செய்ய வகை செய்து கொடுத்திருக்கிறார். அத்துடன் சிகரெட் விற்கக்கூடாது என்ற அறிவுரையையும் வழங்கியிருக்கிறார்.

சிகரெட் விற்கக் கூடாது என்பது முடவனுக்கு செய்யும் நன்மை அல்ல. இந்த சமூகத்திற்கு அவர் செய்யும் நன்மை. எம்.ஜி.ஆர். தனிமனிதன் மீது அன்பும் சமூகத்தின் மீது அக்கறையும் கொண்டவர் என்பது ராமானுஜத்துக்கு மிக நன்றாகப் புரிந்தது. இந் நிகழ்ச்சியை சுகி சிவம் அவர்கள் தன் மேடைப்பேச்சில் தெரிவித்தார்.

உழைப்பாளிக்கு உரிமை வாழ்வு

கடும் உழைப்புக்கு சொந்தக்காரரான எம்.ஜி.ஆர். அந்த உழைப்பின் மேன்மையை தன்னுடைய படப்பாடல்களின் மூலமாக தன் மக்களுக்கு தன் ரசிகர்களுக்குச் சொல்லும் சகல தகுதியும் பெற்றவர் ஆகிறார். 1958 வெளிவந்த நாடோடி மன்னன் படத்தில் ஒரு கேள்வி பதில் பாடல் இடம்பெறும். அந்தப் பாடலில்

"உழைப்பதிலா உழைப்பைப் பெறுவதினால் இன்பம்

உண்டாகும் என்றே சொல் என் தோழா"

என்ற கேள்விக்கு

“உழைப்பவரே உரிமை பெறுவதில் இன்பம்

உண்டாகும் என்றே சொல் என் தோழா”

என்ற பதில் வழங்கப்பட்டிருக்கும். உழைப்பவர் தனக்கான அடிப்படை உரிமைகளை குறிப்பாக வாழ்வுரிமைகளைப் பெற்று வாழ்வதனால் மட்டுமே அவருக்கு இன்பம் கிடைக்கும். இவை இல்லாமல் வெறும் கூலியைக் கொடுத்து உணவைக் கொடுத்து உறைவிடம் என ஒன்றைக் கொடுத்து அவர்களை விலங்குகளைப் போல் அடைத்து வைப்பதும் அவர்களுக்கு இன்பத்தை தராது. உரிமை வாழ்வு மட்டுமே சுதந்திர உணர்வை தரும்; மனிதர்களை மகிழ்ச்சியாக வாழ வைக்கும். உழைப்பாளியின் மகிழ்ச்சிக்கு அடிப்படை தேவை பணம் அல்ல உரிமை வாழ்வு என்பதை எம்.ஜி.ஆர். நன்கு உணர்ந்தும் இருந்தார், உணர்த்தியும் வந்தார்.

தொழிலாளியின் இலக்கணம்

தொழிலாளி படத்தில் எம்.ஜி.ஆர். பகலில் கடுமையாக உழைத்து கை வண்டி இழுத்து தன் தாயைக் காப்பாற்றுவார். இரவில் படித்து பட்டதாரி ஆகி ஒரு பச கம்பெனியில் நடத்துனராக சேர்வார். பின்பு தொழில் நேர்மை காரணமாக சோதனை அதிகாரியாக உயர்த்து பிறகு மேலாளராக பதவி உயர்வு பெறுவார். ஒரு தொழிலாளி தனது கடுமையான உழைப்பால் நேர்மையான பண்பால் மேன்மையான நிலையை அடையமுடியும் என்பதை உணர்த்துவார். அப்படத்தில் இருப்பதை கொண்டு சிறப்புடன் வாழும் இலக்கணம் படைத்தவன் தொழிலாளி’ என்று தொழிலாளிக்கான இலக்கணத்தை எடுத்துரைப்பார்.

தொழிலாளி என்பவன் பேராசைக்காரன் அல்ல; முதலாளி தனக்கு இருக்கும் சொத்துக்களுக்கு மேல் சொத்துக்களை வாங்கிக் குவிக்கும் பேராசை காரணமாக பெரும் பணக்காரனாக இருப்பான். ஆனால் தொழிலாளியோ தன்னுடைய வரவுக்குள் செலவை கட்டுப்படுத்தி வைத்துக் கொள்ளும் சிக்கனகாரனாக இருப்பான். எனவே அவன்

இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழும் இலக்கணம் படித்தவன் உழைப்பின் மேன்மையை உணர்ந்தவன்.

பழந்தமிழ் நூல்களில் தமிழ்ச் சான்றோர் உழுதுண்போர் உழுவித்துண்போர் என்று விவசாய தொழிலாளியையும் விவசாய நிலம் வைத்திருப்போரையும் பிரித்து அறிகின்றனர். உழுது உண்பவர் என்பவர்கள் தன்னுடைய உழைப்பால் பெறும் வருமானத்தைக் கொண்டு வாழ்பவர்கள்; உழுவித்துண்போர் மற்றவர்களை வேலை வாங்கி அவர்களின் உழைப்பைச் சுரண்டி அதன் மூலமாக உண்டு கொழுத்து வாழும் தனவந்தர்கள். அவர்கள் பெருநிலக்கிழார்கள். இது போன்ற பிரிவினையே இன்று முதலாளி தொழிலால் என வளர்ந்து வந்துள்ளது.

முன்னேற்றத்துக்கு வழி உழைப்பு

அன்னமிட்டகை படத்தில் இவ் வாழ்க்கையில் நாம் முன்னேற என்ன வேண்டும் என்ற கேள்வியை எழுப்பி எம்ஜிஆர் பதில் கொடுத்து இருப்பார். அன்னமிட்ட கை எனத் தொடங்கும் பாடல் அவர் வீட்டுக்கு வருபவர்கள் எல்லாம் எந்நேரமும் பசிக்கு உணவு அளித்து அவர் வயிறார உண்டு மகிழ்வதை ரசித்தவர் என்பதால் அப்பெயர் அவரது சிறப்பு பெயராக அமைந்துவிட்டது. அவருடைய கை அன்னமிட்ட கை என்ற பொருளில் அப்பெயர் சூட்டப்பட்டது.

அன்னமிட்ட கை நம்மை ஆக்கிவிட்ட கை எனத் தொடங்கும் பாட்டில்,

முன்னேற என்ன வேண்டும் ?

நல் எண்ணம் வேண்டும்

தன் உழைப்பாலே உண்ண வேண்டும்

என்று வாழ்க்கைக்கான விளக்கம் தரப்பட்டிருக்கும். தன்னுடைய உழைப்பால் உண்பதே சிறந்த வாழ்க்கை. உழைப்புச் சுரண்டல் அல்லது பொருளாதாரச் சுரண்டல் என்ற கோட்பாட்டுக்கு எதிரான கருத்தாக இதனை எம் ஜி ஆர் முன்வைக்கிறார்.

எம்.ஜி.ஆருடைய சத்யா ஸ்டுடியோவில் அங்கு வேலை பார்க்கும் பணியாளர்களும் பங்குதாரர்களாக சேர்க்கப்பட்டிருந்தனர். அவர்களும் குறிப்பிட்ட சதவிகிதத்தில் முதலாளிகள் ஆகவே அந்த நிறுவனத்தில் இருந்தனர். எனவே எம்.ஜி.ஆர். ஊருக்கு உபதேசம் என்ற வகையில் இக் கருத்தை எடுத்துச் செல்லாமல் தன்னுடைய வாழ்க்கையிலும் தன்னுடைய பணியாளர்களிடமும் இதே பண்பை பின்பற்றி வந்தார்.

உழைப்பாளிக்கு மரியாதை.

ஒருமுறை எம்.ஜி.ஆர். ஓய்வாக இருந்த நாளில் தோட்டத்துப் பக்கம் உலாவிக் கொண்டிருந்தபோது அங்கு தோட்டக்காரன் ஒருவன் கீரை பாத்திகளுக்கு தண்ணீர் பாய்ச்சி கொண்டிருந்தான். அப்போது எம்.ஜி.ஆர். அவன் கிழிந்த சட்டையை போட்டிருப்பதை பார்த்து தன் வளர்ப்பு மகனை அழைத்தார். அப்பு வீட்டுக்குள் இருந்து ஓடோடி வந்தார். அப்புவிடம் காதில் ஏதோ சொல்லி 'போய் வாங்கிக் கொண்டு வா' என்றார். அப்பு உடனே சரி என்று சொல்லிவிட்டு காரை எடுத்துக்கொண்டு போய் எம்.ஜி.ஆர். சொன்ன பொருட்களை வாங்கிக் கொண்டு வந்தார். அவர் கொண்டு வந்து எம்.ஜி.ஆரிடம் கொடுத்ததும் எம்.ஜி.ஆர். அந்த கீரைக்கு தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்த தோட்டக்காரனை அழைத்து "இந்தாப்பா உனக்கு ஆறு 'செட்' உடை, நீ தினமும் ஒரு உடை உடுத்து; இப்படி அழுக்கான பழைய கிழிந்த உடைகளை உடுத்தாதே. நீ எம்.ஜி.ஆரிடம் வேலை பார்க்கிறாய் என்னைப் போலவே நீயும் இருக்க வேண்டும்; உனக்கு மட்டும் ஏன் இந்த இழிநிலை; இந்தா வைத்துக்கொள் என்று ஆறு செட் பேண்ட் சட்டைகளைக் கொடுத்தார்.

உழைப்பாளியை மதிக்க வேண்டும்

உழைத்துப் பிழைப்பவரை மட்டமானவர் என்பதும் பிறர் உழைப்பில் வாழ்பவர் அதிகாரத்தில் உள்ளவர் செல்வாக்கானவர், அவர் செல்வப் பிரபு என்றும் இச்சமுதாயம் எண்ணிக் கொண்டிருக்கிறது. இவர்களைத்தான் தொழிலாளி முதலாளி என்று பிரிவினை செய்து பிரித்து

வைத்திருக்கின்றது. ஆனால் எம்.ஜி.ஆர். இந்தப் பிரிவினையை கடுமையாகச் சாடுகிறார்.

நான் ஏன் பிறந்தேன் படத்தில் சிறுவர்களிடம் பிரிவினையை எடுத்துக்கூறி நீங்கள் உங்கள் வாழ்க்கையில் உழைப்பவரை அவமதிக்காதீர்கள். அவர்களுக்கு உரிய கூலியை கொடுங்கள். அவர்களுக்குரிய மரியாதையை கொடுங்கள் என்று உணர்த்தும் முகமாக

“உழைப்பால் பிழைப்போர் தாழ்ந்திருந்தாலும்

உயர்ந்தவர் ஆவார் குணத்தாலே”

என்ற வரிகளைப் பாடுகிறார். இங்கு தாழ்ந்திருந்தாலும் என்ற சொல் வசதியால் வளத்தால் பணத்தால் தாழ்ந்து இருப்பதை மட்டுமே குறிக்கின்றது. உழைப்பவர்கள் குணத்தால் அன்பினால் பண்பினால் உயர்ந்தவர்கள். எனவே அவர்களை நாம் மதிக்க வேண்டும் என்று சிறுவருக்குப் பாடும் பாட்டில் எடுத்துக் காட்டுகிறார்.

தன் வீட்டுச் சிறுவனிடம் ‘அடித்து சொன்னார்’

ஒருமுறை எம்.ஜி.ஆர். தன் அண்ணன் மற்றும் படக்குழுவினரோடு விவாதத்தில் இருந்தபோது எம்.ஜி.ஆரின் அண்ணன் வெளியே வந்து அவருடைய பேரனிடம் டிரைவரை கூப்பிடு என்று சொன்னார் உடனே அவர் பேரன் பிரதீப் ஓடிப்போய் ‘டிரைவர் உங்களை தாத்தா கூப்பிடுறாங்க’ என்று சொல்லிவிட்டு வந்து விட்டார். படப்பிடிப்பு குழுவினர் அனைவரும் எம்.ஜி.ஆரிடம் விடைபெற்றுக் கொண்டு சென்ற பின்னர் எம்.ஜி.ஆர். பிரதீப்பை அழைத்தார். பிரதீப் உள்ளே போனதும் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டார். டிரைவரை டிரைவர் என்று கூப்பிடக் கூடாது. அண்ணே என்று அழைக்க வேண்டும். வேலைக்காரர்களை அண்ணே அக்கா என்றுதான் அழைக்க வேண்டுமே தவிர இவ்வாறு அழைக்கக் கூடாது என்று புத்திமதி கூறினார். இது இவருக்கு மட்டும் அல்ல.

எம்.ஜி.ஆர். வீட்டில் இதற்கு முன்பும் இன்னொரு பிள்ளைக்கும் இது போல ஒரு அடி விழுந்தது உண்டு அந்தச் சிறுமி ரிக்ஷாவில் பள்ளிக்கூடம் போவதற்காகத் காத்துக்கொண்டிருந்தபோது ரிக்ஷாக்காரரை ஆறுமுகம் ஏன் லேட் என்று கேட்டாள். ஆறுமுகம் என்று அவரை பெயர் சொல்லி அழைத்ததற்காக எம்.ஜி.ஆர். அந்த சிறுமியைக் கண்டித்தார். உழைப்பவரை பெயர் சொல்லி அழைப்பது மரியாதை கிடையாது, உறவு சொல்லி அழைப்பதே சிறந்தது. அவர்களை நம்முடைய உடன்பிறப்புகள் போல மதித்து அண்ணே அக்கா என்று அழைக்க வேண்டும் என்பது அவர் தன்னுடைய வீட்டில் பின்பற்றி வந்த பழக்கம்; தன்னுடைய ரசிகர்களுக்கும் கற்றுத்தந்த பழக்கமாகும். ரசிகர்கள் எம்.ஜி.ஆரை எப்போதும் அண்ணே என்று தான் அழைத்து வந்தனர்.

உழைப்பவருக்கு உரிமைகள் எதற்காக?

முன்னேற என்ன வேண்டும் என்று கேள்வி எழுப்பி பதில் கூறிய எம்.ஜி.ஆர். அடுத்து உழைப்பாளிக்கு உரிமை வேண்டும் என்று குரல் கொடுத்த எம்.ஜி.ஆர். இவற்றிற்கான தொடர்பை மற்றொரு பாடலின் மூலமாக விளக்குகிறார். ஆயிரத்தில் ஒருவன் படத்தில். ***"ஏன் என்ற கேள்வி இங்கு கேட்காமல் வாழ்க்கை இல்லை"*** *என்ற பாட்டில் முன்னேற்றம் உரிமம் உழைப்பு ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்பு குறித்த ஒரு கேள்வி பதில் வடிவத்தில் விளக்கியுள்ளார்.*

முன்னேற்றம் என்பதெல்லாம்

உழைப்பவர் உழைப்பதனாலே

உரிமைகளை பெறுவதெல்லாம்

விடுதலை வேண்டுவதாலே

என்ற வரிகளில் முன்னேற்றம் என்பது உழைப்பினால் கிடைக்கக்கூடியது விடுதலை என்பது உரிமைகளை பெறுவதால் கிடைக்கக் கூடியது என்ற விளக்கம் இப்பாடல் வரிகளில் அளிக்கப்பட்டுள்ளது. எம்.ஜி.ஆர். விரும்பிய



இம்மூன்றையும் பாடலாசிரியர்கள் திரும்பத் திரும்ப இப்பாடல்களில் எழுதுகின்றனர்.

உழைப்பாளிகளுக்கு நம்பிக்கை ஊட்டிய எம் ஜி ஆர்

உழைப்பவர்கள் சோர்ந்து போகும் நேரங்களும் உண்டு. உழைப்புக்கேற்ற வருமானம் கிடைக்காத போதும் உழைப்புக்கு உரிய மரியாதை கிடைக்காத போதும் உழைப்பாளிகளை சிலர் அலட்சியப்படுத்தி அசிங்கப்படுத்தும் போதும் அவர்கள் மனச்சோர்வு அடைகின்றனர். அப்போது அவர்கள் மனம் தளராமல் இருக்க அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டும் விதமாக எம்.ஜி.ஆர். ஒரு பாடலை தந்துள்ளார். தாழம்பூ (1965) படத்தில் வரும்

“எங்கே போய்விடும் காலம் அது

என்னையும் வாழ வைக்கும்

எனத் தொடங்கும் பாட்டில்

உழைப்பது ஒன்றே செயல் எனக் கொண்டால்

நடப்பது நலமாய் நடந்து விடும்”

என்று பதில் கொடுக்கின்றார். உழைப்பவர்கள் அலட்சியப் படுத்தப் படுகிறார்கள் என்ற காரணத்திற்காக அவர்கள் உழைக்காமல் இருந்துவிடக்கூடாது. அவர்கள் தொடர்ந்து உழைத்துக் கொண்டே இருந்தால் உழைப்பது ஒன்றே தமது செயல் என்று ஓயாத உழைப்பை நல்கினால் அதன் பின்பு நடப்பது எல்லாம் நல்லதாகவே நடக்கும் என்று உழைக்காமல் உட்கார்ந்து சோம்பேறி ஆகிவிடாதீர்கள்; தொடர்ந்து உங்களுடைய கடுமையான உழைப்பை கொடுங்கள். உங்களுக்கு நன்மைகள் கிடைக்கும் என்று நம்பிக்கை ஊட்டுகிறார்.

உழைப்பின் சின்னம் கை

உழைப்பின் மகத்துவத்தை உணர்த்தும் படங்களில் உழைப்புக்கு காரணமான கையை ஒரு குறியீடாகக் கொண்டு பல பாடல்களை இயற்றச் செய்து பல பாடல் காட்சிகளில் நடித்துள்ளார். கை என்பது உழைப்பின் சின்னமாக இருக்கிறது. வாழ்க்கையில் மட்டுமல்ல அவர் கட்சியிலும் அப்படி கை உழைப்பின் சின்னமாக போற்றப்பட்டது. அண்ணா திமுகவின் தொழிற்சங்கத்துக்கு என ஒரு சின்னம் வடிவமைக்கப்பட வேண்டும் என்று சிந்தனை எழுந்தபோது எம்.ஜி.ஆருக்கு பழைய சம்பவம் ஒன்று நினைவுக்கு வந்தது. அண்ணாவின் கடைசி நாட்களில் அண்ணா ஒரு படத்தை கிழித்து எம்.ஜி.ஆர். கையில் கொடுத்தார். அந்த படத்தில் ஸ்பானர் பிடித்த கை ஒன்று காட்சியளித்தது. அந்தப் படத்தை எம்.ஜி.ஆர். பத்திரமாக வைத்திருந்தார். 1969இல் நடந்த இச்சம்பவம் அண்ணா திமுக ஆரம்பித்த பிறகு தக்க சமயத்தில் அவருக்கு நினைவு வந்தது. அந்தப் படத்தை எடுத்துக் கொடுத்து அண்ணா திமுக தொழிலாளர் சங்கத்தின் சின்னமாக வைத்துக் கொள்ளுங்கள் என்றார். கை ஸ்பானர் பிடித்திருக்கும் படம் இன்றைக்கும் அண்ணா திமுக கட்சியின் தொழில் சங்கத்துக்கு அடையாளமாக இருக்கிறது.

அண்ணா திமுக ஆரம்பித்த பிறகு அவர் தன் படத்தில் வைத்த

“இது நாட்டை காக்கும் கை

உன் வீட்டை காக்கும் கை

இந்தக் கை நாட்டின் நம்பிக்கை

இது எதிர்காலத் தாயகத்தின் வாழ்க்கை”

என்ற பாடலில் பல தொழிலாளர்களை அறிமுகப்படுத்தி அவர்களின் சிறப்பான செயல்பாடுகளை விளக்கி இருப்பார். தனது கை சுத்தத்தையும் தெளிவாக்கி இருப்பார், திமுகவின் கைகள் ஊழல் கறை படிந்தவை என்பதையும் நாட்டு மக்களுக்கு விளக்கி இருப்பார்.

தனிப்பிறவி படத்தில் உழைக்கும் கைகளே உருவாக்கும் கைகளே உலகை புது முறையில் உண்டாக்கும் கைகளே என்ற பாட்டிலும் ஆற்று நீரை தேக்கி வைத்து அணைகள் கட்டும் கைகளே என வரிசையாக பல தொழில்களை எடுத்துச் சொல்லி கையின் சிறப்பு உழைப்பின் சிறப்பு என்பதை உறுதிப்படுத்துவார்.

உழைப்பு-உணவு- வணக்கம்- வாழ்த்து

வணக்கம் சொல்வதற்கும் வாழ்த்துவதற்கும் உழைப்பதற்கும் உணவு அளிப்பதற்கும் என நான்கு பணிகளுக்கு அவருக்கு கை அடையாளச் சின்னமாக இருந்திருக்கிறது. கடுமையாக உழைக்க வேண்டும். உழைப்பு மேன்மை தருகிறது. உழைப்பு நல்ல பண்பை தருகிறது. உழைப்பு முன்னேற்றத்தை தருகிறது, என்பவற்றை எல்லாம் கடந்து இன்னும் ஒரு சிறப்பான பயன் உழைப்பினால் இருக்கிறது.

முதியவர்களின் உழைப்பு

இன்றைக்கும் வசதி வாய்ப்பில்லாத இடங்களில் பலர் வயதான முதியவர்கள் மிகவும் சிரமப்பட்டு சில பல வேலைகளைச் செய்து பிழைத்து வருகின்றனர். 1969இல் சந்திரோதயம் படம் வெளிவந்த போது முதியவர்களின் உழைப்பு குறித்து எம்.ஜி.ஆர். ஒரு கேள்வி எழுப்பி அதற்கு பதில் அளிக்கும் விதமாக ‘புத்தன் இயேசு காந்தி பிறந்தது பூமியில் எதற்காக’ என்ற பாடலில் சில வரிகள் அமைந்துள்ளன.

கேள்விக்குறி போல் முதுகு வளைந்து உழைப்பது எதற்காக என்ற கேள்விக்கு, கேள்விக்குறி போல் முதுகு வளைந்த ஒரு முதியவர் கை வண்டி இழுப்பவர் இவ்வளவு சிரமப்பட்டு ஏன் உழைக்க வேண்டும் என்ற வினாவை எழுப்பி 'மானம் ஒன்றே பெரிதென எண்ணி பிழைக்கும் நமக்காக' என்ற பதிலை இப்பாடலில் வழங்கி இருப்பார். எம்.ஜி.ஆர். படங்களிலும் பொதுக் கூட்டங்களிலும் அவர் முதியவர்களிடம் அவர் அன்புசெலுத்தும் காட்சிகளைப் பார்க்கலாம்.

முதியவர்கள் வயதான காலத்தில் தம்மை ஆதரிப்பார் யாரும் இல்லாத காரணத்தினால், பிச்சை எடுக்கக்கூடாது திருடக்கூடாது மானத்தோடு பிழைக்க வேண்டுமென்றால் உழைத்துப் பிழைக்க வேண்டும் எனற குறிக்கோளுடன் கஷ்டப்பட்டு உழைக்கின்றனர். கேள்விக்குறி போல் முதுகு வளைத்து உழைக்கின்றனர். அதனால் மானத்தோடு பிழைக்கின்றனர் என்று எம்.ஜி.ஆர். வயதானவர்கள் உழைப்பதற்கான காரணத்தையும் கூறி உழைப்பின் மகத்துவமே உழைப்பாளி மானத்தோடு வாழ்கின்ற வாழ்க்கை தான் என்று பிறருடைய உழைப்பில் உட்கார்ந்து சாப்பிடும் சோம்பேறி அல்ல. அவன் என்ற பெருமையை வழங்கி அவன் மானஸ்தன் என்ற புகழை அவனுக்கு அளிக்கும் விதமாக இந்தப் பாடலின் கருத்து வெளிப்படுகிறது. இந்நிலைமையை சினிமாவில் விளக்கிய எம்.ஜி.ஆர். தான் கருத்து ஊன்றி கவனித்து வந்த இந்த பரிதாப நிலையை தான் முதல்வரானதும் மாற்றிக் காட்டினார்.

முதியோருக்கும் மதிய உணவு மற்றும் உதவி தொகை

எம்.ஜி.ஆர். ஆதரவற்ற முதியோருக்கு அரசு உதவ வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் முதலில் அறிமுகப்படுத்திய ஒரு திட்டம் முதியோர் உதவித்தொகை திட்டம் ஆகும். முதியோருக்கு அவர் மாதந்தோறும் அவர்களின் கைச்செலவுக்கு பணம் வழங்கினார் பின்பு அது கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்தது. இதை எம்.ஜி.ஆர். காசு என்றே முதியவர்கள் இன்றும் அழைக்கின்றனர்.

எம்.ஜி.ஆர். முதியோர்களுக்கு சத்துணவு மையத்தில் மதியம் ஒருவேளை நல்ல சத்துணவை வழங்கினார். அரிசி பருப்பு காய்கறி கீரை என சரிவிகித சத்துணவு அப்போது முதியவர்களுக்கு வழங்கப்பட்டது. இது போக அவர்களின் கைச் செலவுக்கு உதவி தொகையும் வழங்கப்பட்டது. முதியோர்களுக்கு கிடைக்கும் பெரிய மகிழ்ச்சியே அவர்கள் தன் பேரக்குழந்தைகளுக்கு பத்துகாசு இருபது காசு என்று கொடுத்து மகிழ்வதாகும். இந்த மகிழ்ச்சி அவர்களுக்கு இந்த உதவித்தொகையால் கிடைத்தது. எனவே மதிய வேளையில் தினமும் ஒருவேளை நல்ல சத்துணவையும் வழங்கி கைச் செலவுக்கும் காசு வழங்கியவர் எம்.ஜி.ஆர்.

நிறைவு

எம்.ஜி.ஆர். உழைப்பின் மேன்மையை தன்னுடைய பாடல்களில் பாடலாசிரியர்களின் மூலமாக வலியுறுத்தியதோடு அனைவரும் உழைக்க வேண்டும். உழைப்பாளிகளுக்கு உரிமைகள் வழங்கப்படவேண்டும்; உழைப்பாளிகள் சிக்கனமாக வாழ்க்கையை நடத்துவார்கள்; உழைப்பாளிகள் மானத்தோடு வாழ விரும்புகின்றவர்கள்; என்ற கருத்துக்களை பதிய வைத்தார். மக்களுக்கு மனதில் உழைப்பின் பெருமையை உணர்த்தினார்.

சொந்த வாழ்வில் எம்.ஜி.ஆர். ஒரு கடுமையான உழைப்பாளி என்பதால் தன்னுடைய பேட்டிகளில் தன்னுடைய கடும் உழைப்பை பற்றி அவர் விளக்கிச் சொல்லியிருக்கிறார். அவருடைய கடும் உழைப்புப் பற்றி மற்றவர்களும் எடுத்துச் சொல்லியிருக்கின்றனர். அவருடைய உழைப்பு அவருடைய வெற்றிக்கு பிரதானமாக இருந்தது என்பதை எவரும் மறுக்க இயலாது. சிறப்பாக சிந்தித்து தீவிரமாக உழைக்கக் கூடிய அவர் தன்னுடைய சிந்தனைகளை செயல்படுத்தக்கூடிய மற்றவர்களோடு சேர்ந்து கூட்டு உணர்வோடு செயல்படுத்தும் பண்புகளை படைத்தவர்.

சக தொழிலாளிகளை மதிப்பவர் எம்.ஜி.ஆர். என்பதால் அவருடைய பாடல்களில் சுட்டப்பட்ட

உழைப்பின் மேன்மை பற்றிய கருத்துக்கள் ரசிகர்களாலும் ரசிகர் அல்லாதவர்களும் கூட கேட்டு ரசிக்கப்பட்டன. எம்.ஜி.ஆர். சொல்லிய கருத்துக்கள் உண்மை என்று உணரப்பட்டன. இது வெறும் சினிமா பாட்டு தானே; ஏதோ பாடல் ஆசிரியர் எழுதுகிறார்; டிஎம்எஸ் பாடுகிறார் என்று அதனை அலட்சியப் படுத்தாமல் எம்.ஜி.ஆரின் பாட்டு எம்.ஜி.ஆர். சொல்லும் கருத்து என்று ஒரு தத்துவஞானிக்குக் கொடுக்கும் மரியாதையை மக்கள் எம்.ஜி.ஆரின் பாடல் கருத்துகளுக்கு கொடுத்தனர். அவருக்கும் கொடுத்தனர். அந்த மரியாதையை அவரும் காப்பாற்றிக் கொண்டார். அதனால் தான் இன்றுவரை மக்களும் அவரை மதித்து 102வது ஆண்டு பிறந்தநாள் விழாவை மாவட்டம் தோறும் கொண்டாடி வருகிறார்கள்.

நூறு வருடங்களுக்கு முன்பு இதே ஆண்டில் பிறந்த அன்னை இந்திரா காந்தி அம்மையாருக்கு கட்சியும் பிரதமர் பதவியில் இருந்த மகனுடைய மனைவி மற்றும் பேரப் பிள்ளைகள் இருந்தும் நூற்றாண்டு விழா கொண்டாடவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஆக ஒருவரை நினைத்துப் பார்த்து கொண்டாடி மகிழ பிள்ளைகளோ பதவியோ பணமோ செல்வாக்கோ கட்சியோ முக்கியம் அல்ல. மக்கள் மனதில் நீங்காத இடமும் குறையாத அன்பும் மதிப்பும் பெறுவதே முக்கியம் என்பதை வாழ்ந்து காட்டி நிரூபித்தவர் எம்.ஜி.ஆர்.



ஆசிரியர் அவர்களின் நூல்கள்

